கோகுலம்

GOKULAM

அக்டோபர் 83 ரூ 2/-





கு.காமராஜ்

நினைவுநாள் அக்டோபர்-2



கோகுலம்

மலர்—1 இதழ்—9

1983 அக்டோபர் மாத இதழ்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

உங்கள் விருப்பத்தை இந்த இதழில் நிறைவேற்றியிருக்கிறோம். இதுகுறித்து மிகுந்த மகிழ்ச்சியும் அடைகிறோம்.

தேசத் தந்தையின் திருவுருவப் படத்துடன், அவர் பிறந்தநாளில் பிறந்த நம் முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் படத்தையும், அந்த நாளில் மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் படத்தையும் இந்த இதழில் காணலாம்.

காந்திஜி பிறந்த நாட்டில் பிறந்த நாமெல்லாம் பாக்கியசாலிகள். காந்திஜி பிறந்த நாளில் பிறந்தவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள்! அந்த நன்னாளில், பொன்னாளில் பிறந்த சிறுவர் சிறுமியரின் புகைப்படங்களையும் இந்த இதழில் காணலாம். அவர்களுக்கெல்லாம் நமது மனமார்ந்த வாழ்த்துக்கள். காந்திஜி பிறந்த நாளை நாம் ஒவ்வொருவரும் சிறப்பாகக் கொண்டாடுவோம். அவர் காட்டிய வழிகளில் செல்ல உறுதி எடுத்துக் கொள்வோம்.


இதேபோல், நேரு மாமா பிறந்த நவம்பர் 14–ஆம் தேதி பிறந்த சிறுவர் சிறுமியர் பலர் இருக்கலாம். அந்த நாளில் பிறந்த 15 வயதுக்கு உட்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தனது (பாஸ்போர்ட் அளவு) புகைப்படத்துடன், பெயர், முகவரி, பிறந்த ஆண்டு மூன்றையும் எழுதி அனுப்பினால் மகிழ்ச்சியுடன் வெளியிடுவோம்.

நவராத்திரி விழா நெருங்கி வருகிறது. பல வீடுகளில் பொம்மைகள் கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கண்டுகளிக்கலாம்; உங்களுக்கெல்லாம் கொண்டாட்டம்தான்!

- அழ. வஃள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/-

ஆண்டுச் சந்தா ரூ. 24/-



மினி மினிக் கதைகள்



முயல்கள் செய்த முடிவு?

காட்டில் இருந்த முயல்களெல்லாம் ஒன்றுகூடின.

''நம்மை மனிதர்கள் வேட்டையாடுகிறார்கள். சிங்கம், புலி, கழுகு போன்றவைகளும் நம்மைத் தேடிப் பிடித்துக் கொல்லப் பார்க்கின்றன. ஒவ்வொரு விநாடியும் பயந்து கொண்டே வாழ வேண்டியிருக்கிறது. இதைவிட இறப்பதே மேல்'' என்றது ஒரு முயல்.

''அதுதான் சரி. நாம் எல்லோரும் ஏரியில் குதித்து உயிரை விடுவோம்'' என்றது மற்றொரு முயல்.

அப்படியே எல்லா முயல்களும் ஏரியை நெருங்கும் போது, கரையிலிருந்த சில தவளைகள் அவைகளைப் பார்த்துப் பயந்துபோய், ஏரியில் குதித்தன.

அதைப் பார்த்த ஒரு முயல், மற்ற முயல்களைப் பார்த்து, ''நில்லுங்கள்; குதிக்காதீர்கள், நண்பர்களே. பிறருக்குப் பயந்து நாம் சாக வந்தோம். நம்மைக் கண்டு இந்தத் தவளைகள் பயப்படுகின்றனவே! இந்தத் தவளைகளைக் காட்டிலும் நாம் எவ்வளவோ, மேல். வாருங்கள்; திரும்பிப் போகலாம்'' என்றது.

உடனே எல்லா முயல்களும், வந்த வழியே திரும்பின.

அணிலின் ஆனந்தம்

'கீச், கீச்' என்று ஆனந்தமாகக் கத்திக்கொண்டே ஓர் அணில் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்தது. ஒரு மரக்கிளையிலிருந்து அடுத்த கிளைக்குத் தாவும் போது அது தவறிக் கீழே தூங்கிக் கொண்டிருந்த ஓநாயின் மீது விழுந்து விட்டது. உடனே ஓநாய் எழுந்து 'லபக்' என்று அணிலைப் பிடித்துத் தின்னப் பார்த்தது.

''ஐயா, தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சியது அணில்.

''விட்டு விடுகிறேன். ஆனால், எனக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டும். நாள் முழுவதும் எனக்கு ஒரே அலுப்பாயிருக்கிறது. பொழுது போகவில்லை. ஆனால், நீ மட்டும் எப்படி ஆனந்தமாக ஆடிப் பாடித் திரிகிறாய்?''

''அதுவா? சொல்கிறேன். ஆனால், உங்கள் கையில் இருந்துகொண்டு பேசுவதற்குப் பயமாயிருக்கிறது. என்னை விட்டுவிடுங்கள். இதோ இந்த மரக் கிளையில் இருந்து கொண்டு விவரம் சொல்கிறேன்''.

''சரி'' என்று கூறி, அணிலை விட்டுவிட்டது ஓநாய்.





அணில் பக்கத்திலிருந்த மரக்கிளையில் இருந்து கொண்டு, ''நான் யாருக்கும் எந்தக் கேடும் நினைப்பதில்லை; கேடு செய்வதும் இல்லை. எல்லோரிடமும் அன்பாய் இருப்பேன். அதனால், ஆனந்தமாக ஆடிப் பாடித் திரிகிறேன். நீயோ பிறரைத் துன்புறுத்துபவன். கெட்டஎண்ணம் உள்ளவர்கள் எப்படி நிம்மதியாக வாழ முடியும்?'' என்று கூறிவிட்டு மேல் கிளைக்குத் தாவி ஓடி மறைந்தது.

பணப்பை யாருக்கு?



ஒரு கிழவரும் ஒரு வாலிபனும் சாலை வழியே நடந்து சென்றார்கள். வழியிலே ஒரு பணப்பை கிடந்தது. அதை வாலிபன் ஓடிச் சென்று எடுத்தான்.

''நாம் இருவரும் சேர்ந்துதானே கண்டோம். அதனால், எனக்குப் பாதிப் பங்கு கொடு'' என்றார் கிழவர்.

''முடியாது. நான்தான் முதலில் பார்த்தேன். நான்தான் எடுத்தேன். எனக்குத்தான் சொந்தம்.''

இப்படி இருவரும் தகராறு செய்து கொண்டே செல்லும்போது, எதிரே ஒரு குதிரை வந்தது. அதில் இருந்த மனிதன், ''என் பணப் பையைத் திருடியவன் யார்?'' என்று கத்திக்கொண்டே வந்தான்.

''ஐயா பெரியவரே, நாம் இருவரும்தானே கண்டெடுத்தோம். திருடினோமா? நடந்ததைச் சொல்லுங்கள்'' என்று கெஞ்சினான் வாலிபன்.

''என்னை ஏன் உதவிக்கு அழைக்கிறாய்? இந்தப் பணப் பைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இதைப் பார்த்தது நீதான். எடுத்ததும் நீதான். வைத்திருப்பதும் நீதான்'' என்று கூறிக் கிழவர் நடந்தார்.

பேராசை கொண்ட வாலிபன், பணப் பையைத் திருடிவிட்டதாகக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.


குட்டு வெளிப்பட்டது

குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காக அம்மா சில பிளம் (PLUM) பழங்களை வாங்கி வந்து ஒரு தட்டிலே வைத்திருந்தாள்.

வன்யா அதற்கு முன் பிளம் சாப்பிட்டதில்லை. அதனால், யாரும் இல்லாத போது ஒரு பழத்தை எடுத்துத் தின்று விட்டாள்.

இரவு சாப்பிடுவதற்கு முன்பு அம்மா பழங்களை எண்ணிப் பார்த்தாள். ஒன்று குறைந்தது. அப்பாவுக்கு இது தெரிந்ததும், ''ஒரு பழம் குறைகிறதே! யார் எடுத்தது?'' என்று கேட்டார் அவர்.

''நான் எடுக்கவில்லை'' ''நான் எடுக்கவில்லை''





என்றார்கள் எல்லோரும். வன்யாவும் அப்படியே சொன்னான்.

''யார் எடுத்திருந்தாலும் சரி. எடுத்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், பிளம் பழத்திற்குள் ஒரு சிறு கல் இருக்கும். அதை எடுத்து எறியாமல் தின்றால், மறுநாள் செத்துப்போவார்கள்'' என்றார் அப்பா. உண்மையை வரவழைக்கவே அவர் அப்படிச் சொன்னார்.

''நான் கல்லை எடுத்து எறிந்து விட்டுத்தான் தின்றேன்'' என்றான் வன்யா.

குட்டு வெளிப்பட்டது! எல்லாரும் சிரித்தார்கள்.

முறுக்கு வளையம்

ஒருவனுக்கு மிகவும் பசியாக இருந்தது. பையிலே பணம் இருந்தும், ஒரே ஒரு முறுக்கை விலைக்கு வாங்கித் தின்றான். பசி தீரவில்லை. சிறிது நேரம் ஆனது. ஒவ்வொன்றாக மேலும் இரண்டு முறுக்குகளை வாங்கித் தின்றான். அப்போதும், பசி தீர்ந்த பாடில்லை. சற்று நேரம் சென்று, ஒரு வளையத்தில் மாட்டியிருந்த ஒரு டஜன் முறுக்குகளை வாங்கித்தின்றதும் பசிதீர்ந்துவிட்டது!

''நான் ஒரு முட்டாள்! ஆரம்பத்திலே இந்த வளையத்தை வாங்கி முறுக்குகளைத் தின்று பசியைத் தீர்த்துக் கொண்டிருக்கலாமே! ஒவ்வொன்றாக வாங்கித் தின்று நேரத்தை வீணாக்கி விட்டேனே!'' என்று கூறி நெற்றியில் அடித்துக் கொண்டான்.

யானைக்காரனின் குழந்தைகள்


ஒரு யானைக்காரன் மீது, ஒருநாள் யானைக்குக் கோபம் வந்து விட்டது. ''குறைவாகத் தீனி கொடுத்து நிறைய வேலை வாங்குகிறானே!'' என்ற ஆத்திரத்தில் அவனைக் கீழே தள்ளிக் கால்களால் மிதித்து விட்டது. சில நாட்களில் அவன் இறந்து விட்டான்.

கணவனை இழந்த மனைவி கதறி அழுதாள். தன் மூன்று குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு யானையிடம் சென்றாள். குழந்தைகளை யானையின் காலடியில் போட்டு விட்டு, ''அப்பனைக் கொன்றாய். பிள்ளைகளையும் கொன்றுவிடு'' என்றாள்.

யானை அந்தக் குழந்தைகளைச் சிறிதுநேரம் உற்றுப் பார்த்தது. பிறகு, மூத்த பையனின் இடுப்பை, தன் துதிக்கையால் வளைத்து மெதுவாகத் தூக்கியது; பத்திரமாகத் தலையிலே வைத்துக் கொண்டது.

அன்று முதல், அந்தப் பையன் சொன்னபடி அது நடந்தது. அவன் இட்ட வேலைகளைச் செய்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றியது!

கதைக் கருத்து: டால்ஸ்டாய்





கு. முருகசாமி



தி. பட்டீராஜன்



அ. பன்னீர்செல்வம்



ஆர். அரிகோபி



மங்களம் காசிராஜன்

இந்த இதழ் எழுத்தாளர்கள்



நேரு மாமா பிறந்த நாளில் பிறந்தவர்கள்



நேரு மாமா பிறந்தது நவம்பர் 14-ம் தேதி. இந்த மாதத்தில் இந்தத் தேதியில் பிறந்த — 15 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் தங்கள் புகைப் படங்களை 10—10—83க்குள் அனுப்பி வைத்தால் நவம்பர் இதழில் வெளியிடுவோம்.

அனுப்பவேண்டியவை:

(1) பாஸ் போர்ட் அளவில் ஒரு புகைப்படம்

(2) முழு முகவரி

(3) பிறந்த ஆண்டு

—ஆசிரியர்

காந்திஜி பிறந்த



ரமேஷ்
கிழக்குத் தாம்பரம்



டி. சபரீஷ்
உதகமண்டலம்-5



மோகனா, மோகன்
(இரட்டைக் குழந்தைகள்)
மருதப்பாபுரம்



ஆர். கே. காந்திகுமார்
திருப்பூர்



வி. கிருஷ்ணமூர்த்தி
சென்னை-78



ஜெ. பாலகுமாரன்
ஜபல்பூர் (ம. பி.)



மோஹன கிருஷ்ணன்
தேரழுந்தூர்



எஸ். மணிராஜ்
மதுரை-1



எஸ். ஸ்ரீவித்யா
Proddatur



ஆர். மோகனசுந்தரம்
பம்மல், சென்னை-75



ஆர். அஜை
ஹூப்ளி-20



ஜெ. பிரதாப சிங்
மணக்காடு




எஸ். சங்கர்
சென்னை-12



எஸ். அருண்
பெங்களூர்-3



நாளில் பிறந்தவர்கள்



எம். செல்வமுருகன்
பெரிய காஞ்சிபுரம்



கவிதா ஜெயந்தி
பல்லடம்




எச். முபாரக்
இசையன்விளை





டி. விஜயகிரி
ராசிபுரம்



ஜெ. ரேவதி
திருவையாறு



கே. சீனுவாசன்
வேலூர் (வ.ஆ.)



எஸ். முகம்மது
தாஜுதீன்
ஆடுதுறை



பி. விஜய்காந்தி
சேலம்-1



கே. எஸ். ஷர்மிலி
சென்னை-44



எம். மஞ்சு
சென்னை-86



க. ராஜமோகன்
இருட்டுப்பள்ளம்



இலங்கைத் தமிழர் படும் அவதியைக் கேள்விப்பட்டு மனம் உடைந்த நான், மருத்துவமனை செல்லும் நிலை ஏற்பட்டது. அங்கு கோகுலம் — செப்டம்பர் இதழைக் கண்டதும் என் நோய் பறந்துபோனதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அத்தகைய அரிய கலைக் கருவூலமாகத் திகழ்கிறது கோகுலம். அறிவையும், பண்பையும் ஒருங்கே வளர்க்கும் 'கோகுலம்' ஒவ்வொரு சிறுவன், சிறுமியின் கையிலும் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

—தணிகை உ. லகநாதன்
செயலாளர், மாணவர் மன்றம்
தலைவர், சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை.

ஆசிரியரின் பாடலைப் படித்ததன் விளைவாக 'அய்யா சாமி அழகுசாமி'யை எழுதி மகிழ்வித்த பா. ராகவனுக்குப் பாராட்டு. இளைஞர்களும் எழுதத் தூண்டுகோலாய் விளங்குகிறான்.

கு. ப. இரகுநாதன் பூவிருந்தவல்லி

கோகுலத்தில் வெளியாகும் செய்திகள் யாவும் எங்களுக்குப் பல விதத்திலும் அறிவை வளர்த்து வருகின்றன. 'கேள்வி நேரம்' பக்கத்தை அதிகப்படுத்தக் கூடாதா?

அறிவு வளர்ச்சி மன்றம், ஏர்வாடி

கோகுலம் கைக்கு வந்ததும் கவி செம் அவர்களின் 'வெற்றி வேல்!' வீரவேல்! பக்கத்தைத்தான் புரட்டுவேன்.

என். சுப்பிரமணியன் (2976) புளியங்குறிச்சி

சிலைகள் சொல்லும் கதை — வைடூரியம், அனிதா — வனிதா — மாணிக்கம், சாட்சி சொன்ன செக்குமாடு — பவழம், தேவையா, சேவையா? — வைரம், கண்ணன் கண்டு பிடித்தான் — மரகதம், ஆலிவர் ட்விஸ்ட்— முத்து, அகஸ்டீன் மாறிவிட்டான் — நீலம், முகமூடிப் பெண் — கோமேதகம், கேள்வி நேரம் — புஷ்பராகம் — ஆக செப்டம்பர் இதழ் நவரத்னமாக ஜொலிக்கிறது!

ஜெ. சந்திரசேகரன், தஞ்சை

'உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை' மூலம் பிற மொழிகளில் உள்ள சிறுவர் கதைகளைப் படிப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

எச். ஜரீனா பேகம் சென்னை-51

மின்மினிக் கதைகள் அத்தனையும் எனக்குப் பிடித்த மில்க் சாக்லேட் போல இனித்தன. இப்படி ஒவ்வொரு இதழிலும் வெளியிடுங்கள்.

கவிதா நந்தகோபால் (1657) ஈரோடு-3

ஓர் ஆசிரியையாகப் பணியாற்றும் என் மனைவி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் படத்தையும், ஒரு கவிஞன் என்ற முறையில் நான் மகா கவி பாரதியாரின் படத்தையும் சட்டம்போட்டு வீட்டிலே மாட்டிவிட்டோம். நன்றி! நன்றி!

ஆயில்யன் சீர்காழி

பத்திரிகையிலிருந்து பிறர் எழுதியதைக் காப்பியடித்து எழுதுபவர்களின் பெயர்களை வெட்ட வெளிச்சமாக்காமல், நாசுக்கான முறையில் சுட்டிக் காட்டியிருப்பது மிகவும் அருமை.

கே. ராகவன் சிவகாசி

விஞ்ஞான விளையாட்டுப் பகுதியில் வெளியான 'நகக்கு டப்பாவை' நான் செய்து பார்த்தேன். உண்மையிலே டப்...டப்... டப்பாதான்!

ஆர். மீனாட்சி வேலூர்

ஜெயசீலன் கதையில் அனிதா செயற்கை இருதயம் பொருத்தப்பட்டவள் என்று அறிந்தபோது என் இதயமே சில கணங்கள் நின்றுபோனதைப் போல உணர்ந்தேன்.

விஜயா ரங்கநாதன் டோம்பிவிலி (மகாராஷ்டிரம்)

'ஆலா' என்ற சிறிய சொல்லிற்கு இவ்வளவு ஆக்க பூர்வமான விளக்கம் இருக்கிறதா?

பிரபா லிங்கேஷ் மேலகிருஷ்ணன் புதூர்

'சிலைகள் சொல்லும் கதை' என்னைக் கண் கலங்க வைத்து விட்டது. ரொம்பவும் அற்புதம்.

ஆர். சாதனா விஜயவாடா

'சாட்சி சொன்ன செக்கு மாடு' — சின்னான் கதை பலே ஜோர். சின்னான் கதைக்காக ஒரு மாதம் காத்திருக்க வேண்டியிருக்கிறதே!

கோபி, ரமேஷ் சின்ன காஞ்சிபுரம்

'காது நீண்ட கழுதையார்' பாட்டு மிக அருமையாக இருந்தது. இந்தப் பாட்டை எழுதிய எஸ். அருணுக்கு என் நன்றி.

ச. ராஜகோபால் அறந்தாங்கி

நம் தமிழ் நாட்டில் காந்திஜி

காந்திஜி தமிழ் நாட்டிற்கு 14 தடவைகள் வந்திருக்கிறார். ஒவ்வொரு விஜயத்தின் போதும் அவர் ஒவ்வொரு விதமாகக் காட்சியளித்திருக்கிறார்.



படங்கள் உதவி : வானதி பதிப்பகம்



தமிழில் முதல் கம்ப்யூட்டர் திருவள்ளுவர்!

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் தொடராக மனிதனுக்குப் பல அரிய சாதனங்களை அளித்து வருகின்றன. அண்மைக் காலத்தில் மிகப் பெரிய புரட்சி—'கம்ப்யூட்டர்.' இதன் பாதிப்பு இல்லாத மனிதனே இன்று இல்லை. கானம் இசைக்கும் கருவியிலிருந்து, வானவெளிக் கலம்வரை எல்லாம் 'கம்ப்யூட்டர்' மயம் தான்! முதன் முதலில் தமிழில் ''திருவள்ளுவர்'' கம்ப்யூட்டர் தயாரித்து அளிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தயாரித்துக் கொடுத்த ஸ்தாபனம், புது தில்லி டி.சி.எம். டேட்டா ப்ராடக்ட்ஸ்.

பதினோரு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நிறுவனம் ஆங்கிலக் கம்ப்யூட்டர் வழங்கி, இந்தியக் கம்ப்யூட்டர் அரங்கில் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. அந்த அனுபவத்தையும் திறமையையும் பயன்படுத்தித் தமிழுக்கே உரிய தனித் தன்மையோடு தமிழ்க் கம்ப்யூட்டர் 'திருவள்ளுவரை'த் தயாரித்துள்ளது.

அரசின் பெரும்பான்மையான பணிகளைத் தமிழ்க் கம்ப்யூட்டரால் செய்வது மிக எளிது. சம்பளப் பட்டியல், பணி நியமனக் கட்டுப். தற்காலிகமாகப் பணி புரிவோரின் அன்றாடச் சம்பளப் பட்டியல் எவையாயினும் தமிழில் அச்சிடும் வசதி உண்டு. வருவாய்த் துறை, நில அளவைத் துறை, கருவூலத் துறை, அரசு இயந்திரத் தொகுப்பு நிறுவனம் அனைத்துக்கும் ஏற்றது.

பல்கலைக் கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும் தேர்வு நடத்துவதிலிருந்து மதிப்பெண்களைத் தொகுப்பது வரை எல்லாப் பணிகளையும் செய்து தருகிறது. அடித்தல், திருத்தல், தட்டச்சு செய்தல் தேவையில்லை. பட்டியலைக் கம்ப்யூட்டரே தமிழில் அச்சடித்துத் தருகிறது.


நீதி மன்ற நடவடிக்கைகள், இதர விவரங்களை உடனுக்குடன் தொகுக்க, பதிவுசெய்து பாதுகாக்க, பதிவு செய்து விவரங்களை வேறு நீதி மன்றங்களுக்கு அனுப்ப மிகவும் உகந்தது.

வீட்டு வரிப் பட்டியல், தொழில் வரி, கட்டட உரிமம், சாலை, கட்டட விவரங்கள் அனைத்தையும் வேண்டியவாறு தொகுத்து அட்டவணை செய்ய வசதியானது.


தமிழில் ''திருவள்ளுவர்'' பல அரிய சாதனைகளைத் தமிழர்களுக்குச் செய்து தரக் காத்திருக்கிறது.

திருக்குறள் புதிர்

புதிர்-7



புதிர்-8




மேலேயுள்ள இரு படங்களையும் பாருங்கள். ஒவ்வொரு படமும் உங்களுக்கு ஒரு திருக்குறளை நினைவூட்டும்.

இரு குறள்களையும் ஒரு தாளில் எழுதுங்கள். பிறகு, நீங்கள் எழுதியுள்ளது சரிதானா என்று **21**-ஆம் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

மிருகக்காட்சிசாலையில் உள்ள மிருகங்கள் ஜோக் அடித்தால் எப்படியிருக்கும்?

கற்பனை: கீழை அ. கதிர்வேல்





"சீமான் வீட்டுச் சொத்து"

"சீமா" என்ற அந்த இரண்டெழுத்துக்கு உரியவர் தமிழகம் முழுவதும் தெரிந்த பெரிய புள்ளி. வெள்ளைக்காரன் காலத்திலேயே ரொக்கமாக லட்ச ரூபாய் சொத்து வைத்திருந்தார். அது தவிர, நிலபுலன்கள், மாடுகள், வண்டிகள், ஜவுளிக் கடை, பாத்திரக் கடை, கோச்சு வண்டி, குதிரை, மாந்தோப்பு, தென்னந் தோப்பு, பலாத் தோப்பு என்று ஏராளமான தோப்புகள் இன்னும் பலவற்றுக்கும் அவர் அதிபராக இருந்தார்.

'சீமா' என்பது சொத்துக்கள் சேரச் சேர, 'சீமான்' என்றாகியது. நாளடைவில் 'சீமான்' என்ற பெயரைச் சொன்னால், அந்தப் பக்கத்துக் கிராமங்களிலெல்லாம் மிகுந்த மரியாதை கிடைக்கும். அவ்வளவு பெரிய பணக்காரராயிருந்தாலும் அவர் மிகவும் நல்ல மனிதர். பேராசை எண்ணம் கிடையாது. தான தருமங்கள் சலிக்காது செய்பவர். அவருடைய அன்னையின் பெயரில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தந்தையின் பெயரில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியெல்லாம் கட்டினார். ஏழை எளியவர்களுக்கு இலவசமாய்ப் புத்தகங்கள் வழங்கினார். அவருடைய தாய் தந்தையரின் நினைவு நாள் வரும் போதெல்லாம் சுற்று வட்டாரக் கிராம மக்களுக்கு ஏகக் குஷி. வருவோர், போவோர்க்கெல்லாம் அன்றையதினம் இலவசச் சாப்பாடு, துணி மணிகள் எல்லாம் உண்டு. ஆனால் அன்று மட்டும், அவர் யாருடனும் பேச மாட்டார். மௌன விரதம்.

இது அவருடைய காலத்துச் சங்கதி.

இப்போது சீமான் இறந்து ஆறு மாதங்களாகின்றன. ஊரில் எல்லாருக்கும் இது பெரிய ஈடு செய்ய முடியாத இழப்பு! கிராம மக்களுக்கு இது ஒரு பெரிய இடி!

பெரியவர் போனதும் குடும்பத்தைச் சீர்குலைக்க என்றே சிலர் வந்து புகுந்தனர். சீமானின் மூத்த மகன் செல்வராக,இளைய மகன் இன்பராக—இவர்கள் தான் வாரிசுகள். இரண்டு பேருக்கும் சகவாச தோஷம் சரியில்லை. நண்பர்கள் என்று யார் யாரோ புதிது புதிதாய்ச் சேர்ந்தார்கள். சொத்துப் பற்றி ஆலோசனை சொன்னார்கள். சகோதரர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, சண்டையாகி, ஒருவருக்கொருவர் பேசுவது கூடக் கிடையாது என்ற நிலை ஏற்பட்டது. சொத்துப் பிரிவினை, கோர்ட்டு — பஞ்சாயத்து என்ற அளவுக்குப் போய் நின்றது!

சின்னவனுக்குச் சினிமாப் படம் எடுக்க யாரோ யோசனை சொன்னார்கள்.

மூத்தவனுக்கு மதுபான விநியோகம் எடுக்க யோசனை சொன்னார்கள்.

"கேட்பார் பேச்சுக் கேட்டுத் தன் பிள்ளைகள் சுயபுத்தி, சுய கௌரவம், குடும்ப கௌரவம் எல்லாம் விட்டு விட்டார்களே!" என்று சீமானின் மனைவி ஞானம்மாள் மிகவும் கவலை கொண்டாள். நாளுக்கு நாள் துரும்பாக இளைத்தாள். பிள்ளைகளைச் சாந்தப்படுத்தி அவர்களை நல் வழிக்குக் கொண்டுவர அவளுக்குச் சாத்தியப்படவில்லை. பெரியவரை — கணவனை— இழந்த துக்கத்தோடு பாகப் பிரிவினைப் போராட்டம் மேலும் ஒரு பேரிடியாய் இருந்தது.

பஞ்சாயத்தாரிடம் தனிப்பட்டமுறையில் ஞானம்மாள் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். சீமானின் உதவியாலேயே வளர்ந்தவர்களல்லவா பஞ்சாயத்தார்கள்? அவர்களுக்கும் இது ஒரு பெரிய சவாலாக அமைந்தது.

பஞ்சாயத்து கூடியது. பதினைந்து தினங்கள் வழக்கு நடந்தது. சொத்துக்களைச் சரி சமமாகப் பங்கிட வேண்டும் என்பது சின்னவனின் வாதம். 'எந்தக் காரணத்தைக் கொண்டும் சொத்துக்களை விற்கக் கூடாது. தன் காலத்துக்

குப் பின்னால்தான் பிரிவினையே செய்யலாம்' என்பது அன்னையின் வாதம்.

சொத்துக்களை மூன்று பங்காக்கி, பெற்றவளுக்கு ஒரு பங்கும் இரண்டு பிள்ளைகளுக்கு இரண்டு பங்குமாகப் பங்கிட ஒரு சாரார் யோசனை சொன்னார்கள்.

''இரண்டு பங்குதான் ஆக்கலாம். பெற்ற தாய் தன் இரண்டு மகன்களிடமும் மாற்றி மாற்றி இருந்து கொள்ளலாம்'' என்பது சின்னவனின்— அவன் கூட்டாளிகளின் யோசனை.

இரண்டு சம பாகமாக்கிப் பிரித்துக் கொண்டு, பெற்ற தாய் என்பதனால் கடமைக்காக மாதா மாதம் ஜீவனத்துக்காகக் கொஞ்சம் பணம் தருவதாய்ப் பெரியவன் — அவன் சகாக்களின் வாதம்.

நாட்டாண்மைக்காரர் பெரிதும் வேதனைப்பட்டார். பெயர் எடுத்த குடும்பம் இப்படிச் சீரழிகிறதே என்று பெரிதும் கவலை கொண்டார். தீர்மானத்தைப் பிறகு சொல்வதாய் ஒத்தி வைத்தார். அன்றிரவு சின்னானை அழைத்து வந்தார். விவரங்களையெல்லாம் சொன்னார்.

துள்ளிக் குதித்தான் சின்னான். ''அண்ணன் தம்பிங்க, அப்பா விட்டுப் போன



சொத்தைச் சரி சமமாய் இரண்டு பாகமாய்த்தானே பிரிக்கச் சொல்றானுக?''

''ஆமாம்'' என்றார் நாட்டாண்மை.

''அப்போ தீர்ப்புச் சொல்றது ரொம்பச் சுலபம். நாளைக்கு எல்லோரையும் வரச் சொல்லிப் பஞ்சாயத்தைக் கூட்டுங்க.''

நாட்டாண்மைக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. ''ஊரே இந்த வழக்கு விவகாரமா அதிர்ந்து கெடக்கு. இந்தச் சின்னான் தீர்ப்புச் சொல்றது சுலபம் என்கிறானே!'' என்று நினைத்தார்.

மறு நாள்—

பெற்றவள் ஒருபுறம், சகோதரர்கள் இருவரும் எதிர் எதிரே. அவர்களுக்கு மதிகெட்ட யோசனையைச் சொல்லிப் பணம் பறிக்கும் கயவர்கள் கூட்டம். இப்படிப் பெரும் திரளாக இருந்தது பஞ்சாயத்தில்.

சின்னான் நாட்டாண்மையாரை விசாரித்தான். சகோதரர்களை விசாரித்தான். அவர்களைப் பெற்ற தாய் ஞானம்மாளை விசாரித்தான்.

ஒரு புதிர் போட்டான்.

''சகோதரர்களின் யோசனைப்படி சொத்துக்களை ஒரு ஆணிகூட விடாமல் பிரித்துத் தரப் போறோம். ஆனால்,



குழந்தைகளை வைத்தே குழந்தைகளுக்காகவே பாரதி படம் எடுப்பதன் நோக்கம் என்ன என்பதை அவர் விளக்குகிறார்:—

நான் செய்வது வியாபாரம் அல்ல. லாபநோக்கல்ல. நான் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனோ... புகழுக்காகவோ செய்யவில்லை. இது ஒரு ஆத்ம திருப்திக்காக- எதிர்காலச் சந்ததிகளை நல்வழிப் படுத்தி — அவர்களுக்கு நமது தேசத்தின் பாரம்பரியத்தை —பண்பாடுகளை— அறியச் செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் என்கிறார் அவர்.

முப்பத்து எட்டுப் பாடல்களை — மணியான குரலில் — ஆங்காங்கே அளவுக் கேற்ப தேவைக்கேற்பப் புகுத்தியிருக்கிறார்.

ஐந்து பாடல்களை விஜய் —சித்தர் என்ற இளைஞர்கள் — ஆம் — குழந்தைகளுக்காக-குழந்தைகளாலேயே இயக்கப்பட்ட திரைப்படம் அல்லவா? — இளைஞர்களே இசையமைத்து வழங்குகிறார்கள்.

இந்த மாபெரும் காரியத்தை — அமரகவியின் வாழ்க்கை வரலாற்றை— பாரதி நூற்றாண்டுவிழா நினைவு நாளன்று 12.12.82 அன்று 'பாஞ்சாலிசபதம்' புகழ் திரைப்பட நடிகர் எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் துவக்கிவைத்து இருக்கிறார்கள்.

இதுவரை பலமுறை நாடக வடிவில் மேடையேறி வெற்றி கண்டுள்ள ''அமரகவி பாரதியார்'' — திரைப்படமாக வெளிவரும் நாளை அவர் எண்ணிக்கொண்டு ஆவலாய் இருக்கிறார்.



டி. எஸ். வி. சர்மா

இந்த நாடகம் தொலைக்காட்சியில் போடப்பட்டுப் பெரும் பாராட்டைப் பெற்றது. பல பத்திரிகைகளும் பாராட்டியுள்ளன.

அவர் முயற்சி வெற்றியடைய, குழந்தைகளின் திறமைகளை நாம் காண — பாரதியைப் பற்றி ஒரு தெளிவான சிந்தனையை நம் தேசத்துக் குழந்தைகள் மட்டுமல்லாது உலக நாடுகளின் சிறார்களும் பெற, கோகுலம் சிறுவர் சங்கச் சார்பில் நாம் கலாலயக் குழந்தைகளை வாழ்த்துவோமா?

—எம். ஆர். ராஜன்

கதை நிகழ்ச்சி



உங்களுக்குக் கதை கேட்பதென்றால், மிகவும் பிடிக்கும். கதையின் மேல் உங்களுக்கு உள்ள ஆர்வத்தை அறிந்து சில சங்கத்தினர்கள் கதை சொல்லும்நிகழ்ச்சிகளை நடத்திமகிழ்ச்சியூட்டி வருகிறார்கள்.

10.9.83-ல் கோணுபட்டிலுள்ள 'கோகுலம் குழந்தை இலக்கியச் சங்கம்' இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. மலர்ந்த முகத்துடன் இருக்கும் அந்தச்சங்க குழந்தைகளையும், அதன் அமைப்பாளர் பால நடராஜனையும், 'கோகுலம்' கௌரவ ஆசிரியருடன் காணலாம்.



தாத்தாவின் கடிகாரம்!

பாலுவுக்கு அன்று பள்ளி விடுமுறை. தன் அரட்டையினால் வீட்டையே இரண்டு படுத்திக் கொண்டிருந்தான்.

குதிப்பதும், நாற்காலியிலிருந்து மேஜைக்குத் தாவுவதும், கட்டிலின் மீதிருக்கும் படுக்கையில் குட்டிக்கரணம் போடுவதும், அந்தர் பல்டி அடிப்பதும்.... அப்பப்பா...! அவனுடைய லூட்டியைத் தாங்காமல், பாட்டி பக்கத்து வீட்டுக்குப் போய்விட்டாள்.

பாலுவின் அம்மா சமையலறையில் வேலையா யிருந்தாள். அப்பா முன் அறையில் தினசரியைப் படித்துக் கொண்டிருந்தார்.

பாலுவுக்குத் தன்னுடைய வீரதீரப் பிரதாபங்களை யாரிடமாவது கூறி விட்டால், அல்லது செய்து காட்டா விட்டால் தலையே வெடித்து விடும்-போல் இருந்தது!

கூடத்து ஊஞ்சலில் தாத்தா பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையைப் படித்துக் கொண்டிருந்தார்.

பாலு 'ஜிவ்' வென்று ஊஞ்சலுக்குத் தாவினான். அவனுடைய பாய்ச்சலுக்குத் தாளாமல் ஊஞ்சல் முன்னும் பின்னும் ஆடியது. தாத்தா நிலை குலைந்துபோய்ப் பாலுவைப் பார்த்தார்.

''டேய், பாலு கண்ணு! சமர்த்தா தெருவில்போய் விளையாடுடா கண்ணு!'' கைகூப்பிக் கெஞ்சாத குறையாகப் பாலுவிடம் வேண்டினார் தாத்தா!

பாலு மசிவானா?

''தாத்தா! நான் நேத்துப் பார்த்த சினிமாவில் ஹீரோ எப்படி 'ஜம்ப்' பண்ணுகிறார் தெரியுமா?''

'ஊய்' என்று கத்தியபடி ஊஞ்சலிலிருந்து மேஜைக்குத் தாவினான்.

தாத்தா வெலவெலத்துப் போய்விட்டார். நல்ல காலம்! பாலு அடிபடாமல் மேஜைக்குத் தாவிவிட்டான்.

வேண்டாம் என்று சொன்னால் வேண்டும் என்றே அதைச் செய்வான்! பாலுவை வெளியேற்றத் தாத்தா ஒரு யோசனை செய்தார்.

''அருமைடா பாலு! பலே, பலே! நாலு கால் பாய்ச்சலில் நீ புலிதான்! சரி, நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கோ! ஊஞ்சல் மேலே இருந்து மேஜைக்கு என்ன சாமர்த்தியமாய்த் தாவினே! ஆகா!'' என்று ஐஸ் வைத்து அவனை அப்புறப்படுத்த முயன்றார்.

ஆர். அரிகோபி

தாத்தாவின் பாராட்டுதல் அவனுக்கு மேலும் குஷியைக் கிளப்பியது!

தாத்தாவிடமிருந்து மேலும் பாராட்டுதல்கள் பெற என்ன வித்தை செய்யலாம் என்று நாலாபுறமும் கண்களால் துழாவினான்.

மாடத்திலிருந்த தாத்தாவின் டைம் பீஸ் கடிகாரம் அவன் கண்ணில் பட்டு விட்டது.

''தாத்தா! அந்த ஹீரோயின் தன்னுடைய டைம்பீஸுக்கு எப்படி ஸ்டைலாச் சாவி கொடுக்கிறான் தெரியுமா?''

தாத்தாவுக்குப் 'பகீ'ரென்றது!

''டேய், டேய்! அதைத் தொடாதே! காலையிலேயே நான் சாவி கொடுத்துட்டேன்!'' தாத்தாவின் அலறலை அவன் அலட்சியம் செய்துவிட்டுக் கடிகாரத்தைக் கையில் எடுத்தான்!

தன்னை சினிமா ஹீரோயினாகப்பாவித்துக்கொண்டு அதே ஸ்டைலில் அதற்குச் சாவி கொடுத்தான்! தாத்தா காலையில் நன்றாகச் சாவி கொடுத்திருந்ததால் சாவி திருக மறுத்தது. பாலு பிடிவாதமாக அதன் குரல் வளையைத் திருக, அது அவன் கையிலிருந்து நழுவி, தரை மீது, விட்டத்தைப் பார்த்தபடி விழுந்தது!


தாத்தாவுக்கு இதயமே நின்றுவிடும் போல் ஆகிவிட்டது!

(தாத்தாவின் கடிகாரத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை அவசர அவசரமாகக் கூற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்!)

தாத்தா பொதுப் பரீட்சைக்கு விடியற்காலையில் எழுந்து படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவருடைய தாத்தா ஐம்பத்தைந்து வருடங்களுக்கு முன் வாங்கித் தந்தது அந்தக் கடிகாரம்!

தாத்தா தம் உயிரைப் போல் அன்று முதல் இன்றுவரை பாதுகாத்து வருகிறார் இந்தக் கடிகாரத்தை! தினமும் காலையில் எழுந்தவுடன் தம் கைப்பட அதற்குச் சாவி கொடுத்து, தூசிகளைத் துடைத்து, மாடத்தில் வைப்பார். அவரைத் தவிர வேறு யாருக்கும் அதைத் தொடுவதற்கு அனுமதி கொடுத்ததே இல்லை அவர்! இதுவரை ரிப்பேர் என்று கடிகாரக் கடை வாசலை அது மிதித்ததில்லை! இப்படி உயிருக்குயிராய்ப் பாதுகாத்து வந்த அந்தக் கடிகாரம் இன்று அனாதை போலத் தரையில் விழுந்து கிடந்தது!

தாத்தா ஓடிச்சென்று அதைக் கையிலெடுத்தார். கண்ணாடி, மேல் நோக்



யெவாறு விழலே. அதன் கண்ணாடியில் ஒரு கீறல் கூட விழவில்லே! கடி காரத்தின் நாடியைக் காதில் வைத்துப் பார்த்தார். எந்தவித ஓசையும் இல்லே! இரண்டு முறை குலுக்கிப் பார்த்தார். ஊஹூம்! பிரயோஜனமில்லே.

தாத்தாவுக்குத் துக்கம் பொங்கியது. கூடவே ஆத்திரமும் பொங்கியது.

''கடங்காரப் பாவி! என்னோட உயி ரையெடுத்திட்டியேடா!...உன்னே...'' என்றவாறு கையை ஓங்கினார். அடுத்த வினாடி பாலு மாயமாய் ஓடிவிட்டிருந் தான்.

''ராமநாதா!'' என்று கர்ஜித்தார் தாத்தா.

திடுக்கிட்டுத் திரும்பினார் ராம நாதன் — பாலுவின் அப்பா.

கண்ணகி நீதி கேட்டுக் கையில் காற் சிலம்புடன் நிற்பதைப் போல் கடிகார மும் கையுமாகத் தாத்தா முன் அறை வாயிற்படியில் நின்றிருந்தார்!

கையிலிருந்த் தினசரியை மேஜை மீது வைத்துவிட்டு ராமநாதன் எழுந் தார்.

''என்னப்பா? என்ன விஷயம்?'' என்று பணிவோடு கேட்டார்.

''உன் புத்திரசிகாமணி பாலு என் கடிகாரத்தைக் கீழே போட்டுட்டான்! இப்ப ஓடவில்லே. நீ போய் ரிப்பேர் செய்துண்டு—வா!''

''அடடா! இப்போ வெய்யில் வேளே. சாயங்காலம் போய்ச் சரி செய்துட்டு வந்துடறேன் அப்பா!''


''டேய் ராமநாதா! எனக்கு அதெல் லாம் தெரியாது! நீ உடனே போய் இதை ரிப்பேர் செய்துண்டு வா! கடி காரம் சரியாஓடறவரைக்கும் எனக்குக் கையும் ஓடாது. காலும் ஓடாது. போ.. போ... நாழியாறது!''

தந்தையின் சொல்லேத் தட்ட முடிய வில்லே. பாலுவை மனத்துள் அர்ச் சித்தவாறு புறப்பட்டார்.

தாத்தா சோகமே வடிவாய் ஊஞ் சலின் மீது அமர்ந்திருந்தார். செய்தி கேள்விப்பட்டுப் பாட்டி ஓடி வந்தாள்.

தாத்தாவின் சோகத் தோற்றத்தைப் பார்த்ததும், பாட்டிக்குப் பாலுவின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''எங்கே அவன்? கட்டையிலே போற வன்! நான் அப்பவே நினேச்சேன்! இப் படி ஏதாவது நடக்கும்னு! ஏன்னு...! அந்தக் கடிகாரத்தை வாங்கி ஐம்பது





வருஷம் ஆகியிருக்குமா? இருக்கும், இருக்கும்! உங்க தாத்தா வாங்கிக் கொடுத்ததாச் சொல்வீங்களே! என்ன கம்பீரமா அந்த மாடத்திலே அது இருக்கும்! இன்னிக்கெல்லாம் பார்த்துக்கிட்டே இருக்கலாம்! ஹூம்! கடன்காரன் பாலு அதைப் போட்டு உடைச்சுட்டான்! அப்பக் கூட அந்தக் கண்ணாடி உடையலே! அவ்வளவு கெட்டி! ஒரு தடவை கூட சளி, ஜுரம்னு வந்திருக்குமா? சும்மா அதையே நினைக்காதீங்கோ!'' என்று பாட்டி புலம்பித் தீர்த்தாள்.

தாத்தா, பாட்டிக்குத் தெரியாமல் ஒரு முறை கண்களைத் துடைத்துக் கொண்டார். தாத்தாவுக்குத் துக்கம் துக்கமாக வந்தது! யாரையாவது கட்டிப் பிடித்துக் கொண்டு 'ஹோ'என்று அழவேண்டும் போல இருந்தது! எதிரே பாட்டி இருந்ததால் அடக்கிக் கொண்டார்.

பாட்டி தொண தொணத்துக்கொண்டிருந்தாள்.

''என்ன! சாப்பிடலையா! எங்கே சோறு இறங்கும்? கடிகாரம் சரியா ஓடற வரை உங்களுக்குப் பசியே எடுக்காதே! எனக்குக் கூடச் சாப்பிடவே பிடிக்கலே'' என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள் பாட்டி.

தாத்தா விட்டத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார்!

• • •

பிற்பகல் மணி மூன்று!

ராமநாதன் வியர்த்து விறுவிறுத்துப் போய் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

தாத்தா ஆவலோடு கடிகாரத்தை ராமநாதன் கையிலிருந்து பிடுங்காத குறையாய் வாங்கிக்காதருகே கொண்டு போனார். அடுத்த கணம் அவருடைய முகம் சுருங்கியது.

''ஏண்டா ராமநாதா! கடிகாரம் ஓடலையே?''

''ரிப்பேர் செஞ்சாத்தானே ஓடறதுக்கு?''

''ஏன் ரிப்பேர் செய்யலே?'' — பாதி ஆத்திரமும், பாதி துக்கமுமாய்க் கேட்டார் தாத்தா!

''கடிகாரம் ரொம்பப் பழசாயிருக்காம். ரிப்பேர் செய்தால் இது தாங்காதாம். ஒரு கடைக்காரன், 'மியூஸியத்திலே யிருந்து திருடிண்டு வந்ததா'ன்னு சிரிக்கிறான். இன்னொரு கடைக்காரன் இதைப் பார்த்து மிரண்டு போயிட்டான்! அவன் வாழ்நாளில் இந்த மாதிரி மாடலைப் பார்த்ததேயில்லையாம்! இன்னொருத்தன் 'ரிப்பேர் செய்ய முடியாது. கடிகாரத்தைக் கொடுத்தா நூறு கிராம் பேரிச்சம்பழம் தர்றேன்னு சொல்றான்! இதை எடுத்துக்கிட்டுப் போனால் என்னை எல்லோரும் ஒரு மாதிரியாப் பார்க்கிறாங்க! அதனாலே பேசாமல் திரும்பி வந்துட்டேன்! அப்பா! கவலைப்படாதீங்க, வேற ஒரு புதுக் கடிகாரம் — லேட்டஸ்ட் ஃபாஷன் — வாங்கித் தர்றேன்'' என்று கூறி முடித்தார் ராமநாதன்.

புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் போல மாறிவிட்டது தாத்தாவின் முகம்!

''டேய் ராமநாதா! போதும் நிறுத்துடா! யாருக்கு வேணும் ஃபாஷன் கடிகாரம்?....''அதற்கு மேல் தாத்தாவினால் பேச முடியவில்லை. கையிலிருந்த கடிகாரத்தை மேஜை மீது வைத்துவிட்டு ஊஞ்சலில் போய் அமர்ந்து கொண்டார். கண்கள் சிவக்க, மூக்கு விடைத்து, எந்நேரமும் ஒரு பெரும் அழுகை வெடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தாத்தாவிடம் தென்பட்டன.

தாத்தா அன்று முழுவதும் சாப்பிட

வில்லை. அப்படியே ஊஞ்சலில் படுத்துத் தூங்கிவிட்டார். பாட்டி கீழே பாயில் தூங்கிக் கொண்டிருந்தாள். சுவர்க் கோழியின் சப்தத்தைத் தவிர வேறு ஓசையில்லை. தாத்தாவின் கடிகாரம் வேறு ஓசையில்லை! தாத்தாவின் கடிகாரம் மேஜை விளிம்பில் இருந்தது. பார்ப்பதற்கே பாவமாயிருந்தது! பதவி இழந்த அரசியல்வாதியைப் போல அது 'சிவனே' என்று இருந்தது!

நேரம் நடுநிசி! வீட்டிலிருந்த அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

''படீர்!''

உறங்கிக்கொண்டிருந்தவர்கள் வாரிச் சுருட்டி எழுந்தனர்.

விட்டத்தில் ஓடிய எலி ஒன்று, பேலன்ஸ் தவறி மேஜை மீது பாய்ந்து, விழுந்தடித்துக் கொண்டு ஓடியதால் கடிகாரம் மேஜை மேல் இருந்து கீழே விழுந்த சத்தம்தான் மேற்கண்ட ''படீர்!'' ஓசை!

காலையில் விழுந்ததைப் போலவே இப்பொழுதும் கூரை முகட்டைப் பார்த்தபடி விழுந்து கிடந்தது அந்தக் கடிகாரம்! கண்ணாடிக்குச் சேதமில்லை.

''என்ன? என்ன.....?''

ராமநாதன் உள் அறையிலிருந்து ஓடி வந்தார். பாலுவின் அம்மாவும் எட்டிப் பார்த்தாள். பாலு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

'எலி தட்டி விட்டிருக்கிறது! அது தான்!'' என்றபடி கடிகாரத்தைக் கையிலெடுத்தார் தாத்தா. அடுத்த கணம் பாலும் திரும்பி விட்டதைப் போல ஒரு துள்ளுத்துள்ளினார் தாத்தா.

''டேய் ராமநாதா! கடிகாரம் ஓடறது!'' என்று ஆனந்தக் கூத்தாடினார் அவர்! ராமநாதன் காதில் வைத்துப் பார்த்தார். ஆமாம்! கடிகாரம் 'டிக் டிக்!' என்று சீராக இயங்கிக்கொண்டிருந்தது! ராமநாதன் உற்சாகமாக ''ஆமாம் அப்பா! நல்ல காலம்!'' என்றார். தாத்தா வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்தார். (அவருக்கு மொத்தம் எட்டே பற்கள்தான் என்பது வேறு விஷயம்!)

முன்னை முன்னால் எடுப்பது போல், காலையில் விழுந்த அதிர்ச்சியால் நின்று விட்ட கடிகாரம், அதே போல் மீண்டும் கீழே விழுந்தவுடன் ஏற்பட்ட அதிர்ச்சியால் பழையபடி ஓட ஆரம்பித்து விட்டது!

''நான் அப்பவே நினைச்சேன் கடிகாரம் எப்படியும் சரியாகிவிடும்னு!'' என்று பாட்டி தன் பங்குக்கு ஒரு தத்துவத்தை உதிர்த்தாள். எப்படியோ, தாத்தாவின் கடிகாரம் சரியானதில் தாத்தாவுக்கு மட்டுமல்லாமல் உங்களுக்கும் சந்தோஷம்தானே!

திருக்குறள் புதிர் - 7, 8

விடை

இனிய உள்வாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)

சுவையுடன் கூடிய பழம் இருக்கும்போது, யாராவது காயைப் பறித்துத் தின்பார்களா? அதேபோலத்தான், நம்மிடம் நல்ல, இனிய சொற்கள் இருக்கும்போது, தீய சொற்களைக் கூறுவதும்.

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று (1020)

உள்ளத்தில் நாணம் இல்லாதவர்கள் உலகத்தில் நடமாடுவது எதைப் போல இருக்கிறது? பொம்மலாட்டத்தில், கயிற்றால் இயக்கப் படும் மரப் பொம்மைகள் உயிர் உள்ளவை போலத் தோன்றி நம்மை மயக்குமே அதைப் போலத்தான்!

சோவியத் தேசத்துக் குட்டிக்கதைகள்

'தேவி'

நல்ல மனைவி

முன்னொரு காலத்தில் டாட்ரா மலைப் பிரதேசத்தில் ஓர் இளம் மலைவாசி வாழ்ந்து வந்தான். அவன் பார்ப்பதற்கு நன்றாக இருந்தான். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்; பணக்காரனாகவும் இருந்தான். அதனால், அவனைக் கணவனாக அடையப் பல பெண்கள் ஆசைப்பட்டார்கள்.

ஆனால் அவன், ஒரு நல்ல பெண்ணையே மனைவியாக அடைய விரும்பினான். ஆனால், ஒரு பெண்ணை நல்லவளா என்று எப்படிக் கண்டு பிடிப்பது? — அது எளிதான காரியம் அல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஆயினும், எப்படியாவது ஒரு நல்ல பெண்ணைக் கண்டுபிடித்துக் கல்யாணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தான்.

ஒருநாள் அவன் கந்தல் துணிகளை அணிந்து கொண்டான். முகம், கால், கைகளில் அழுக்குப் படியும்படி செய்து கொண்டான். இப்படிப் பிச்சைக்காரனைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு சென்றான்.

ஒரு வீட்டின் கதவை அவன் தட்டினான். ஓர் இளம் பெண் கதவைத் திறந்தாள். பிச்சைக்காரன் வேடத்திலிருந்த மலைவாசி அவளிடம், ''அம்மா! சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. ரொம்பப் பசிக்கிறது. குளிர் வேறு உடலை வாட்டுகிறது. எனக்குச் சாப்பிட உணவும் போர்த்துக் கொள்ளத் துணியும் கொடுத்தால்உனக்குரொம்பப் புண்ணியமாயிருக்கும்'' என்றான்.

அவள் அவன் மீது இரக்கப்பட்டு ரொட்டியும், வெண்ணெயும் கொடுத்தாள். அவன் அவளுக்கு நன்றி கூறி விடைபெற்றான்.

''இவள் எனக்கு ஏற்றவளல்ல'' என்று வரும் வழியிலே முடிவு செய்து விட்டான்.

அடுத்து, வேறு ஒரு வீட்டிற்குப் போனான். அந்த வீட்டிலிருந்த பெண்ணிடம், ''நானோ மிகவும் ஏழை. என்னால் நடக்க முடியவில்லை. ஒரே களைப்பாக இருக்கிறது. சாப்பிட ஏதாவது கொடுங்கள். என் ஆடையைப் பாருங்கள். ஒரே கிழிசல்! வாடைக் காற்று வேறு என்னை வாட்டி வதைக்கிறது. போர்வை ஏதாவது இருந்தால் கொடுங்களேன்'' என்று கெஞ்சினான்.

''என் அம்மா அலமாரியில் உணவுப் பண்டங்களை வைத்துப் பூட்டிச் சாவியைக் கொண்டு போய்விட்டாள். இப்போது என்னிடம் ஒரு பழைய கோட்டுத்தான் இருக்கிறது. இதை வாங்கிக் கொள்'' என்று கூறி, அவள் அப்பா அணிந்திருந்த பழைய கோட்டு ஒன்றை அவனிடம் கொடுத்தாள்.

அவளும் தனக்கு ஏற்றவளல்ல என்று அவன் தனக்குத்தானே கூறிக் கொண்டு, மூன்றாவதாக ஒரு வீட்



டிற்குச் சென்றான். அந்த வீட்டிற்குள்ளிருந்து அழகான ஒரு பெண் வந்தாள். அவளிடமும் தன் பசியைப் பற்றியும், உடையைப் பற்றியும் கூறி, உதவி அளிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டான்.

அவள் அவனைத் தலையிலிருந்து கால் வரை கூர்ந்து பார்த்தாள். அவனது கண்கள் நன்றாக இருந்தன. கைகளும், கால்களும், தோள்களும் உறுதியாக இருந்தன. எந்தக் கோளாறும் இல்லை.

உடனே அவள் மலைவாசியைப் பார்த்து, ''நான் சோம்பேறிகளுக்கு உதவுவதில்லை. உன் கைகளும், கால்களும், தோள்களும் வலுவாக இருக்கின்றன. கடவுள் உன் உடம்பிலே எந்தக் குறையும் வைக்கவில்லை. அப்படி இருக்கும்போது, ஏன் இப்படிப் பல்லைக் காட்டிப் பிச்சை எடுக்கிறாய்? நன்றாக உழைத்துப் பிழை. அப்போது பசி உன்னைப் படுத்தாது: வாடை உன்னை வதைக்காது'' என்று கூறி விட்டுப் படீரென்று கதவைச் சாத்தி விட்டு உள்ளே சென்றாள்.

இதைக் கேட்ட மலைவாசி மிகவும் மகிழ்ந்து போனான். 'ஆ! இப்படிப் பட்டவள்தான் எனக்கு மனைவியாக வரவேண்டும்' என்று தீர்மானித்தான்.

உடனே வீடு திரும்பினான். முகம், கால், கை கழுவினான்: நல்ல ஆடைகளை அணிந்து கொண்டான். அந்தப் பெண்ணைச் சந்தித்து, அவள் சம்மதத்தைப் பெறப் புறப்பட்டு விட்டான்!

தேசபக்தி யாருக்கு அதிகம்

ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு ஏராளமான நிலங்கள் இருந்தன. ஒருசமயம் அவருக்கு அவருடைய பற்களில் ஒன்று மிகவும்



தொல்லை கொடுத்தது. அந்தச் சொத்தைப்பல்லை எடுப்பதற்காக அவர், ஒரு பல்வைத்தியரை அழைத்து வரச்சொன்னார்.

பல் வைத்தியர் வந்ததும், அவரிடம் தொல்லை கொடுக்கும் பல்லைக் காட்டினார். இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது, ரஷ்ய நாட்டுத் தளபதி ஒருவர் தம் வீடு தேடி வருவதைப் பார்த்து விட்டார், பணக்காரர்.

உடனே பல் வைத்தியரிடம் ''தயவு செய்து நீங்கள் அடுத்த அறையில் இருங்கள். நான் கூப்பிடும் போது வரலாம். எடுக்க வேண்டிய பல் இதுதான். சரியாகப் பார்த்து வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

பல் வைத்தியர் பக்கத்து அறைக்குள் சென்று உட்கார்ந்திருந்தார்.

தளபதி வந்ததும் பணக்காரர் அவரை வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தார். பேச்சின் இடையே, பணக்காரர், ''ரஷ்யர்களாகிய நீங்கள் மிகவும் தேச பக்தி உடையவர்களைப் போலக் காட்டிக் கொள்கிறீர்கள். உங்களைக் காட்டிலும் போலந்துக்காரர்களாகிய எங்களுக்குத்தேசபக்தி அதிகம். என்றால் அதை நிரூபிக்க முடியும்'' என்றார்.

''எப்படி நிரூபிப்பீர்கள்?'' என்று கேட்டார் தளபதி.

''தேசபக்தியை வெளிப்படுத்த நாங்கள் எதை வேண்டுமானாலும் செய்யத் தயார். உங்களால் செய்ய முடியாததைக்கூட நான் செய்து காட்டுவேன்'' என்றார் பணக்காரர்.

''அடே, அப்படியா? எங்கே செய்து காட்டுங்கள், பார்க்கலாம்'' என்றார் தளபதி.

உடனே பணக்காரர் பல் வைத்தியரை அழைத்து வரச் சொன்னார். ''என் தேச பக்தியைக் காட்ட என் பற்களில் ஒன்றை நான் தியாகம் செய்ய விரும்புகிறேன். என் பற்களில் ஒன்றைப் பிடுங்கி விடுங்கள்'' என்று கூறினார்.

பல் வைத்தியர், அவருக்குத் தொல்லை கொடுத்த பல்லைப் பிடுங்கினார். இரத்தம் வழிந்தது. அதைக் கண்ட தளபதிக்கு ரோஷம் பிறந்து விட்டது. ''தேசபக்தியில் நான் ஒன்றும் குறைந்தவனல்ல. வைத்தியரே, ஒன்றுக்குப் பதிலாக என் இரண்டு பற்களைப் பிடுங்குங்கள்'' என்றார்.

அவ்வாறே பல் வைத்தியர் தளபதியின் இரண்டு பற்களைப் பிடுங்கி

எடுத்து விட்டார். அந்த இரு பற்களும் சொத்தைப் பற்களல்ல: நல்ல வலுவான பற்கள்!

பகைக்குக் காரணம்?

ஒரு காலத்தில் நாய்கள், பூனைகள், எலிகள் எல்லாம் நண்பர்களாகவே கூடி வாழ்ந்து வந்தன.


ஒருநாள், நாய்கள் ஒரு கட்டுத் தாளைப் பூனைகளிடம் கொடுத்து, ''இவையெல்லாம் வெறும் தாள்களல்ல! மிகவும் முக்கியமான பத்திரங்கள்! நாங்கள் வெளியூர் செல்வதால், உங்களை நம்பி இவற்றைக் கொடுத்துச் செல்கிறோம். பத்திரமாக வைத்திருங்கள். திரும்பி வந்ததும் பெற்றுக் கொள்கிறோம்'' என்றன.

பூனைகள் அந்தப் பத்திரங்களைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தன. சில நாட்கள் சென்றன. ''நாம் ஏன் இவற்றைப் பாதுகாக்க இவ்வளவு சிரமப்பட வேண்டும்? எலிகளிடம் கொடுத்து வைத்தால், அவை பத்திரமாகப் பாதுகாக்குமே! இந்த வேலைக்கு அவைதான் லாயக்கு'' என்று பூனைகள் நினைத்து எலிகளைக் கேட்டன. எலிகளும் உடனே ஒப்புக் கொண்டன.

எலிகளும் அந்தப் பத்திரங்களை மிகவும் கவனமாகவே பாதுகாத்து வந்தன. குளிர்காலம் ஆரம்பமானது. எலிகள் குளிராலும், பசியாலும் மிகவும் வாடின. அப்போது ஓர் எலி அந்தப் பத்திரத் தாள் ஒன்றின் மூலையைக் கடித்துப் பார்த்தது. அது ருசியாக இருந்தது. திரும்பத் திரும்பக் கடித்துப் பசியைத் தீர்த்துக் கொண்டது. இந்த விஷயத்தை மற்ற எலிகளுக்கும் அது சொன்னது. உடனே, எல்லா எலிகளும் பத்திரத்தின் பெரும்பகுதியைத் தின்று தீர்த்து விட்டன.

ஒருநாள், நாய்கள் பூனைகளிடம் வந்து, பத்திரங்களைத் திருப்பிக் கேட்டன. ''பத்திரங்களை நம் நண்பர்களாகிய எலிகளிடம் கொடுத்து வைத்திருக்கிறோம். அவை மிகவும் பத்திரமாக வைத்திருக்கும். வாருங்கள், அவைகளிடம் போவோம்'' என்று கூறி, நாய்களை அழைத்துக்கொண்டு, எலிகள் இருக்கும் இடத்திற்குப் பூனைகள் சென்றன.

அங்கே பத்திரங்களைக் காணோம்! பத்திரங்களுக்குப் பதிலாகச் சிறுசிறு துண்டுக் காகிதங்களே அங்கு கிடந்தன.



உடனே பூனைகளுக்கு அபாரமான கோபம் வந்து விட்டது. ''உங்களைச் சும்மா விடக் கூடாது. எங்கே கண்டாலும், உங்களை அடித்துக் கொன்று தின்போம்'' என்று கூறி எலிகளை நோக்கிப் பாய்ந்தன. எலிகள் தலை தெறிக்க ஓடின. பூனைகள், அவற்றைத் துரத்தின.

அதேசமயம், நாய்கள், ''எங்கள் பத்திரங்களை உங்களை நம்பித்தானே ஒப்படைத்தோம்? உங்களைச் சும்மா விடமாட்டோம்'' என்று கூறிப் பூனைகளைத் துரத்த ஆரம்பித்தன.

அன்று முதல் இன்று வரை, எலிகளைப் பூனைகளும், பூனைகளை நாய்களும் துரத்திக் கொண்டே இருக்கின்றன!

''சுரங்கப் பாதையை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார்?''
''பெருச்சாளி, சார்!''


—சின்னச்சாமி









காந்திஜி பெற்ற பதக்கங்கள்








வக்கீல் தொழில் செய்வதற்காகத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற காந்திஜி, மருத்துவம் சம்பந்தமான புத்தகங்களைப் படித்தார். ஓர் இலவச மருத்துவ மனையில் தினம் இரண்டு மணி நேரம் கம்பவுண்டராக ஊதியம் வாங்காமல் வேலை பார்த்தார்.

அப்போது, அங்கு போயர் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் காயம் பட்ட பலருக்கு முதல் உதவி செய்ய ஆம்புலன்ஸ் படை ஒன்றை அமைத்தார். 1100 இந்தியர்கள் அந்தப் படையில் சேர்ந்து இரவு பகல் என்று பாராமல் பணி புரிந்தார்கள். அதைப்போல் அங்கு சூலு கலகம் நடந்தபோதும், அந்தப் படை பெரும் உதவி செய்தது. காந்திஜி செய்த சேவைகளைப் பாராட்டி அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கங்களே மேலே உள்ளவை.



வியப்புக்குறி!

தி. பட்சிராஜன்

உலகைப் படைத்தவன் எவனோ? — அதனுள்
உயிர்கள் நிறைத்தவன் எவனோ?
நிலவைப் படைத்தவன் எவனோ? — ஒளியை
நிரப்பி வைத்தவன் எவனோ?

மலரைப் படைத்தவன் எவனோ? — அதனுள்
மணத்தை நிறைத்தவன் எவனோ?
மலையைப் படைத்தவன் எவனோ? — அங்கு
மரத்தை நிறைத்தவன் எவனோ?

கன்னல் படைத்தவன் எவனோ? — அதனுள்
சாறு நிறைத்தவன் எவனோ?
உன்னைப் படைத்தவன் எவனோ? — உன்னுள்
உயிரை நிறைத்தவன் எவனோ?

உள்ளம் எழுப்பும் கேள்விகளே — எண்ணில்
ஓரா யிரமாம் பிள்ளைகளே!
வளைந்த கேள்விக் குறிகளையே — பின்னால்
வகையாய் இடுவது முறையாமே!

வில்லாய் வளைந்திடும் வினாக்குறியே — அறிவு
வளர்தற் கான அறிகுறியே!
எல்லாக் கேள்விக்கும் விடையாவான் — இறைவன்
என்றும் வியப்புக் குறியாவான்!





கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்: **எஸ். சரளா**
பங்குகொள்வோர்: **ஆர். பிரீதி, ஏ. பிரின்ஸ், ஆர். கிரி.**

சரளா: தேசபக்தர் திருப்பூர்க் குமரன் பிறந்த ஊர் எது?

பிரீதி: அவர் பெயருக்கு முன்னால்தான் ஊர் இருக்கிறதே! திருப்பூர்தான்.

சரளா: இல்லை. திருப்பூரில் அவர் கொடி பிடித்துச் சென்றபோது, அடிபட்டு உயிர்த் தியாகம் செய்ததால், திருப்பூர்க் குமரன் என்கிறார்கள். ஆனால், அவர் பிறந்த ஊர் வேறு.

கிரி: எனக்குத் தெரியும். அவர் பிறந்தது... பிறந்தது, என்னவோ ஒரு மலை. தலை-மலை... இல்லை, இல்லை. தலைக்கு இன்னொரு பெயர் சொல்வார்களே, ...ம், நினைவு வந்துவிட்டது! சென்னிமலை. அவர் பிறந்தது சென்னிமலை என்ற ஊரில் தான்.

சரளா: அப்பா! எப்படியோ சரியாகச் சொல்லிவிட்டாய். சரி, 'பாரத ரத்னா' எந்த ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது?

பிரின்ஸ்: 1954—ஆம் ஆண்டிலிருந்து.

சரளா: சரியான விடை. முதல் ஆண்டிலே யார் யாருக்குப் 'பாரத ரத்னா' விருது வழங்கினார்கள்?

பிரின்ஸ்: ராஜாஜிக்கு.

சரளா: அவர் ஒருவருக்குத்தானா? இன்னும் இருவருக்கும் வழங்கப்பட்டதே, அவர்களின் பெயர்கள் தெரியுமா?

கிரி: டாக்டர் ராதாகிருஷ்ணன்.

சரளா: அதுவும் சரி, இன்னொருவர் நோபல் பரிசு பெற்றவர்... என்ன, இன்னுமா தெரியவில்லை?

பிரீதி: தெரியும், தெரியும். சர் சி. வி. ராமன்.

சரளா: எப்படியோ மூன்று பேரும் ஆளுக்கு ஒரு தலைவர் பெயரைச் சொல்லிவிட்டீர்கள். இந்தியாவிலே முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட செயற்கைக் கிரகம் எது?

பிரின்ஸ்: ஆரியபட்டா.

சரளா: கரெக்ட். இலங்கையிலே ஓர் ஆறு இருக்கிறது. அது கங்கை என்ற பெயருடன் முடியும். அதன் முழுப் பெயர் தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்).

சரளா: ஒருவருக்கும் தெரியவில்லையா? சரி, நானே சொல்லிவிடுகிறேன். அதன் பெயர் மகாவலி கங்கை. இப்போது நான் ஒரு விடுகதை போடப்போகிறேன்.
கால் உண்டு; நடக்க மாட்டான்.
கை உண்டு; மடக்க மாட்டான்.
முதுகு உண்டு; வளைக்க மாட்டான்.
அவன் யார்?

கிரி: சட்டை.

சரளா: சட்டைக்குக் கால் உண்டா?

பிரீதி: நான் சொல்கிறேன். நாற்காலி!

சரளா: பிரீதி சரியாகச் சொல்லி விட்டாள். சோவியத் ரஷ்யாவின் தந்தை என்று போற்றப்படுகிறவர் லெனின் என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு அவருடைய பெற்றோர் இட்ட பெயர் தெரியுமா?

கிரி: எனக்குத் தெரியும். முந்தாம் நாள்தான் 'லெனினின் இளமைப் பருவம்' என்ற புத்தகத்தைப் படித்தேன். விளாடிமிர் இலியச் உலியனவ்

சரளா: அடேயப்பா! நன்றாக இவ்வளவு நீளப் பெயரை நினைவு வைத்திருக்கிறாயே! ஜைன மதம், சமண மதம் இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

பிரின்ஸ்: வித்தியாசமா? இரண்டும் ஒன்றுதானே?

சரளா: அடே! பிரின்ஸ் எவ்வளவு சரியாகச் சொல்லி விட்டான்! இதோ இந்தப் படத்தைப் பாருங்கள்



இவர் யார் என்று தெரிகிறதா?

எல்லாரும்: (மௌனம்)

சரளா: இவர்தான் நம் தேச விடுதலைப் போரில் ஈடுபட்ட புரட்சி வீரர்! 24 வயதிலே ஆங்கில அரசாங்கத்தாரால் தூக்கிலிடப்பட்ட பகத்சிங்! இவருடன் இரண்டு இளைஞர்களும் தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களின் பெயர்கள் தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்)

சரளா: உங்களில் யாருக்குமே தெரியாதா? சேச்சே, நம் தேச விடுதலைக்காக உயிரைக் கொடுத்த அந்த உத்தமர்களை நாம் மறக்கலாமா? பகத்சிங்குடன் தூக்கிலிடப்பட்ட அவர்களில் ஒருவர் பெயர் சுகதேவ். மற்றொருவர் பெயர் ராஜகுரு.... நம் உடம்பின் எடையிலே எத்தனை சதவிகிதம் இரத்தம் இருக்கிறது? சொல்ல முடியுமா?

கிரி: 12—ல் ஒரு பங்கு.

சரளா: நான் சதவிகிதத்தில் கேட்டேன். பரவாயில்லை. உடம்பின் எடையில் கிட்டத்தட்ட 8 சதவிகிதம் இரத்தம் இருக்கிறது.... விதையில்லாப் பழங்கள் என்னென்ன?

பிரீதி: வாழைப்பழம்.

சரளா: சரிதான். சில வகை திராட்சை, கிச்சிலியிலும் விதை இருப்பதில்லை. இப்போது நான் ஒரு பாட்டின் ஆரம்பத்தில் உள்ள இரண்டு வரிகளைச் சொல்கிறேன். உடனே பாட்டை எழுதியவர் யார் என்று சொல்லி விட வேண்டும். எங்கே பார்க்கலாம்?
கொல்லையிலே கொய்யாப்பூ— அது
கொண்டையிலே வையாப்பூ.

பிரின்ஸ்: கவிஞர் கண்ணதாசன்.

சரளா: இல்லை.

கிரி: பாரதிதாசன்.

சரளா: சரியாக விடை சொன்னாய்... 'செவ்விந்தியர்கள்' என்கிறார்களே, அவர்களுக்கும் இந்தியர்களாகிய நமக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

பிரீதி: இல்லை.

சரளா: பிறகு ஏன் அவர்களைச் 'செவ்விந்தியர்கள்' என்று அழைக்கிறார்கள்?

பிரீதி: நான் படித்திருக்கிறேன். இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்கக் கடலிலே சென்றாரே கொலம்பஸ், அவர் அமெரிக்காவின் கரையைக் கண்டதும் அதுதான் இந்தியா என்று நினைத்து விட்டாராம்! உடனே, அங்கிருந்த பழங்குடி மக்களுக்கு 'இந்தியர்கள்' என்று பெயரும் வைத்து விட்டாராம்.

சரளா: நன்றாக, விளக்கமாகச் சொன்னாய். அதுமுதல் அந்த மக்களை 'செவ்விந்தியர்' என்றும், 'அமெரிக்க இந்தியர்கள்' என்றும் அழைத்து வருகிறார்கள்... 'கஸ்தூரி' என்ற வாசனைப் பொருள் எங்கிருந்து எப்படிக் கிடைக்கிறது?

கிரி: கஸ்தூரி மானிடமிருந்து கிடைக்கிறது.

சரளா: அதுசரி, எப்படி அதனிடமிருந்து கிடைக்கிறது என்பதற்குப் பதில் சொல்லவில்லையே?

கிரி: மானின் அடி வயிற்றுக்கு அருகிலுள்ள பகுதியிலிருந்துதான் 'கஸ்தூரி'யை எடுக்கிறார்கள்.

சரளா: ரொம்ப சரி. ஆந்தையால் மனிதருக்கு நன்மையா? தீமையா?

பிரின்ஸ்: ஆந்தையைப் பார்த்தால் துரதிர்ஷ்டம் என்கிறார்கள்.

சரளா: அதெல்லாம் தவறான கருத்து. நமக்கு ஆந்தை நன்மை செய்கிறதா? தீமை செய்கிறதா?

பிரீதி: நன்மைதான்..

சரளா: எப்படி?

பிரீதி: அது பகலெல்லாம் மரப் பொந்திலே இருந்து விட்டு, இரவிலே வெளியில் வரும். அப்போது பயிர்களை அழிக்கிற எலிகளையும் பூச்சிகளையும் பிடித்துத் தின்கிறது. ஆகையால், அது நமக்கு நன்மை தானே செய்கிறது?

சரளா: ஆம். நன்றாகச் சொன்னாய்...



இதோ இந்தப் படத்தைப் பாருங்கள் நன்றாகப் பாருங்கள்...
நமக்கு இடதுபுறம் உள்ளது மத்தியப் பிரதேசம். வலது புறம் உள்ளது மேற்கு வங்காளம். நடுவே இருக்கும் மாநிலம் எது?

எல்லாரும்: ஒரிசா.

சரளா: அடே, எல்லாரும் புவி இயலில் கெட்டிக்காரர்கள்போல் தெரிகிறதே! அடுத்த கேள்வி இராஜபாளையத்தில் பிறந்த ஒருவர் தமிழகத்தின் முதல்வராக இருந்திருக்கிறார். அவர் பெயர் தெரியுமா?

கிரி: குமாரசாமி ராஜா.

சரளா: சரியான விடை. அவர் தமது பெரிய வீட்டையே பொது மக்களுக்குக் கொடுத்துவிட்டார்! 'காந்தி கலைமன்றம்' என்ற பெயரால் இப்போது அது வழங்கப்படுகிறது. காந்திஜிக்கு மிகவும் பிரியமான பாட்டு எது தெரியுமா?

பிரீதி: 'வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே' என்று ஆரம்பமாகுமே, அந்தப் பாட்டுத்தான்.

சரளா: சரியாகச் சொன்னாய்! இந்தப் பாட்டை எழுதியவர் யாரென்று தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்).

சரளா: பதினைந்தாம் நூற்றாண்டிலே குஜராத்தில் வாழ்ந்த நரசிம்ம மேத்தா என்ற தெய்வீகக் கவிஞர் தான் இதை இயற்றினார். காந்திஜியின் உயர்ந்த கொள்கைகளெல்லாம் அந்தப் பாடலிலே இருந்ததால், காந்திஜியை அது மிகவும் கவர்ந்துவிட்டது. பொய்க்கால் குதிரையாட்டத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள்? தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கேயாவது இந்த ஆட்டம் இருக்கிறதா?

பிரீதி: டில்லியில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடந்ததாம். பத்திரிகையிலே படித்தேன்.

பிரின்ஸ்: பெங்களூரில்கூட இந்த ஆட்டம் இருக்கிறதாக என் மாமா சொன்னார்.

சரளா: தமிழ்நாட்டிலிருந்துதான் அங்கெல்லாம் போயிருக்கிறது. இந்த ஆட்டம் நம் தமிழ்நாட்டுக்கே உரியது...
...'மைதிலி' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

பிரீதி: என் சிநேகிதி ஒருத்திக்குக் கூட அந்தப் பெயர்தான்.

சரளா: நான் சொல்வது ஒரு பெண்ணின் பெயரல்ல; ஒரு மொழியின் பெயர். அது எங்கே பேசப்படுகிறது தெரியுமா?

பிரின்ஸ்: வடநாட்டிலா?

சரளா: அது ஒரு மொழி என்றே தெரியாதவர்களுக்கு அது எங்கே பேசப்படுகிறது என்று எப்படித் தெரியும்? நானே சொல்லிவிடுகிறேன். அது பீகார் மாநிலத்திலே மிதிலைப் பகுதியிலே பேசப்படுகிறது. வட இந்தியாவிலே முதல் முதலாக, பைபிளை மொழிபெயர்த்தது இந்த மைதிலி மொழியில்தானாம்!

இளமையில் இவர்கள்







◁ அன்னை சாரதா தேவி △ ரைட் சகோதரர்கள் △ லிங்கன்

சிறுவர் செய்த இயந்திரம்!

ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்த வில்பர் ரைட், ஆர்வில் ரைட் இருவரும் சிறுவராயிருந்தபோது ஆர்வில் ரைட் விளையாட்டில் அதிக அக்கறை காட்ட மாட்டார். ஆனால், வில்பர் ரைட்டிற்கு ஹாக்கி, கால்பந்து இரண்டிலும் ஆர்வம் அதிகம். மிகவும் திறமையாக விளையாடுவார்.

ஒருசமயம், அவர்கள் படித்து வந்த பள்ளிக்கு அருகிலே இராணுவத்தினர் முகாம் போட்டிருந்தார்கள். அந்த முகாமிலிருந்த இராணுவ அதிகாரிகளின் பிள்ளைகளில் சிலர் ஹாக்கி விளையாட விரும்பினார்கள். வில்பர் படிக்கும் பள்ளி மாணவர்களைத் தங்களுடன் பந்தயம் வைத்து விளையாட அழைத்தார்கள்.

வில்பரும் அவரது நண்பர்களும், ஒரு குழுவாகச் சேர்ந்து, இராணுவ அதிகாரிகளின் பிள்ளைகளுடன் ஹாக்கி விளையாடினார்கள். ஆட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. அப்போது, இராணுவச் சிறுவர்களில் ஒருவன், பந்தை ஓங்கி அடித்தான். அப்படி அவன் ஓங்கி அடித்தபோது, அவன் கையிலிருந்த ஹாக்கி மட்டை வில்பரின் வாயில் பட்டுவிட்டது!

''ஐயோ!'' என்று வாயைப்பொத்தியபடி வில்பர் அங்கேயே உட்கார்ந்து விட்டார். அவர் வாயிலிருந்து இரத்தம் குபுகுபு என்று வழிந்தது. வாயிலிருந்து இரத்தம் வழிந்ததோடல்ல: வாயிலிருந்த பற்களில் ஐந்தும் வெளியிலே வந்துவிட்டன! சிறிது நேரத்தில் வில்பேர் மயங்கி விழுந்தார்.


டாக்டர் சிகிச்சை அளித்தும், குணம் தெரியவில்லை. வாயிலே இருந்த புண் அழுகிப் போனதால், மேலும் மூன்று பற்களை எடுக்க வேண்டியதாயிற்று.

வில்பர் படுத்த படுக்கையாகப் பல நாட்கள் இருந்தார். ஆகாரம் செல்லவில்லை. சென்ற ஆகாரம் ஜீரணமாகவில்லை. இதனால், வயிற்று வலி ஏற்பட்டது. இருதயமும் பலவீனமாகியது. 'வில்பர் கடினமான வேலை எதையும் செய்யக் கூடாது' என்று டாக்டர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அப்போது வில்பரின் அப்பாவான மில்டன் ரைட் ஒரு பத்திரிகை நடத்தி வந்தார். வில்பர் கடினமான வேலை எதையும் செய்யக் கூடாது என்று சொல்லியிருந்ததால், அந்தப்பத்திரிகைப் பிரதிகளை மடிக்கும் வேலையை அவருக்கு மில்டன் ரைட் கொடுத்திருந்தார். வில்பருக்கு அந்த வேலையைச் செய்வது எளிதாகவே இருந்தது. ஆனாலும், ஒவ்வொரு தாளாக எடுத்து மடிக்கும் அந்த வேலை அவருக்குச் சிறிது கூடப் பிடிக்கவில்லை.

விருப்பமில்லாமல் வில்பர் வேலை செய்வதைக் கண்ட அவரது சகோதரர் ஆர்வில் வருந்தினார். 'இதற்கு என்ன செய்யலாம்?' என்று இருவரும் யோசித்தார்கள். தங்கள் வீட்டின் மூலையிலே கிடந்த இரும்புச் சாமான்களையும், மரங்களையும் எடுத்து வந்து ஓர் இயந்திரத்தைச் செய்தார்கள்.

அந்த இயந்திரத்தைக் காலால் இயக்க வேண்டும். அதன் உதவியால், பத்திரிகையின் பிரதிகளை மிக விரைவிலே மடித்தார் வில்பர். இரண்டு நாட்களில் செய்து முடிக்கும் வேலையை



இரண்டு மணி நேரத்தில் செய்து முடித்து விட்டது அந்த இயந்திரம்!

சிறுவர்கள் இருவரும் சேர்ந்து செய்த அந்த இயந்திரத்தைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இப்படிச் சிறு வயதிலே வில்பர் ரைட்டும், ஆர்வில் ரைட்டும் பலவித முயற்சிகளில் ஈடுபட்டதால்தான், பிற்காலத்தில் அவர்களால் ஆகாய விமானத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது!

கணவராக வரப்போகிறவரைக் கண்டு பிடித்தவள்!

ஜெயராம்பட்டியில் சாரதாமணி என்ற மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி இருந்தாள். அவள், தன் தாயாருடன் சிக்கூர் என்னும் பக்கத்துக் கிராமத்தில் நடந்த திருவிழாவைப் பார்க்கச் சென்றிருந்தாள். அந்தக் கிராமத்தில் தான் அவளுடைய பாட்டி வீடும் இருந்தது.

திருவிழாக் காட்சிகளைக் காணச் சென்ற சாரதா, கோவிலுக்குள் இங்குமங்குமாக ஓடி, ஆடிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கிருந்த ஓர் அம்மாள், சாரதாவை அருகில் அழைத்துத் தன் மடியில் உட்கார வைத்துக் கொண்டு, அவளது மழலை மொழிகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள்.


அதேசமயம், அங்கே ஒருபுறத்தில் சில ஆண் பிள்ளைகளும் சிரித்துப் பேசிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் காட்டி, ''சாரதா இவர்களிலே நீ யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்? காட்டு பார்க்கலாம்'' என்று வேடிக்கையாகக் கேட்டாள் அந்த அம்மாள்.

கல்யாணம் என்றால் என்ன என்றே அறியாத சாரதா, அங்கு ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த இருபது வயதான ஓர் இளைஞரைச் சுட்டிக்காட்டினாள். உடனே எல்லோரும் 'ஓஹோ!' என்று சிரித்தார்கள். காரணம், அவள் சுட்டிக்காட்டிய அந்த இளைஞர் ஏதோ பித்துப் பிடித்தவர் போல் இருந்தார். அவருடைய பழக்கவழக்கங்களும் விசித்திரமாக இருந்தன. அவரைப் பிடித்திருந்தது 'அருட்பித்து' என்பதை மற்றவர்கள் உணராததால், கேலியாகச் சிரித்தார்கள்.

அந்த இளைஞர் பெயர் கதாதரர். கல்கத்தா நகருக்கு அருகிலுள்ள தட்சிணேஸ்வரத்தில் காளி கோயில் அர்ச்சகராக இருந்தார். திருமணம் செய்து வைத்தால், அவருடைய மனம் மாறும் என்று அவருடைய தாயார் நினைத்தார். பெண் தேடிப் பல இடங்களுக்கும் சென்றார்கள். சென்ற இடங்கள் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு தடங்கல் ஏற்பட்டதால், அவரது தாயார் மிகவும் வேதனைப்பட்டார்.

தாயாரின் நிலைமையை அறிந்த கதாதரர், ''அம்மா, ஏன் வீணாக அங்குமிங்கும் தேடி அலைகிறீர்கள்? ஜெயராம்பட்டிக்குச் செல்லுங்கள். அங்கு இராமச்சந்திர முகோபாத்யாயர் வீட்டில் எனக்கென்றே ஒரு பெண் இருக்கிறாள்'' என்றார்.

உடனே, அவரது தாயாரும், தமையனும் அவர் சொன்னபடி ஜெயராம்பட்டிக்குச் சென்றார்கள். கல்யாணம் பேசினார்கள். விரைவிலே திருமணம் நடந்தது.



பிற்காலத்தில் அந்தக் கதாதரர் தான் இராமகிருஷ்ண பரமஹம்சராகவும், அந்தச் சாரதாதான், சாரதா தேவியாராகவும் விளங்கி, எல்லோருடைய வணக்கத்திற்கும் உரியவரானார்கள்!

லிங்கனின் அன்பு

அடிமை வியாபாரத்தை ஒழித்த அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம்

லிங்கன் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்!

அந்தக் காலத்தில் அமெரிக்காவில் மாடமாளிகைகளோ, கூடகோபுரங்களோ இல்லை. பெரும் பகுதி காடுகளாகவே இருந்தது. அதனால், அங்கு குடியேறியவர்கள் தங்கள் விருப்பம் போல் காடுகளில் இருந்த மரங்களை வெட்டிப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

லிங்கன் சிறு பையனாக இருந்த போது, அவரும், அவரது பெற்றோரும் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தார்கள். அவரது அப்பா ஒரு புதிய வீட்டைக் கட்டிக்கொள்ளத் திட்டம் போட்டார். லிங்கனும் அவர் அப்பாவும் காட்டுக்குச் சென்று மரங்களை வெட்டிக் கொண்டு வந்தார்கள். அந்த மரங்களை உபயோகித்து வீட்டைக் கட்டி முடித்தார்கள். அந்த வீடு மிகச் சிறிய வீடுதான். அதன் நீளம் 16 அடி: அகலம் 18 அடி. தரை மண் தரையாகவே இருந்தது.

அந்த வீட்டுக்கு ஒரு கதவும் ஒரு ஜன்னலுமே இருந்தன. அந்த ஜன்னலுக்குக் கண்ணாடி வாங்கி வைக்க அவர்களால் முடியவில்லை. அதனால், பன்றியின் உடம்பிலுள்ள ஒரு வகை ஜவ்வை எடுத்துச் சுத்தப்படுத்தி, அதை ஜன்னலில் பொருத்தி வைத்தார் லிங்கனின் அப்பா. கண்ணாடியைப் போலவே அதுவும் நன்றாக வெளிச்சம் கொடுத்தது. அந்த வீட்டைக் கட்டி முடிக்க அப்பாவுக்குப் பலவகையிலும் உதவினார் லிங்கன்.



லிங்கனின் குடும்பத்தாரால் தங்களுக்குச் சொந்தமாக ஒரு விளக்கை வாங்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. விளக்குக்குப் பதிலாக அவர்கள் விறகுகளைக் கொளுத்தி நெருப்பை உண்டாக்குவார்கள். நெருப்பு எரியும் வெளிச்சத்தில்தான் லிங்கன் புத்தகங்களைப் படிப்பார்.

லிங்கனின் அப்பாவுக்கு ஓரளவு தச்சவேலை தெரியும். அதனால், அவரும் லிங்கனும் சேர்ந்து காட்டிலே மரங்களை வெட்டிக் கொண்டு வந்து ஒரு மேஜையும், சில பெஞ்சுகளும் செய்தார்கள்.

இப்படி மரங்களைத் தங்களுக்குத் தேவையான போது,தேவையான அளவு வெட்டிக் கொண்டு வர, அக்காலத்து மக்களில் பலர் கோடரி வைத்திருந்தார்கள். லிங்கனும் தனது எட்டாவது வயது முதல், வாலிபப் பருவத்தை அடையும் வரையில் ஒரு கோடரியைச் சொந்தமாக வைத்திருந்தார். தொடர்ந்து அதைப் பயன்படுத்திவந்தார். அதனால், அவருடைய தோள்களும், கைகால்களும் நன்றாக வலுவடைந்திருந்தன.


லிங்கன், எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருப்பார். மிகுந்த இரக்க குணம் உடையவர்.

ஒருநாள், லிங்கனுடைய நண்பர்களில் சிலர், வழியிலே கண்ட ஓர் ஆட்டைத் துரத்திச் சென்றார்கள். அது அவர்கள் தொந்தரவு செய்வார்கள் என்பதை அறிந்து வேகமாக ஓடியது. அவர்கள் மிக வேகமாக ஓடி அதைப் பிடித்து விட்டார்கள். பிடித்ததோடு விடவில்லை. அதன் முதுகில் பெரிய கற்களைத் தூக்கி வைத்து அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது, அந்த வழியாக வந்த லிங்கன் அந்தக் காட்சியைக் கண்டார்.

உடனே அவர்கள் அருகிலேசென்று, ''வாயில்லா ஜீவனை இப்படி வாட்டி வதைக்கலாமா?உங்களில் ஒருவனை நான் இப்படித் துன்புறுத்தினால் எப்படி இருக்கும்?'' என்று கண்டித்தார். உடனே, அவர்கள் ஆட்டின் முதுகிலிருந்த கற்களை எடுத்து எறிந்து, அதற்கு விடுதலை அளித்தார்கள். லிங்கனின் அறிவுரைக்கு மட்டுமல்ல; அவருடைய திரண்ட தோள்களுக்கும் வலிமை பொருந்திய கைகளுக்கும் அவர்களால் மதிப்புக் கொடுக்காமல் இருக்க முடியுமா?



எனது பொழுதுபோக்கு -கார்ட்டூன் வரைதல்



பத்திரிகைகளில் வரும் கார்ட்டூன்களைப் பார்ப்பதில் எனக்கு அலாதிப் பிரியம். அவற்றைப் போல நாமும் ஏன் வரையக் கூடாது என்ற கேள்வி எழும்.

ஆகையால், அருகில் இருக்கும் காகிதங்களில் கிறுக்குவதே எனது பொழுதுபோக்கு. இவற்றில் சிலசமயங்களில் நம்மை அறியாமலேயே ஒரு சில உருவங்கள் வந்து விடும்! கார்ட்டூன்கள் பார்ப்பதற்குச் சுலபமாக இருக்குமே தவிர, வரைந்தால் அவ்வளவு சரியாக வராது!

கார்ட்டூன்களுக்குக் கண்களும் வாய்களும்தான் மிக முக்கியம். அவற்றைச் சரிவர வரைவதற்குப் பல யுக்திகள் தேவைப்படுகின்றன. உதாரணமாக முகத்தை ஒழுங்காக வரைந்துவிட்டு வாயை  என்று போட்டால் படம் அழுவதைப் போல் இருக்கும். ஆனால், இதையே தலைகீழாக  என்று வரைந்தால் சிரிப்பது போல் இருக்கும். கண்கள் வரைவதிலும் அதிக கவனம் தேவை. இல்லையேல் கார்ட்டூன்களுக்கு மதிப்பே இருக்காது.

படங்களை அழகாக முதலில் கறுப்பு மையில் வரைந்து விட்டு, அதற்குத் தேவையான வர்ணங்களைக் கொடுத்தால் எல்லோருடைய மனத்தையும் நன்கு கவரும்.

சில சமயங்களில் படம் அழகாக இல்லாவிட்டாலும், வர்ணம் கொடுத்தவுடன் மிக அழகாக மாறிவிடும்.

நாம் பல படங்களை வரைந்து வர்ணம் கொடுத்து ஆல்பங்களையும் தயாரிக்கலாம். இவற்றை வீட்டில் வரும் விருந்தாளிகளுக்குக் காண்பித்தால் அவர்களும் மகிழ்ந்து பாராட்டுவார்கள்.

நம்முடைய வீடுகளில் நாம் காலண்டர்களையே மாட்டத் தேவையில்லை. நாமே பல படங்களை வரைந்து சுவர்களிலும் மாட்டி வைக்கலாம்.

பொங்கல் வாழ்த்து, மற்றும் புத்தாண்டு வாழ்த்து போன்றவற்றையும் தயாரித்துப் பயன் பெறலாம்.

-ஏ. வேல்ராஜ்



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி


உறுப்பினர் எண், பெயர், முகவரி

751. எல். லட்சுமி, 2, ஐந்தாவது அவென்யூ, பெசன்ட் நகர், சென்னை--90.
752. கோ. சிதம்பரநாதன், 207, கன்னிமாரன் கோயில் தெரு, தென்காசி.
753. ஜி. கண்ணதாசன், S/o ஏ. குணசேகரன், வெண்குலம் அஞ்சல் திருச்சிமாவட்டம்.
754. வ. திருமுருகன், 68, பகவதி அம்மன் கோயில் தெரு, மேலவாசல், ஸ்ரீரங்கம்.
755. க. ஸ்ரீ. சந்திரன், 33/1, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, வடலூர்–607 303.
756. ஆர். அரவிந்தன், S/o. ஏ. ராஜாராம், பெருமாள் கோவில் தெரு, புத்தனாம்பட்டி போஸ்ட், திருச்சி மாவட்டம்.
757. சி. தமிழரசு, 4, ஆரப்பாளையம் மெயின் ரோடு, மதுரை–10.
758. கே. சத்தியநாராயணன் 7, நாலாயிரம் தெரு ..விழுப்புரம்–2.
759. என். அனிதா, 12, மாரிச் செட்டி தெரு, மந்தைவெளி, சென்னை–28.
760. பி. சதீஷ்குமார், 12, அழகேசன் ரோடு, வேதாசலநகர், செங்கை–3.
761. என். சாந்தி, 44, பரிபூரண விநாயகர் கோயில் தெரு, சென்னை–4.
762. எல். கல்யாணி, 3, தெற்கு அக்ரஹாரம், காட்டுப்புத்தூர்–621 207
763. எஸ். ரத்னகுமார், 89, பொன்னகர் மூன்றாவது கிராஸ், திருச்சி–1.
764. ந. நாராயணசாமி, C/o. பிரஹதாம்பாள், அக்ரஹாரம், கோனாபட்டு–622 503.
765. எஸ். பத்மஜா 1/32, அக்ரஹாரம், கோனாபட்டு–622 503.
766. எஸ். பிரபு, த/பெ. கே. சாமிநாதன், ஆசிரியர், அரசு நடுநிலைப்பள்ளி, அரண்வாயல்.
767. எல். ஹேமாவதி, பிளாட் எண். 6, இராம்பாரதி தெரு, மேற்கு கிருஷ்ணாபுரம், அம்பத்தூர், சென்னை–53.
768. வி. பரிமளா, 270, ரெங்க கவுண்டர் தெரு, கோவை–1.
769. பா. தமிழரசி 1036/1–டி ராஜாம்பாள் நகர் கடலூர்–1.
770. க. கிருஷ்ணராஜ் 5 சங்கரசித்தி விநாயகர் கோயில் தெரு சங்கரன்கோவில்.
771. ஜி. கே. சங்கர், S/o. கே. கோபாலகிருஷ்ணன், J.E. (N.H) மகாதானபுரம்–629 706
772. தே. கோவிந்த், டி–14, குளக்கரைத் தெரு, வட்டம் 20, நெய்வேலி–3.
773. இரா. கணேஷ், 49–ஏ, பார்த்தசாரதி தெரு, சோமசுந்தரம் காலனி, மதுரை–16.
774. என். ஆர். சங்கர், 59, அய்யங்குள அக்ரகாரம், திருவண்ணாமலை.
775. டி. மங்களதேவி, 70, கப்பன் செட்டி தெரு, தேனி–626 531.
776. செ. பிரபாகரன், எல்–98 அறிஞர் அண்ணா நகர் வீட்டு வசதி பிரிவு, கூட்டப்பள்ளி காலனி, ஆண்டிப்பாளையம்–637 211.
777. ஆர். ஸ்ரீராம், 921, வடக்கு இரண்டாம் வீதி, புதுக்கோட்டை.
778. மு. முரளிதரன், S/o. ஆர். முத்துவேலு, ஆசிரியர், ஆசிரியர் காலனி, வடசித்தூர் –641 202
779. க. பாலசுப்பிரமணியன், 423, கீழ 3–ஆம் வீதி, புதுக்கோட்டை.
780. இ. பத்மாராணி, 5–ஏ, மூக்கப்பிள்ளை சந்து, தல்லாகுளம், மதுரை–2.
781. க. கனகா, 11–ஜி, புத்தூர் பாரக்ஸ் ஈ.வே.ரா. சாலை, திருச்சி–17.
782. ஆர். கலா, 13, பி அண்ட் டி, காலனி, அழகாபுரம், சேலம்–4.
783. பி. சங்கர், S/o. பி. பழனிசாமி பி. வி. 213, போலீஸ் லைன், அரூர்–636 903.
784. ல. கணபதி சுப்பிரமணியன், 16, பெருமாள் தெற்கு ரத வீதி, திருநெல்வேலி–6.
785. கே. ரகுபதி, 17–ஏ, புதுக்கிராமம் தெரு, அம்பாசமுத்திரம், திருநெல்வேலிமாவட்டம்
786. பி. பாலசுப்பிரமணியம், S/o. ஜி. எஸ். பெரியசாமி, தமிழாசிரியர், அ. மே. பள்ளி, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்.
787. வி. எட்வின் ராஜேஷ், S/o. ஏ. விஜயராகவன், ஆசிரியர், சக்தி சுகர்ஸ் துவக்கப்பள்ளி சக்தி நகர்–638 315.
788. பா. ஸ்ரீராம், 66 தெற்கு அக்கிரஹாரம், தென் கரை, பெரியகுளம், மதுரை.
789. டி. கணேஷ்குமார் 23 காவிதக்காரத்தெரு திருவாரூர்.
790. என் ஆறுமுகம் S/o. பி. கே. சுப்பிரமணியம், வண்டிப்பட்டறை, ஈரோடு ரோடு, கவுந்தப்பாடி, பெரியார்மாவட்டம்.
791. அ. ஈஸ்வரவள்ளி, 7–2–7, வடக்கு ரத வீதி, திருப்பத்தூர்–623 211.
792. ஜெ. ஜூலியஸ் சேவியர், ஏ–64 என். ஜி. ஓ. காலனி, நாகர்கோயில்–2.
793. எம். ஜி. சண்முகவேலாயுதம், 192–ஏ, விஸ்வநாத நகர், கே. புதூர், மதுரை–7.
794. எஸ். கண்ணன், 110, மேல முதல் தெரு, மன்னார்குடி–614 001.
795. கே. பழனிவேல், 2, வரதப்ப நாயக் தெரு, சென்னை–33.
796. ஆர். ராம்ராஜ், 75, உள்தெரு, விருதுநகர்–626 001.
797. ஆர். ரவி, 110, தெற்கு சம்பந்தபுரம், ராஜபாளையம்.
798. ஆர். எம். நாச்சம்மை, ஏ–3, முன்ஷி அவென்யூ, அழகப்பாபுரம், காரைக்குடி–3.
799. எஸ். ஆன்றினி முத்துக்குமார், S/o பி. செல்வராஜ், பஞ்சாயத்து மெம்பர், அன்னக்குடி, டைலூர் போஸ்ட் வண்டிப்பெரியார் (கேரளா).
800. V. Janani, D/o. T.S. Viswanathan, 12 A/21 W.E.A Karolbagh, New Delhi-110005
801. வி. விஜேந்த்குமார், 33, விவேகானந்தபுரம் முதல் தெரு, சென்னை-33
802. பி. ஜானகி, 3, பி. எஸ். சுந்தரம் ரோடு, திருப்பூர்.
803. கே. ரங்கநாதன், பி-90, ஹிந்து காலனி, நங்கநல்லூர், சென்னை-61

804. சே. கணேசன், பி-7, வெங்கடேஸ்வரா தெரு, திருநகர், மதுரை.
805. கோ. ஸ்ரீதர், 12, கோ. தெற்கு வீதி, மன்னார்குடி-12.
806. ராஜ் சரவணன், 2692, ஏ.எல். 77, 11வது மெயின் ரோடு சென்னை-40.
807. பா. ஜான்சி ஸ்டெல்லா வீதியா, 7/4, அரண்மனைத் தெரு, போடிநாயக்கனூர், மதுரை மாவட்டம்
808. டி. பூங்குழலி, 30, முத்துகிராமணி தெரு, சென்னை-4
809. ஆர். மாலதி, 3/43, தேரடித் தெரு, கோளூர்-602101.
810. வி. ஸ்ரீராம், 29/1, சோலையப்ப முதலி தெரு, சென்னை-4.
811. டி. மனோரெபக்சா, 56, இராதாகிருஷ்ணன் ரோடு, டாட்டாபேட், கோவை-12
812. ஏ. குமாரவேல், 60-ஏ, அரசு குடியிருப்பு, சித்தரசூர் ரோடு, பாலூர்-607113.
813. ஜே. கணேஷ் பாலசுப்பிரமணியன், 26/4, குளத்துமேட்டுத் தெரு, பாண்டிச்சேரி-1
814. Mohan Vasudevan, 219, Jampettah St., Colombo-13
815. பி. பாலசுப்பிரமணியன், 66, அகஸ்தியர் தெற்கு மேட்டுத் தெரு, கல்லிடைக்குறிச்சி-627416
816. ஆர். வெங்கடாசல நம்பி, 80, தெற்கு முத்தாரம்மன் கோயில் தெரு, ஸ்ரீவை-628601
817. க. சீனிவாசன், 20, சிவபுரம், திருநெல்வேலி-1
818. ஆ. மகரபூஷணம், 1, சிவபுரம் தெரு, திருநெல்வேலி-1.
819. இ. கோகுலக் கண்ணன், கோகுலன் அங்காடி, காமய கவுண்டன்பட்டி-626521.
820. ஆர். சுதா, C/o. பி. திருமலைராஜா, கோகுலன் அங்காடி, காமயகவுண்டன்பட்டி
821. இரா. ஸ்ரீதர், 38, பெரியதனம் சுப்பராய முதலி தெரு, வேலப்பாடி, வேலூர் 632001
822. பா. ராகவன், S/o ஆர். பி. சாரதி, தலைமையாசிரியர், கேளம்பாக்கம்-603103
823. அ. மீனு, 85, ஆரோக்கியநாதர் தெரு, பொள்ளாச்சி-1
824. பி. ஜே. ராஜன், 115, புத்த நாகையா தெரு, சேலம்-1
825. ஜி. விஜயரங்கன், 49, ஹவுசிங் போர்டு காலனி, ஆலைக்குப்பம், கடலூர்-1
826. ஜெ. பாலாஜி, S/o பி. வி. ஜனார்த்தனம், பி. புளியம்பட்டி, போகலூர், 630459.
827. டி. விஸ்வநாதன், S/o எஸ். ஜே. தியாகராஜன், பி. டபிள்யூ டி. குவார்ட்டர்ஸ், துர்க்காலயா ரோடு, திருவாரூர்
828. பி. பழனிக்குமார், 3, நடுத் தெரு, சின்னமனூர்-626515.
829. கி. ஜேஸ்குமார், சின்னையா தெரு, முக்கூடல்-627601
830. எஸ். கே. அவினாசிலிங்கம், செம்புளிச்சாம்பாளையம்-638302.
831. பி. செல்லப்பாண்டியன், 124, ஆசிரியர் விடுதி, இராஜ்பவன், உதகை.
832. வி. பொன் சைலபதி, S/o பி. விஸ்வநாதன், சிவசைலம்-627412.
833. வி. ஜெயலட்சுமி, 25, பழைய போஸ்டாபீஸ் தெரு, வெங்கடபுரம், அம்பத்தூர், சென்னை-53
834. ஆர். கே. துர்கா பார்வதி, 51, பிராமணத் தெரு, ஒழுகினசேரி, நாகர்கோயில்
835. இரா. பாலாஜி, வி-5, மகாராஜ் நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மா.வ.
836. து. காந்தி, கடையாலுருட்டி, சுரண்டை (வழி 627859) நெல்லை மாவட்டம்.
837. எஸ். சேஷாத்திரி, S/o எஸ். ஸ்ரீதரன், அக்ரஹாரம், புளியரை-627813.
838. ரா. சுசீலா, D/o க. ராமச்சந்திரன், காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகம், காந்தி கிராமம், மதுரை மாவட்டம்.
839. எஸ்.எஸ். ஜெயகுமார், 47, பாபு முதலிதெரு, வேளாள தேனாம்பேட்டை, சென்னை-86
840. இரா. அம்பலவாணன், 41, அருணாசலம் செட்டியார் தெரு, செக்காலை, காரைக்குடி 2
841. பி. பாலகார்த்திகேஷ் 37, லஜபதிராய் தெரு, ராம்நகர், கோவை-9.
842. இரா. சுப்பிரமணியன், 4-ஏ, ராமசாமிக் கவுண்டர் வீதி, குப்புக் கோனார் புதூர், சாய் பாபா காலனி, கோவை-38
843. ஆர். விஜயலட்சுமி, தபால் தந்தி அலுவலர் குடியிருப்பு, சாய்பாபா காலனி, கோவை.
844. ச. சீனிவாசன், 17-பி, தேர் வீதி, கோபிச்செட்டி பாளையம்-638452.
845. நா. நரசிம்மன், 11, ஸ்டேஷன் பார்டர் ரோடு, குரோம்பேட்டை, சென்னை-44.
846. ச. பாரதி, 306, அய்யாவையா சந்து, மேல வீதி, தஞ்சை-9.
847. ம. உமா, பிளாட் எண். 45, ஜோதி நகர், 6வது தெரு, சென்னை-19.
848. வி. உமாமகேஸ்வரி, 49 அய்யங்குளத் தெரு திருவண்ணாமலை.
849. க. சுந்தர் 10 செட்டியக்குடி, கடலைக்காரத் தெரு ஸ்ரீவில்லிபுத்தூர்
850. இரா. இ. பாரி 22-பி பஜனைக் கோயில் தெரு, தொரப்பாடி, வேலூர்-2.
851. க. இ. நித்தியானந்தன், 1, நாராயணசாமி நாயுடு நகர், சிங்காநல்லூர், கோவை-5
852. பா. சசிகுமார், 24, சங்கரன் பிள்ளையார் கோவில் தெரு, வெள்ளிப்பாளையம், நாகப்பட்டினம்
853. பெ. பிரபு ஆனந்த், 56, டி. கே. மாமாந்தூர் ரோடு, கள்ளக்குறிச்சி.
854. பி. எஸ். ஆனந்தி, 18/1, வரதா ரெட்டி தெரு, திமிரி-632512.
855. கே. வி. வைத்திஸ்வரன், 30-பி, இலட்சுமிபுரம், பழனி
856. ஆர். ரமேஷ், 24-ஏ, புதுப்பேட்டை ரோடு, தெற்கு ஆறுவது தெரு, திருப்பத்தூர் (வ. ஆ.) 635.601.
857. ச. சுந்தரராஜன், 48, பாபா நகர், வில்லிவாக்கம், சென்னை-49.
858. என்.ஆர். ஆனந்த், 12, அன்னை தெரு, எம். ஜி. ஆர். நகர், சென்னை-78.
859. மு. பா. மகேந்திரகுமார், 21, 9வது குறுக்குத் தெரு, விநோபாஜி நகர், அஸ்தினாபுரம், சென்னை-64.
860. ஜி. ஏ. அகிலா, 40, அழகு பெருமாள் முதலி தெரு, பிச்சனூர், குடியாத்தம் (வ.ஆ).

(இன்னும் வரும்)

உலகம் போற்றும் உத்தமர்



'சிறந்த மனிதர் என்றே — எட்டுத்
திசையும் போற்றும் காந்தி
பிறந்தார் நமது நாட்டில்' — என்ற
பெருமை நாமும் அடைவோம்.

உண்மை, அகிம்சை இரண்டும் — அவர்
உயர்ந்த கொள்கை ஆகும்
கண்ணைப் போல அவற்றை — நாமும்
கருதிக் காத்து வருவோம்.



மாந்த ருக்குள் தெய்வம் — அவர்
வழியைப் போற்றி நடப்போம்.
காந்தி போல வாழ்வோம் — நல்ல
கருணை மனிதர் ஆவோம்.







நமது நாட்டு அரசை — இன்று
நாமே ஆளச் செய்தார்.
இமயம் போல நாட்டின் — புகழ்
என்றும் ஓங்கச் செய்வோம்.



பிசாசுமலை

கதை: நம்பி...
சித்திரம்: ஜமால்...






கோடை விடுமுறையில் மருதங்குடியிலிருந்த மாமா வீட்டிற்கு வந்திருந்த மணிவண்ணன், தன் மாமா மகன் மாதவனிடம், ''மாதவா, சிறிது தூரத்தில் ஒரு மலை இருக்கிறதே, அதில் நாளைக் காலையில் நாம் ஏறிப் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''ஐயோ! அது பிசாசுமலை!'' என்றான் மாதவன்.

''பிசாசு மலையா?''


''ஆம். அந்த மலையில் ஏறிப்போனவர்கள் யாருமே திரும்பி வந்ததில்லை. சென்ற மாதம் கூட இந்த ஊரின் கிழக்குத்தெரு கிட்டுவய்யர் மலைக்குச் சென்றார். மறுநாள் அவருடைய உயிரில்லாத உடம்பு மலை அடிவாரத்தில் கிடந்தது. பிசாசு அடித்துப் போட்டு விட்டதாம்!''





''பிசாசாவது, மண்ணாங்கட்டியாவது? சேலத்திலே பேய் இருப்பதாகச் சொன்ன ஒரு பங்களாவிலே, ராஜாஜி ஒரு வருஷம்தைரியமாகக் குடியிருந்தாராம்! உண்மையிலே பேய் என்ற ஒன்று இருந்திருந்தால், அது அவரைச் சும்மா விட்டிருக்குமா? இதெல்லாம் மூட நம்பிக்கை. நம் போன்ற இளைஞர்கள் நம்பக் கூடாது'' என்றான் மணிவண்ணன்.


மாதவனுக்குத் தைரியம் பிறந்து விட்டது. மறுநாள் அதிகாலையில் இருவரும் புறப்பட்டனர். மலை செங்குத்தாக இருந்தது. பாதையும் கரடு முரடாக இருந்தது. மரம், செடி, கொடிகளைப் பிடித்துக் கொண்டும், சிறுசிறு பாறைகளை அணைத்துக் கொண்டும் மிகுந்த சிரமப்பட்டு ஏறினார்கள். அப்பாடா! மலை உச்சிக்கு வந்து விட்டார்கள்!





மலையின் மேலிருந்தபடி சுற்றிலும் உள்ள ஊர்களைப் பார்த்தார்கள். எல்லாம் சிறு சிறு பொம்மைகள் போல் தோன்றின. கீழேயிருந்து பார்ப்பவர்களுக்கு இவர்கள் இருப்பதே தெரியாது. மரம் செடி, கொடிகள் மறைத்துக் கொண்டிருந்தன!


மணிவண்ணன் மலை உச்சியிலிருந்த ஒரு பெரிய பாறையை ஒட்டியிருந்த மரத்தில் ஏறிச் சுற்றிலும் பார்த்தான். அப்போது, அந்தப் பாறையின் மேல்புறத்தில், ஓர் ஆள் நுழையக் கூடிய அளவு ஓட்டை இருப்பது தெரிந்தது.





உடனே மாதவனை அழைத்தான். அவனையும் அந்த மரத்தில் ஏறிவரச் சொன்னான். இருவரும் பாறையின் மேல் புறத்திலிருந்த ஓட்டைவழியாக உள்ளே இறங்கினார்கள். அங்கே ஏதோ முனகல் சப்தம் கேட்டது. இருட்டிலே ஒன்றும் தெரியவில்லை.

மணிவண்ணன், சிங்கப்பூரிலுள்ள தன் பெரிய மாமா பரிசாகத் தந்த பேனாவைச் சட்டைப் பையிலிருந்து எடுத்தான். அதன் பின்புறம் இருந்த டார்ச் விளக்கைப் போட்டான். என்ன ஆச்சரியம்! மூலையிலே ஒரு சிறுவனைக் கண்டார்கள்.



அவன் வாயிலே துணிப் பந்தம் இருந்தது. கண்களும், கைகளும், கால்களும், கட்டப்பட்டிருந்தன. மணிவண்ணன் துணிப்பந்தத்தை அகற்றினான். பிறகு, மாதவனும் அவனும் சேர்ந்து கட்டுகளை அவிழ்த்தார்கள். ''தம்பி, நீ யார்?'' என்று மணிவண்ணன் கேட்டான்.




''என் பெயர் கேசவன். பள்ளம்பட்டிப் பணக்காரர் பரமசிவத்தின் மகன். நேற்று இரவு நான் தனியாகச் சென்ற போது திடீரென்று என் முகத்திலே சாக்கைப் போட்டு மூடி, இங்கே கொண்டு வந்தார்கள். தீப்பந்தத்தை ஏற்றி வைத்துக்கொண்டு சுற்றிலும் நாலு தடியர்கள் நின்றார்கள். ஒருவன் என்னிடத்திலே ஒரு தாளைத் தந்து, ''நான் சொல்வது போல் எழுது'' என்று மிரட்டினான்.



''அன்புள்ள அப்பாவுக்கு,

நான் உயிருடன் உங்களிடம் வர வேண்டுமானால் ஒரு பெட்டியில், ரூபாய் பத்தாயிரத்தை வைத்து, நம் ஊர் மாரியம்மன் கோயில் பின்புறமுள்ள ஆலமரத்தடியில் நாளை மறுநாள் இரவு 8 மணிக்கு வையுங்கள். வெளியே சொன்னால், உங்கள் உயிருக்கு ஆபத்து!'' என்று எழுதிக் கையெழுத்துப் போடச் சொன்னார்கள். எழுதிக் கொடுத்தேன்.



''பிறகு எனக்குச் சாப்பாடு போட்டு, என்னைக் கட்டிப் போட்டார்கள். இரவு நான் நன்றாகத் தூங்கி விட்டதாக நினைத்து, அவர்கள் பேசிக் கொண்டதை உற்றுக் கேட்டேன். அவர்கள் நால்வரும் சிறிது தூரத்தில் உள்ள சின்னாரம்பட்டி மிராசுதார் வீட்டில் கொள்ளையடிக்க நடுச்சாமத்திற்குப் பிறகு புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். இன்று இரவுதான் திரும்புவார்களாம்!'' என்றான் கேசவன்.





மூவரும் குகையைச் சுற்றிப் பார்த்தார்கள். ஓர் இடத்தில் ஒரு பாறுங் கல் இருந்தது. அது மிகவும் கனமாக இருந்தது. மூவரும் சேர்ந்து நகர்த்தினார்கள். உள்ளே ஏராளமான பெட்டிகள்! பெட்டிகள் நிறைய வெள்ளி தங்க, வைர நகைகள்! கற்றை கற்றையாகக் கரன்சி நோட்டுகள்!


மூவரும் உடனே குகையிலிருந்து வெளியேறினார்கள். மலையிலிருந்து விரைவாகக் கீழே இறங்கி வந்தார்கள். நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நடந்ததைக் கூறினார்கள். உடனே போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளுடன் சென்று, குகையருகே ஒளிந்திருந்து, திருடர்கள் நால்வரையும் திரும்பி வரும்போது பிடித்து விலங்கு மாட்டினார்கள்.





''மலையேறி வந்தவர்களையெல்லாம் கொலை செய்தது நீங்கள்தானே? உங்கள் தொழிலைத் தடையில்லாமல் நடத்த, மலையில் பேய், பிசாசு இருப்பதாகக் கதை கட்டிவிட்டு, அங்கே யாரும் வராதபடி செய்ததும் நீங்கள்தானே?'' என்று மணிவண்ணன் கேட்டான். திருடர் தலைவன் ''ஆம்'' என்றான்.

பணக்காரப் பரமசிவத்துக்குப் பணைச் செலவில்லாமலே பிள்ளை கிடைத்தான். ஊர் மக்களுக்குப் பேய், பிசாசு பயம் நீங்கித் தைரியம் பிறந்தது. மணிவண்ணனுக்கும் மாதுவுக்கும் பாராட்டும், பரிசுகளும் கிடைத்தன என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமா?



சுந்தர் பிக்னிக் போகிறான்

மங்களம் காசிராஜன்

பக்கத்து வீட்டுப் பரமனும் என் பிள்ளை வாசுவும் ஒரே பள்ளியில் தான் படிக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் சுந்தர் ரொம்ப அத்யந்த நண்பன்.

சுந்தர் படிப்பில் மகா கெட்டிக்காரன். பழகுவதற்கும் ரொம்ப நல்லவன். நாகரிகமாக உடை அணிவதிலும் அவனுக்கு நிகர் அவன்தான்.

ஒருநாள் திடீரென்று ''ஹலோ வாசு? எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டபடி குதித்துக்கொண்டு வந்து நின்றான் சுந்தர்.

சுந்தர் சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று வந்து நின்றால் ஏதாவது காரணமாயிருக்கும். இத்தனை நாளும் மூடிக்கிடந்த அவர்களது பள்ளி திறக்கப்படும் நாள் சூசகமாகத் தெரியவே, அதை மகிழ்ச்சியுடன் தன் நண்பனாகிய என் பிள்ளை வாசுவுடன் பகிர்ந்து கொள்ளவே வந்திருந்தான்.

வந்தவனை வரவேற்பறையில் உட்கார வைத்துவிட்டு, என் பையன் என்னிடம் வந்தான். என் காதோடு காதாக, ''அம்மா! சுந்தருக்கு ஆம்லெட்டுன்னா ரொம்ப உயிர். அதனாலே சூடா ரெண்டு ஆம்லெட் போட்டுக் கொண்டாங்க'' என்றான்.

''வாசு! இன்றைக்கு என்ன நாளுங்கிறதுகூட உனக்கு ஞாபகமில்லையாக்கும்! இன்றைக்குச் செவ்வாய்க் கிழமை. நம் வீட்டிலே இன்றைக்கு அசைவம் பண்ண மாட்டோம். சூடா உருளைக்கிழங்கு பஜ்ஜி பண்ணிக் கொண்டு வரேன்'' என்றேன்.

வந்ததே கோபம் என் பையனுக்கு! ''போங்கம்மா, நீங்க ஒண்ணு. ஆறனைப் பட்ட சிவபெருமானே கண்ணப்ப நாயனார் தன் வாயினால் சுவைத்துப் பார்த்துப் படைத்த மாமிசத்தை நிவேதனமாக ஏற்றுக் கொண்டு, அவருக்கு அருள் புரிந்தார். நீங்க என்னடான்னா அசைவம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற நம் வீட்டிலே, பெரிய தத்துவம் பேசுறீங்க!'' என்று என்னிடம் கோபித்தான்.

நான் என் பிள்ளை வாசுவிடம், ''அப்பா! என்றைக்காவது உன் சிநேகிதனைச் சரியாக உபசரிக்காமல் விட்டிருக்கிறேனா? இன்றைக்கு நம்ம வீட்டிலே அசைவம் சமைக்கிற பழக்கம் இல்லேங்கறதினாலே வேண்டாம்ங்கிறேன். வேறே ஒண்ணும் இல்லே'' என்று மீண்டும் சமாதானம் சொன்னேன்.

''இந்த அம்மா ஒண்ணு. பேச்சிலே அப்படியே ஆளை வளைச்சிப்பிடுவாங்க. சரி, சரி. எதையாவது கொண்டு வாங்க'' என்று சொல்லிவிட்டு நண்பனிடம் குஷியாக ஓடினான் அவன்.

பள்ளியும் திறந்தது. இடைவெளி ரொம்ப ஏற்பட்டு விட்டதால், என் பையன் வாசு படிப்பில் அதிக சிரத்தை காட்ட ஆரம்பித்தான்.

போன் மணி ஒலிக்கவே தையல் தைத்துக் கொண்டிருந்த நான், ஓடிச் சென்று போனை எடுத்தேன். எதிர் முனையிலிருந்து, "மாமி! சந்தர் பேசறேன்! வாசு இருக்கானா?" என்று கேட்டான் சந்தர்.

"இருக்கானப்பா. இதோ கூப்பிடறேன்" என்று கூறிவிட்டு என் மகனைக் கூப்பிட்டு அவனிடம் போனைக் கொடுத்தேன்.

நண்பனின் குரலைக் கேட்டவுடன் என் பிள்ளை வாசுவும் "டேய்! என்னடா சந்தர்? என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

"டேய்! அழகர் கோயிலுக்கு பிக்னிக் போகலாமாடா?"

"இந்தத் தடவை யார் யாரெல்லாம் வராங்கடா?"

"எல்லாம் நம்ம பிரண்ட்ஸ்கள் தான்."

"பிரண்ட்ஸ்கள்னு யாரெல்லாம்? சொல்லுடா" என்றான் என் பையன்.

அவன் நண்பன் பிக்னிக்குக்கு வருகிற நண்பர்களின் பெயரோடு அவர்கள் கொண்டு வரும் உணவுகளின் பெயரையும் சேர்த்தே சொன்னான்.

"பூரி — மூர்த்தி, இட்லி — பாண்டி, காரசோமாஸ் — கண்ணன், வறுவல்— வெங்கடேசன், கேசரி — காந்தன், ஆம்லட் — ரங்கராஜன்."

"இந்தத் தடவை நான் என்னடா கொண்டு வரணும்?" என்று கேட்டான் வாசு.

"எப்பொழுதும் போல நீ சப்பாத்தியே கொண்டு வா. சரியா?" என்று சொல்லிச் சந்தர் போனை வைத்துவிட்டான்.

வாசு என்னிடம் வந்து, "அம்மா! போன தடவை மாதிரி ருசியா சப்பாத்தி பண்ணுங்க. ஆனால், கூட்டு வேற மாதிரி செய்யுங்க" என்றான்.

இப்படியாக ஆரம்பித்த அழகர் கோயில் பிக்னிக் ஒவ்வொரு கோயிலாக விரிந்தது.

'காலத்திற்கு ஏற்றாற்போல் நாமும் மாறவேண்டும். என்னைப் போல் ஒவ்வொரு பெற்றோரும் வளர்ந்த பிள்ளைகளை விட்டுப் பிடிக்க வேண்டும்' என்ற எண்ணம் உடையவள் நான். ஆதலால் மகனின் 'பிக்னிக்' திட்டத்திற்குத் தடை சொல்லாமல் வேண்டிய பலகாரங்களைச் செய்து கொடுத்து, பஸ் செலவுக்கும் கோயில் பிரசாதம் வாங்குவதற்கும் உரிய சில்லறையையும் சேர்த்தே கொடுத்தனுப்பினேன்! எனவே, அவனுடைய 'பிக்னிக்' திட்டமும் வளர்ந்து கொண்டே போயிற்று.

கடைசியில் வாராவாரம் ஏதாவது ஒரு கோயிலுக்கு 'பிக்னிக்' போகும் வாசுவின் ஜுரம், என் மற்றப் பிள்ளைகளையும் பிடிக்க ஆரம்பிக்கவே, குடும்பத்துடன் ஒருநாள் அழகர் கோயிலுக்கு நாங்களும் பிக்னிக் கிளம்பினோம்.

சுவாமி தரிசனம் செய்துவிட்டுக் கோயில் பிராகாரத்தில் உட்கார்ந்து இருந்தோம். அப்பொழுது வாசு தன் தம்பியிடம், "டேய்! இந்த இடத்திலே உட்கார்ந்துதான் நாங்க பிக்னிக் வந்தபோது சாப்பிட்டோம்" என்றான்.

சின்னவன், "ஆம்லட்டெல்லாம் கோயில் காம்பவுண்டுக்குள்ளே வச்சு சாப்பிடுவீங்களாக்கும்! என்னடா, நீயும் உங்க பிரெண்ட்ஸ்களும்?" என்று வருத்தத்துடன் கூறினான்.

"டேய் கேளுடா. எத்தனையோ தடவை நாங்கள் எவ்வளவோ கோயில்களுக்கு பிக்னிக் போயிருக்கிறோமே, ஆனால் ஒரு தடவை கூட நான் கோயில் காம்பவுண்டுக்குள்ளே வச்சி ஆம்லட் சாப்பிட்டதில்லே. என் பங்கையும் சேர்த்துச் சந்தர்தான் சாப்பிடுவான்."

"ஆம்லட் சாப்பிடுறதுக்குக் கோயில் தான் கெடச்சதாக்கும். வேறு சுற்றுலா இடங்களுக்குப் போய் பிரியாணியே சாப்பிடலாமே!" என்றான் சின்னவன் சூடாக.

வாசு சிரித்துக் கொண்டே சொன்னான். "விஷயம் தெரியாமல் பேசாதே. சந்தருடைய அம்மாவும் அப்பாவும் கோயிலுக்குன்னுதான் அவனைப் போக விடுவாங்க. அதனாலேதான் அவன் ஏதாவது ஒரு கோயிலைத் தேர்ந்தெடுத்து பிக்னிக் குழுவைத் திரட்டிக் கொண்டு வந்து ஆம்லட் சாப்பிடறான்!"

"இப்பத்தாண்டா சந்தர் பிக்னிக் போகிற விஷயம் புரிஞ்சது!" என்று சொல்லி ஓஹோன்னு சிரித்தான் சின்னவன்.



அரக்கனின் தோட்டம்

அழ. வள்ளியப்பா

காட்சி 1

இடம்: அழகான ஒரு தோட்டம்.
பாத்திரங்கள்: குழந்தைகளான முரளி, பானு, லீலா, கிட்டு, அரக்கன்
(குழந்தைகள் பாடுகிறார்கள். இடையிடையே பறவைகளின் ஒலி கேட்கிறது)

தோட்டம் நல்ல தோட்டம்-நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்
கூட்ட மாக ஒன்றாய் — நாமும்
கூடி ஆடும் தோட்டம்.

பள்ளிக் கூடம் விட்ட — உடன்
பாய்ந்தே ஓடி வருவோம்.
புள்ளி மானைப் போலே — நாமும்
துள்ளிக் குதித்து மகிழ்வோம்.

வண்ண மலர்க ளாலே — நம்மை
மகிழ வைக்கும் செடிகள்!
தின்னத் தின்னப் பழங்கள் — தந்து
சிரமம் தீர்க்கும் மரங்கள்!

கொஞ்சும் கிளியின் குரலும் — கருங்
குயிலின் இசையும், அடடா,
நெஞ்சை அள்ளு கிறதே!— இதை
நினைக்கும் போதே இன்பம்.

பட்டு விரிப்பைப் போலே — எங்கும்
பசுமை யான புற்கள்!
விட்டுப் போக மனமே — இல்லை
மிகவும் நல்ல தோட்டம்.

(அரக்கன் வருகிறான்)

அரக்கன்: ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா. விட்டுப் போக மனமே இல்லையா; யாரது என் தோட்டத்திலே?

குழந்தைகள்: ஐயையோ. அரக்கன்! அரக்கன்!

அரக்கன்: ம். ம். ஏய் குழந்தைகளா, நான் இல்லாத சமயத்திலே என் தோட்டத்திலே வந்து ஆட்டமா போடுகிறீர்கள்? இப்போது இதை விட்டுப் போகிறீர்களா, என்ன?

குழந்தைகள்: ஐயையோ. இந்த அரக்கன் பொல்லாதவனாயிருக்கிறானே! இனிமேல் இங்கே இருக்கவே கூடாது. வாருங்கள், வாருங்கள். போய் விடலாம்.

அரக்கன்: ஹஹ்ஹஹ்ஹா. எப்படித் தலைதெறிக்க ஓடுகிறார்கள்! இந்தத் தோட்டம் என் சொந்தத் தோட்டம். இனிமேல் யாரும் இதற்குள் வரக் கூடாது... வராமலிருக்க ஒரு வழி செய்ய வேண்டும். என்ன செய்யலாம்?... உம்ம். அதுதான் சரி... இப்போதே அந்த வேலையைச் செய்து முடித்து விடுகிறேன்.

காட்சி 2

இடம்: தோட்டத்தின் முன்புறம்.
பாத்திரங்கள்: முரளி, பானு, லீலா, கிட்டு.

முரளி: அடடே, என்ன இது! தோட்டத்தைச் சுற்றி, பெரிய சுவர் இருக்கிறதே! நேற்று இதெல்லாம் இல்லையே! உள்ளே எப்படிப் போவது?

பானு: எல்லாம் அந்த அரக்கன் செய்த வேலையாகத்தான் இருக்கும்.
லீலா: அதோ அந்தச் சுவரைப் பாருங்கள். ஏதோ எழுதியிருக்கிறதே!
கிட்டு: ஆமாம், என்ன எழுதியிருக்கிறது? (படிக்கிறான்.)

'யாரும் உள்ளேவரக்கூடாது.
மீறினால் தண்டனை கிடைக்கும்.'

பானு: ஐயோ! இனி முன்மாதிரி இந்த அழகான தோட்டத்திலே விளையாட முடியாது போலிருக்கிறதே!
முரளி: விளையாடுகிறதா? கால் வைக்க முடியாதபடி செய்து விட்டானே அந்தக் கல்நெஞ்சக்காரன்!
லீலா: ஆகா, இந்தத் தோட்டத்திலே நாம் எல்லாம் எப்படி ஆடிப்பாடிக் குஷியாயிருந்தோம்?
கிட்டு: இனிமேல் தெருவில்தான் நாம் எல்லாம் விளையாட வேண்டும்.
லீலா: தெருவிலே விளையாடவே எனக்குப் பிடிக்கிறதில்லை. எங்கே பார்த்தாலும் ஒரே புழுதி.
பானு: இல்லாத போனால் ஒரே கல்லு!
லீலா: ஏண்டி பானு, இவ்வளவு நாளும் நாம் இந்தத் தோட்டத்திலே விளையாடினோமே, அப்போது இந்த அரக்கன் எங்கே இருந்தானாம்? இவனை நாம் பார்த்ததே இல்லையே!
பானு: இந்தத் தோட்டம் அவனுக்குத்தான் சொந்தமாம். ஆனால், ஏழு வருஷமாக அவன் இந்த ஊரிலேயே இல்லையாம். அவன் சிநேகிதனைப் பார்க்கப் போயிருந்தானாம். நேற்றுத்தான் திரும்பி வந்தானாம். இதையெல்லாம் என் தாத்தா சொன்னார்.
லீலா: போனதுதான் போனானே, இன்னொரு வருஷம் அந்தச் சிநேகிதன் வீட்டிலேயே இருந்துவிட்டு வரக் கூடாதோ? நம்முடைய ஆனந்தத்தைக் கெடுக்க ஏன் இப்படி அவசரப்பட்டு வரவேண்டும்?

காட்சி 3

இடம்: தோட்டத்தின் உட்புறம்.
பாத்திரங்கள்: அரக்கன், குழந்தைகள், 5 வயதுப் பையன் ஒருவன்.

அரக்கன் (தனக்குள்): என்ன இது, ஒரே அதிசயமாயிருக்கிறதே! நானும் இங்கே திரும்பி வந்ததிலிருந்து பார்க்கிறேன். ஒரு செடியிலாவது ஒரு பூ இருக்க வேண்டுமே! ஊஹூம். எந்த மரத்திலேயாவது ஒரு பழம் இருக்கிறதா? அதுவும் இல்லை. தினம் பாடிக் கொண்டே இருக்குமே, அந்தப் பறவைகளும் எங்கோ போய்விட்டனவே! இந்தத் தோட்டமே வெறிச்சென்று இருக்கிறது. வசந்தகாலம், மழைக் காலம், இதெல்லாம் இந்த ஏழெட்டு மாதத்திலே கட்டாயம் வந்திருக்க வேண்டுமே! ஏன், அதெல்லாம் வரவே இல்லை? எப்போதும் ஒரே கோடைகாலமாயிருக்கிறது. உஷ்ணம் மண்டையைப் பிளக்கிறதே! மரம் செடி கொடிகளெல்லாம் பட்டுப் போயிருக்கின்றன. காற்றும் மிகமிகப் பலமாக அடிக்கிறது. ஒரே பேய்க் காற்று. (காற்று அடிக்கும் சத்தம்.)
அப்பா! இப்படியே எத்தனை நாள் இருக்கிறது? வசந்த காலம் சீக்கிரம் வராதா? வசந்த காலம் இனி வரவே வராதா?
(ஒரு குயிலின் இனிய குரல் கேட்கிறது.)
ஆகா! எவ்வளவு இனிமையாக இருக்கிறது! இந்தக் குரல் எங்கிருந்து வருகிறது? அடே, நம் தோட்டத்துக்குள்ளே இருந்துதான் வருகிறது! யார் பாடுவது? ஜன்னல் வழியாகப் பார்க்கலாம்...
அடடே.. குயில்தான் பாடுகிறது! என் தோட்டத்திலே குயில் பாடு

கரடியானான்!

"என்னடா இது? கரடிமாதிரி உடம்பு பூரா மயிர் முளைச்சு இருக்கு?"
"அக்காவோட கூந்தல் வளரும் தைலத்திலே எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சுட்டேன். உடனே உடம்பு பூரா பலன் தெரிஞ்சுவிட்டது"
-லலிதா செல்லப்பா





செங்கற்பட்டிலே வெண்ணிலா!

24—7—83 ஞாயிற்றுக் கிழமை மதியம் 3 மணிக்கு, செங்கற்பட்டிலே ஒரு 'வெண்ணிலா' உதித்தது! ஆம் 'வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கம்' என்ற பெயருடன் ஒரு சங்கம் தொடங்க பெற்றதைத் தான் குறிப்பிடுகிறோம்! பல அறிஞர்கள் கலந்து கொண்ட அந்த விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திரு ந. தம்புசாமி தலைமையில் தமிழாசிரியர் திரு. பழனிச்சாமி, திருவாளர்கள் பழமலைநாதன், சந்திரகாந்தன், செந்தமிழ்ச் செல்வன், ஓவியர் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர். திருவாளர்கள் வெங்கடேசனும், சந்திரகாந்தனும் இன்னிசை விருந்தளித்தனர். இச்சங்கத்தின் தலைவர்: த. அருள் சிவபாலன், செயலாளர்: டி. என். ஸ்ரீதரன்.

இச்சங்கத்தின் சீரிய முயற்சிகள் சிறந்துமிக்கோங்க வாழ்த்துகிறோம்.

கிறது! எவ்வளவு இனிமையாயிருக்கிறது! வெயில்கூடத் தணிந்து விட்டதே! இந்நேரம் 'விர்...விர்' என்று அடித்துக் கொண்டிருந்ததே அந்தப் பேய்க் காற்றைக் காணோம்! ஆகா, எப்படி ஜிலுஜிலு என்று தென்றல் காற்று வருகிறது! அந்தக் காற்று சும்மாவா வருகிறது? மலர்களின் மணத்தையும் அல்லவா கொண்டு வருகிறது? சந்தேகமில்லை. என் தோட்டத்துக்கும் வசந்தம் வந்துவிட்டது! ஆம், வசந்தகாலம் வந்துவிட்டது! சந்தேகமேயில்லை! இப்போது என் தோட்டமும் அழகாகத்தான் இருக்கும். எங்கே அது எப்படி இருக்கிறது என்று இந்த வராந்தாவிலிருந்து பார்க்கலாம்.

ஆ! என் தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கிறது! எவ்வளவு அற்புதமாயிருக்கிறது! ஒவ்வொரு மரத்திலும் பூ இருக்கிறது! காய் இருக்கிறது. பழம் இருக்கிறது! அந்த மரக்கிளைகளெல்லாம் எவ்வளவு உற்சாகமாக ஆடுகின்றன! அந்தக் கிளைகளிலே இருப்பது — யார்? குழந்தைகளா? ஆம், சின்னஞ்சிறு குழந்தைகள்! ஆனந்தமாக அந்தக் கிளைகளில் உட்கார்ந்திருக்கிறார்கள்! அவர்களைச் சுற்றிச் சுற்றி அல்லவா பறவைகள் பாடி வருகின்றன! எப்படி அவர்கள் உள்ளே வந்தார்கள்...? ஓகோ, சுவரில் இருக்கிறதே, ஒரு சிறு ஓட்டை, அதன் வழியாகத்தான் வந்திருக்க வேண்டும். அவர்கள் இங்கு வராதிருந்தால் என் தோட்டம் இப்படி மாறியிருக்குமா? நான் இவ்வளவு ஆனந்தத்தையும் அனுபவிக்க முடியுமா? இப்போதுதான் தெரிகிறது. இவ்வளவு நாட்களும் குழந்தைகள் வராததால்தான் தோட்டத்தில் வசந்த காலம் வராமல் இருந்து விட்டது. அன்று குழந்தைகளை விரட்டியடித்தேனே, நான் எவ்வளவு சுயநலக்காரன்! ஆனால், சற்று நேரத்துக்கு முன்பு வரைதான் நான் சுயநலக்காரனாயிருந்தேன். இப்போது நான் சுயநலக்காரன் அல்ல. இனி எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தத் தோட்டம் சொந்தம்.

(குழந்தைகள் பாடுகிறார்கள்.)

குழந்தைகள்:

தோட்டம்நல்ல தோட்டம்—நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்.

அரக்கன்: ஆகா! எவ்வளவு ஆனந்த மாக அந்தக் குழந்தைகள் பாடு கிறார்கள்! அந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க எனக்கும் ஒரே ஆனந்தமாயிருக்கிறது... அடடே, அந்த மூலையில் ஒரு குழந்தை நிற்பது போலத் தெரிகிறதே..!ம்... ஆமாம். ஒரு சிறு பையன்தான் நிற்கிறான். அவன் இருக்கும் இடம் மட்டும் பசுமையாக இல்லையே! அங்கே நிற்கும் மரம்கூட இலையெல்லாம் உதிர்ந்து பட்ட மரம் போல் இருக்கிறதே! அந்தப் பையன் அங்கே என்ன செய்கிறான்? ஓகோ, அந்த மரத்திலே அவன் ஏறப் பார்க்கிறான் போலிருக்கிறது. ஆனால் பாவம், அவனால் முடியவில்லை.

பையன்: (அழுகிறான்) ம்... ம்... ம்... எல்லாரும் ஏறியிருக்கிறாங்க. எனக்கு மட்டும் முடியலே இல்லையே!

அரக்கன்: பாவம், அவன் அழுகிறான். அவனை மரத்திலே தூக்கிவிட்டால் தான் அவன் அழுகை நிற்கும். இதோ, நானே அந்த இடத்திற்குப் போகிறேன். அவனை ஒரு கிளையிலே தூக்கி வைக்கிறேன்.

(அரக்கன் வருவதைக் கண்டு மற்ற குழந்தைகள் பயந்து ஓடுதல்)

கிட்டு: ஐயையோ, அரக்கன்! அரக்கன் கிட்டத்திலே வந்துவிட்டான்!

முரளி: ஏய் சோமு, குதிடா.

பானு: லீலா, ஓடிவா, ஓடிவா, ம்... சீக்கிரம்.

கிட்டு: ஐயையோ, இவன் பொல்லாத வன். இங்கே நிற்கவே கூடாது! ஆபத்து!

அரக்கன்: பாவம், என்னைப் பார்த்தல்லவா இந்தக் குழந்தைகள் ஓடு கிறார்கள்? ஆ, இது என்ன! அவர்கள் ஓடியதும் இந்தத் தோட்டம் மறு படியும் வெறிச்சென்று இருக்கிறதே! பறவைகளெல்லாம் பறந்தோடிவிட் டனவே! மரம் செடி கொடிகளெல் லாம் பட்டுப் போய் விட்டனவே!





பேய்க் காற்றும் சீறிச் சீறி அடிக்கிறதே!

(காற்று பலமாக அடித்தல்.)

ஆமாம், எல்லோரும் ஓடிவிட்டார்கள். ஆனால், அந்தப் பையன் மட்டும் அழுதுகொண்டு அங்கேயே நிற்கிறானே! சரி, நாம் அவனைக் கிளையிலே ஏற்றிவிடுவோம். அவனாவது ஆனந்தமாக இருக்கட்டும்.

(பையனை அரக்கன் கிளையிலே தூக்கி வைக்கிறான். மரம் தழைக்கிறது!)

ஆ! இது என்ன ஆச்சரியமாயிருக்கிறதே! இந்தப் பையனைக் கிளையிலே தூக்கி வைத்ததும், இந்த மரம் தழைத்து விட்டதே! பூவும், காயும், கனியும் அடடா! எப்படிச் செழிப்போடு இருக்கின்றன! இந்தப் பையனைச் சுற்றிப் பறவைகளும் ஆனந்தமாகப் பாடிக் கொண்டே வட்டமிடுகின்றன!... என்னடா தம்பி, கை இரண்டையும் நீட்டுகிறாயே! பக்கத்திலே வரவேண்டுமா? இதோ வந்துவிட்டேன்.

பையன்: (முத்தம் கொடுக்கிறான்.)

அரக்கன்: ஆகா! த்ஸௌ, த்ஸௌ. தம்பி, நீ கொடுத்த முத்தம் எனக்கு எவ்வளவு இன்பத்தைக் கொடுக்கிறது, தெரியுமா? தம்பி, நீ நல்ல பையன். இங்கே நீ தினமும் ஆனந்தமாக ஆடலாம், பாடலாம். நான் தடுக்கவே மாட்டேன்.

பானு: (தூரத்தில் நின்றபடி) இது என்னடி அதிசயமாயிருக்கிறது! இந்தப் பையனோடு அரக்கன் பிரியமாக விளையாடுகிறானே!

லலிதா: ஆமாண்டி. அந்தப் பையனும் தைரியமாக அரக்கனுக்கு முத்தம் கொடுக்கிறானே! அவனோடு சிரித்துப் பேசுகிறானே, அதிசயந்தான்!

கிட்டு: அடடே, அரக்கன் இப்போது நல்லவன் ஆகிவிட்டான் போலிருக்கிறது. அந்தச் சின்னப் பையனுக்கு இருக்கிற தைரியம் நமக்கும் இல்லையா? வாருங்கள். நாமும் பயப்படாமல் திரும்பவும் போவோம். மரக் கிளைகளிலே ஏறி முன்போல ஆனந்தமாக ஆடலாம்.

மற்றவர்கள்: உம்...ம்.... இதோ நாங்களும் வருகிறோம்.

அரக்கன்: குழந்தைகளா, வாருங்கள். தைரியமாக வாருங்கள். துளிக்கூடப் பயம் வேண்டாம். இனிமேல் இந்தத் தோட்டம் யாருடையது தெரியுமா? உங்களுடையதேதான்! சந்தேகமே இல்லை. இதோ இப்போதே தோட்டத்தைச் சுற்றியுள்ள சுவரை இடித்துவிடப் போகிறேன். இனி நீங்கள் தாராளமாக வரலாம். ஆனந்தமாக ஆடிப் பாடலாம். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. என்னையும் உங்களோடு விளையாடச் சேர்த்துக்கொள்ள வேண்டும். சரிதானா?

குழந்தைகள்: ஹிஹிஹி. அப்படியே வா, விளையாடலாம்.

(பாட்டின் முதல் இரு அடிகளைப் பாடுகிறார்கள். அரக்கனும் சேர்ந்து பாடுகிறான்.)

காட்சி 4

இடம்: தோட்டத்தின் உட்புறம்.
பாத்திரங்கள்: அரக்கன், குழந்தைகள்.

கிட்டு: அரக்க மாமா, விளக்கு வைக்கிற நேரம் வந்து விட்டது. நாங்களெல்லாம் வீட்டுக்குப் போகவேண்டும். போய் வரட்டுமா?

அரக்கன் (ஏக்கத்துடன்): வீட்டுக்கா போகிறீர்கள்?... சரி, நேரமாகிவிட்டது. அம்மா அப்பா தேடுவார்கள். இன்றைக்கு வந்ததுபோல் நாளைக்கும் மறக்காமல் வரவேண்டும். என்ன சரிதானா?

குழந்தைகள்: கட்டாயம் வருவோம். நிச்சயம் வருவோம்.

அரக்கன்: ஆமாம், அந்தச் சின்னப் பையன் எங்கே? மரத்திலே நான் தூக்கி விட்டேனே, அவனைத்தான் கேட்கிறேன்.

கிட்டு: தெரியவில்லையே! முன்னாலே போய்விட்டான் போலிருக்கிறது.

அரக்கன்: சரி, நாளைக்கு வரும்போது அவனையும் மறக்காமல் கூட்டிக் கொண்டு வாருங்கள். என்ன, கூட்டி வருவீர்களா?

லலிதா: அந்தப் பையனை நான் இதற்கு முன் பார்த்ததே இல்லையே! ஏண்டி, பானு, நீ பார்த்திருக்கிறாயா?

பானு: எனக்கும் அவனைத் தெரியவே தெரியாதே!

கிட்டு: ஆமாம். நானும் பார்த்ததே இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?


மற்றவர்கள்: தெரியாது, தெரியாது.

அரக்கன்: யாருக்குமே தெரியாதா? சரி. நாளைக்குப் பார்க்கலாம்; கட்டாயம் அவன் வருவான்.

காட்சி 5

இடம்: தோட்டத்தின் உட்புறம்.
பாத்திரங்கள்: அரக்கன், ஐந்து வயதுப் பையன்.

அரக்கன் (தனியாக): என்னுடைய தோட்டத்தில் எத்தனையோ மலர்கள் இருக்கின்றன. ஆனால், இந்த மலர்கள் எல்லாவற்றையும் விட மிகவும் அழகான மலர்கள் குழந்தைகள் தான். அதில் சந்தேகமே இல்லை. தினந்தோறும் அவர்கள் இங்கே வருவதும், ஆனந்தமாக ஆடிப் பாடித் திரிவதும் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியளிக்கின்றன...! ஆனாலும், எனக்கு ஒரே ஒரு வருத்தம் உண்டு. மிகப் பெரிய வருத்தம் அது. அன்று நான் மரக் கிளையில் ஏற்றி விட்டேனே, அந்தப் பையனை அன்று பார்த்ததுதான். அதற்குப் பிறகு அவன் வரவே இல்லையே! அவன் எங்கே போயிருப்பான்? யாரைக் கேட்டாலும் தெரியாது, தெரியாது என்கிறார்களே... ஆ! அது என்ன! மிகவும் பிரகாசமான ஒளி! அந்த மூலையில் தெரிகிறதே! அந்த மரம் எவ்வளவு அழகாய் இருக்கிறது! வெள்ளிப் பூக்கள்! தங்கப் பழங்கள்! ஆகா! அற்புதம்! அற்புதம்..... அடடே! அதோ, அதோ இவ்வளவு நாளாக நான் ஏங்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே பையன் நிற்கிறானே! இதோ, இப்போதே நான் அவனிடம் ஓடுகிறேன்....
தம்பி, வந்து விட்டாயா? உன்னை இவ்வளவு காலமாகக் காணாமல் ஏங்கிப் போயிருந்தேன். நல்ல காலம். வந்து விட்டாய்!



பையன்: ஆம், வந்து விட்டேன். இங்கே விளையாடத்தான் வந்திருக்கிறேன். இன்றைக்கு ஒரே ஒரு நாள் மட்டும் நான் இங்கே விளையாடலாமா?

அரக்கன்: ஒரு நாளா? எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் நீ விளையாடலாம்.

பையன்: இல்லை. நான் இன்றைக்கு மட்டும்தான் இங்கே விளையாடப் போகிறேன்.

அரக்கன்: அப்புறம்?

பையன்: உன்னையும் அழைத்துக் கொண்டு என்னுடைய தோட்டத்துக்குப் போகப் போகிறேன்.

அரக்கன்: உன்னுடைய தோட்டமா? அது எங்கே இருக்கிறது?

பையன்: என்னுடைய தோட்டத்தைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? அதுதான் சொ-ர்-க்-க-ம்-!

அரக்கன்: சொர்க்கமா?... அப்படியானால் நீ — இல்லை, தாங்கள்— கடவுள்! ஆகா! நான் பாக்கியம் செய்தவன்! கடவுளே நேரில் வந்திருக்கிறார்! என்னை அழைத்துப் போக வந்திருக்கிறார்! இதோ, இப்போதே நான் புறப்பட்டு விட்டேன்.

பையன்: ம்... புறப்படு. உன் தோட்டத்திலே நீ குழந்தைகளுக்கு இன்பமளித்தாய். என் தோட்டமாகிய சொர்க்கத்திலே நான் உனக்கு இன்பமளிக்கிறேன். வா, போகலாம்.

(திரை)

(ஆஸ்கார் ஒயில்ட் (Oscar Wilde) எழுதிய 'Selfish Giant' என்பதன் தழுவல்)



உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-7



இளவரசனும் ஏழைச் சிறுவனும்

மூலம்: மார்க் ட்வெயின்
தமிழாக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

லண்டன் நகரத்தில் ஏழைகள் வாழும் பகுதி. அதற்குப் புட்டிங் சந்து என்று பெயர். அங்கு டாம் கான்டி என்று ஒரு சிறுவன் இருந்தான். அப்பா, அம்மா, பாட்டி, இரு சகோதரர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு பெரிய குடும்பத்தில் அவன் வாழ்ந்து வந்தான். அப்பா ஜான் கான்டிக்கு வேலை ஒன்றும் இல்லை. திருடுவதுதான் முக்கிய தொழில். அம்மா வேறு வழியில்லாமல் பிச்சை எடுத்துக் குழந்தைகளைக் காப்பாற்றினாள். குழந்தைகளும் பிச்சை எடுத்தனர். பிச்சை கிடைக்காத நாட்களில் அப்பா அவர்களைத் திட்டினார்; அடித்தார். சண்டை போடுவதும், அடிப்பதும் அந்த வட்டாரத்தில் சர்வ சாதாரணம்.

வறுமையில் வாடினாலும் டாமுக்கு அதைப் புரிந்து கொள்ள முடியாத வயது. அவன் மற்றப் பிள்ளைகளுடன் தெருவில் ஆடினான்; ஆற்றில் நீந்தினான். கதைகள் என்றால், டாமுக்கு உயிர்! அரசர்களைப் பற்றிய கதைகள் என்றால், நிரம்பப் பிடிக்கும்.

புட்டிங் சந்தில் ஆண்ட்ரூ என்ற மதகுரு இருந்தார். அவர் டாமுக்கு எழுதப் படிக்கக் கற்பித்தார். கதைகள் சொன்னார். அவரிடம் அரசர்களைப் பற்றி நிறையக் கதைப் புத்தகங்கள் இருந்தன. டாம் அவற்றை ஆவலோடு படித்து ரசித்தான்.

டாம், ஓர் இளவரசனைப் போல் ஆடம்பரமாக வாழ ஆசைப்பட்டான்.

"ஓர் இளவரசனைப் போல வாழ வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது. நான் இளவரசனாக முடியுமா?" என்று மதகுருவிடம் அடிக்கடி கேட்டான்.

"நீ இளவரசனைப் பார்த்திருக்கிறாயா?" என்று அவர் திருப்பிக் கேட்டார்.

"கதைகளில் படித்திருக்கிறேன். நேரில் பார்த்ததில்லை."

"டாம், நீ வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனைக்குப் போ. அங்குதான் இங்கிலாந்தின் அரசரான எட்டாம் ஹென்றி இருக்கிறார். வயது அதிகம் ஆகிவிட்டதால், அவர் வெளியே போவதில்லை. ஆனால், அவருடைய பிள்ளையான இளவரசன் எட்வர்டு அடிக்கடி வெளியே போய் வருகிறான். வெளியில் போய்வரும் சமயங்களில் நீ அவனைப் பார்க்கலாம்" என்றார்.

• • •

டாம் தினமும் அரண்மனை வாசலுக்குப் போனான். காவல்காரர்கள் அவனை உள்ளே விடவில்லை. ஆகவே,

இளவரசனுக்காக வெளியிலேயே காத்திருந்தான்.

ஒரு நாள் இளவரசன் வெளியேவரும்போது டாம் அவனிடம் ஓடினான். காவல்காரர்கள் தடுத்தனர். ''என்னைவிடுங்கள். நான் இளவரசனைக் காண வேண்டும்'', என்று டாம் கூச்சலிட்டான். அவர்கள் டாமை நன்றாக அடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

அக்காட்சியை இளவரசன் பார்த்துவிட்டான். ''யார் அவன்? ஏன் அவனை அடிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''ஒரு பிச்சைக்காரச் சிறுவன்'' என்றனர்.

''பணக்காரன், பிச்சைக்காரன் — எல்லோருக்கும்தானே, என் அப்பா அரசராக இருக்கிறார்? அவனை நான் பார்க்க வேண்டும். இங்கே அழைத்து வாருங்கள்'' — இளவரசன் கட்டளை இட்டான்.


இளவரசனுடைய அறைக்கு டாமை அழைத்துச் சென்றனர். இளவரசன் நல்லவன். அன்பு உள்ளம் கொண்டவன். டாம் பசியால் வாடுவதை அவன் கவனித்தான். நல்ல உணவு அளித்தான். டாம் திருப்தியாகச் சாப்பிட்டான். இளவரசன் டாமைப் பற்றி அன்போடு விசாரித்தான். டாம் தன்னுடைய குடும்பத்தின் சோகக் கதையைச் சுருக்கமாகச் சொன்னான்.

இன்றைக்கு எங்கே?

"அண்ணு! நேற்றுக் கோழிப் பண்ணைக்கு அழைச்சிட்டுப் போனியே, யாருக்கும் தெரியாமல் இரண்டு முட்டையை எடுத்து வந்து விட்டேன். இன்று எங்கே கூட்டி போகப்போறே?"

"பாம்புப் பண்ணைக்கு"

-லீநா செல்லப்பா



''நீ நாள் முழுவதும் என்ன செய்கிறாய்?'' — இளவரசன் கேட்டான்.

''புட்டிங் சந்தில் எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கின்றனர். அவர்களோடு தெருவில் விளையாடுவேன். நாங்கள் பந்தயங்களில் ஓடுவோம்; ஆற்றில் நீந்துவோம்'' என்றான் டாம்.

''டாம், உன்னைப் போலவே நானும் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்'' என்றான் இளவரசன்.

''எனக்கும் உன்னைப் போலப் பெரிய அரண்மனையில் வசிக்க வேண்டும்; சிறந்த உணவை உண்ண வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது'' என்றான் டாம்.

''டாம்! இன்றைக்கு ஒருநாள் மட்டும் நாம் இருவரும் உடைகளை மாற்றிக் கொள்வோமா? உன்னுடைய ஆடைகளை அணிந்துகொண்டு நான் வெளியே சென்று நண்பர்களுடன் ஆடுகிறேன்: நீந்துகிறேன். நீ என்னுடைய உயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு அரண்மனையில் அறுசுவை உணவை உண்டு, ஆனந்தமாக இரு'' என்றான், இளவரசன்.

இருவரும் உடைகளை மாற்றிக்கொண்டார்கள். தங்கள் உருவங்களைக் கண்ணாடியில் பார்த்த போது இருவருமே ஆச்சரியப்பட்டார்கள்!

இருவரும் ஒரே உயரம். ஒரே நிறம். தலைமயிர், கண்கள் எல்லாம் இருவருக்கும் ஒரே மாதிரியாக இருந்தன. முகத்திலும் வேற்றுமை தெரியவில்லை. ஆகையால், புதிய உடையில் டாம் இளவரசனைப் போலவே இருந்தான். கிழிந்த உடையில் இளவரசன் டாமைப் போலவே இருந்தான். ''டாம்! நீ இங்கேயே இரு. நான் வெளியே போய் விளையாடி விட்டுச் சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்'', என்று டாமிடம் விடை பெற்றுக் கொண்டான், இளவரசன். மேசைமீது வட்டமாயும், கனமாயும் ஒரு பொருள் இருந்தது. அதை எடுத்துப் பத்திரமாக ஓரிடத்தில் வைத்துவிட்டு, இளவரசன் அரண்மனையிலிருந்து வெளியேறினான்.

கந்தல் உடையும், வெறும் காலுமாக எட்வர்டு இளவரசன் வெகுதூரம் நடந்தான். வயிறு பசித்தது. உடல் களைத்தது. அரண்மனைக்குத் திரும்பிச் செல்லத் தீர்மானித்தான்.

''நான் இளவரசன். என்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று போவோர், வருவோரிடம்

கேட்டான். அவன் ஒரு பைத்தியம் என்று அவர்கள் எல்லோரும் நினைத்தனர். யாரும் உதவி செய்யவில்லை. ''கிறிஸ்து இல்லம்'' என்ற ஒரு பெரிய கட்டடம் தென்பட்டது. அது ஏழைகளுக்காக அரசரால் கட்டப்பட்டது. சிறுவர்கள் அங்கு கூட்டமாக ஆடிக் கொண்டிருந்தனர். அரண்மனைக்குச் செல்ல அவர்களிடம் உதவி கேட்டான். அவர்களும் அவனைப் பைத்தியம் என்று கேலி செய்து அருகில் இருந்த ஒரு குளத்தில் தள்ளி விட்டனர்.

எட்வர்டு கரையேறி அலைந்து திரிந்தான். இருட்டும் நேரத்தில் புட்டிங் சந்தை அடைந்தான். டாமின் அப்பா ஜான்காண்டி எதிரே வந்தான். எட்வர்டை அவன் டாம் என்று நினைத்து, ''டாம்! அப்பாவைப் பார்க்காமலே போகிறாயே! எங்கேடா போயிருந்தாய்? ஏன் இவ்வளவு நேரம்? எவ்வளவு பணம் கிடைத்தது?'' என்று அதட்டினான்.

''நான் இளவரசன் எட்வர்டு. உங்கள் மகன் டாம் அரண்மனையில் இருக்கிறான். நாங்கள் ஆடைகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம்'' என்று எட்வர்டு பதில் அளித்தான். டாமின் அப்பா . எதையும் நம்பவில்லை.

''சரி, சரி. இன்றைக்குத் தூங்கு. நாளையிலிருந்து ஒழுங்காகப் பிச்சை எடுத்துக் கொண்டுவா'' என்று சொல்லி, இரண்டு அறை கொடுத்து எட்வர்டை இழுத்துச் சென்றான்.

அழகான ஆடைகள், சிறந்த உணவு, கூப்பிட்ட குரலுக்குக் காத்திருக்கும் ஆட்கள் — இத்தகைய வசதிகளை எல்லாம் டாம் நன்றாக அனுபவித்தான். அரண்மனையின் பல அறைகளையும் சுற்றிப் பார்த்தான். பிறகு, நேரம் செல்லச் செல்ல அவனுடைய பயம் வளர்ந்தது: ''இளவரசன் எப்போது வருவான்? நான் எப்போது வீடு திரும்புவேன்?'' என்று டாம் எண்ணினான்.

டாம் அறையின் கதவை மெதுவாகத் திறந்தான். வெளியில் காத்திருந்த வீரர்களும், உதவி ஆட்களும் அவனுக்கு வணக்கம் செய்தனர். டாம் பயந்து அறைக்குள் விரைந்தான். இளவரசனுக்கு மூளை சரி இல்லை என்று அவர்கள் நினைத்தனர். அந்தச் செய்தியை உடனே அரசனுக்குத் தெரிவித்தனர்.


எட்வர்டின் சகோதரி டாமைப் பார்க்க வந்தாள்; அன்போடு விசாரித்தாள். ''நான் இளவரசன் அல்ல.



நான் ஓர் ஏழைச் சிறுவன். நானும், எட்வர்டும் ஆடைகளை மாற்றிக்கொண்டிருக்கிறோம். ஆகவே தயவு செய்து என்னை வெளியே போக விடுங்கள்'' என்று டாம் முறையிட்டான்.

''உனக்கு உடம்பு சரியில்லை, தம்பி. அப்பாவிடம் போகலாம் வா'' என்று சொல்லி அவள் டாமை அழைத்துப் போனாள். தகப்பனார் ஜான் காண்டியிடம்தான் போகிறோம் என்று டாம் நினைத்தான். ஆனால், அவள் டாமை எட்டாம் ஹென்றியிடம் அழைத்துப் போனாள். அவர் உடல் நலம் சரியில்லாமல் படுத்திருந்தார். டாம் அவரைக் கண்டு பயந்து நடுங்கினான்.

ஊர்கள்:



சில ஊர்களில் சில மிருகங்கள், பிராணிகள் ஒளிந்து கொண்டுள்ளன. அவற்றைச் சொல்கிறோம்; ஊரைச் சொல்லுங்கள்:

(1) காளை (2) எருமை (3) பசு (4) சிங்கம் (5) மயில் (6) கிளி (7) நரி, (8) நாய் (9) நத்தை.

விடைகள்:
ஊர்கள்: (1) காளையார்கோயில் (2) எருமைப்பட்டி (3) பசுபதிகோயில் (4) சிங்கம்புணரி (5) மயிலாடுதுறை (6) கிளியனூர் (7) நரியேடு (8) போடி நாயக்கனூர் (9) நந்தைப் பேட்டை.

—எம். ஆர். ஆர்.

''மகனே, அருகில் வா'' என்று அரசர் செல்லமாக அழைத்தார்.

''நான் உங்கள் மகன் அல்ல. நான் எட்வர்டு அல்ல'', என்றான் டாம்.

''அசட்டுத் தனமாகப் பேசாதே, மகனே. அப்புறம் எனக்குக் கோபம் வரும். நீ படித்துப் படித்துக் களைத்துப் போயிருக்கிறாய். சற்று ஓய்வு எடு. உடம்பு சரியாய் விடும்'' என்று அமைதிப்படுத்தி, இளவரசனைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார்.

எட்வர்டின் மாமாவான ஹெர்ட்போர்டு பிரபு அரசனைக் கலந்து ஆலோசித்தார். ''என் முடிவு நெருங்குகிறது. இளவரசன் எட்வர்டு தான் உங்களுக்கு அடுத்த அரசன். என்னால் சட்டங்களில் கையெழுத்திட முடியவில்லை. அவற்றில் என் ராஜ முத்திரையைப் பொறித்து விடுங்கள். மேலும் இளவரசனை இளைப்பாற விடுங்கள். இன்றிரவு அவன் ஒரு பெரிய விருந்துக்குப் போக வேண்டும்'' என்று அரசர் உத்தரவிட்டார்.

டாமின் அப்பாவான ஜான் காண்டி எட்வர்டை இழுத்துக் கொண்டு ஆற்றங்கரை ஓரமாக நடந்தான். ஆற்றின் இரு கரைகளையும் வண்ண வண்ண விளக்குகள் அலங்கரித்தன. மக்கள் புத்தாடை அணிந்து கூட்டங் கூட்டமாகச் சென்றனர். லண்டன் நகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

''இன்றைக்கு என்ன விசேஷம்? எல்லோரும் எங்கே போகிறீர்கள்?'' என்று அருகிலிருந்த ஒருவரிடம் ஜான் காண்டி கேட்டான். ''இளவரசருக்குப் பொன் மாளிகையில் விருந்து கொடுக்கிறார்களாம். அலங்காரப் படகில் அவர் பவனி வருகிறார். மேலும், அரசர் ஹென்றி மரணப் படுக்கையில் இருப்பதால், இளவரசரே விரைவில் அரசர் ஆவாராம். அவரைப் பார்ப்பதற்காக நாங்கள் இங்கே காத்துக் கொண்டிருக்கிறோம்...'' என்று அவர் சொல்லிக் கொண்டே போனார். அவர்கள் இவ்விதம் உரையாடுகையில் எட்வர்டு அங்கிருந்து நழுவிக் கூட்டத்தில் மறைந்தான். டாமைப் பார்ப்பதற்காகப் பொன் மாளிகையை நோக்கி அவன் ஓடினான்.

பொன் மாளிகை சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிரபுக்களும், அவர்களுடைய மனைவி மக்களும் திரளாகக் குழுமியிருந்தனர். மாளிகையிலிருந்து இசை, நாட்டிய ஒலிகளும், இனிய விருந்தின் மணமும் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தன.

டாம் படகிலிருந்து இறங்கியதும், ''இளவரசர் எட்வர்டு வாழ்க!'' என்னும் கோஷம் வானைப் பிளந்தது. டாம் கம்பீரமாக ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்தான். விருந்து துவங்கியது. இளவரசனின் ஆடை ஆபரணங்கள் டாமுக்கு ஒரு சுமையாகத் தோன்றின. விருந்தின் எந்த அம்சத்தையும் அவனுடைய மனம் ரசிக்கவில்லை. ''எட்வர்டு எப்போது வரு

வான்? என்னுடைய பழைய உடைகளை அணிந்து கொண்டு நான் எப்போது விளையாடப் போகலாம்?'' என்ற எண்ணங்களே அவனுடைய மனத்தில் மேலோங்கி இருந்தன.

புழுதி படிந்த எட்வர்டு பொன் மாளிகையின் வாயிலை அடைந்தான். ''நான்தான் இளவரசன். கதவைத் திறவுங்கள். உள்ளே போக வேண்டும்'' என்று உத்தரவிட்டான். காவல்காரர்களும், இதர மக்களும் எட்வர்டை ஒரு பைத்தியம் என்று நினைத்துக் கேலி செய்தனர். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு அடித்து விரட்டினர். ஆனாலும், அவன் தைரியமாக அங்கிருந்து நகர மறுத்தான். கூட்டத்தில் இருந்த மைல்ஸ் என்ற போர் வீரன் சிறுவனின் நிலைக்கு இரங்கித் தன் வாளை உருவிக் கொண்டு கூட்டத்தை விலக்கினான். எட்வர்டுக்கு எந்தவித ஆபத்தும் வராமல் பாதுகாப்பதாக உறுதி அளித்தான்.

பக்கிங்காம் அரண்மனையிலிருந்து ஒரு தூதன் பொன் மாளிகைக்கு விரைந்து சென்றான். அவன் டாமை அணுகி, ''அரசே! உங்கள் தகப்பனார் இறந்து விட்டார்'' என்று சொல்லி ''எட்வர்டு அரசர் வாழ்க!'' என்று உரக்கக் கத்தினான். கூட்டத்தினர் அனைவரும் ''எட்வர்டு அரசர் வாழ்க'' என்று வாழ்த்தினர்.

கந்தல் ஆடையில் காட்சி அளித்த எட்வர்டு இறந்து போன தன் அப்பாவை எண்ணிக் கண்ணீர் சொரிந்தான். மைல்ஸ் அவனை ஒரு விடுதிக்கு அழைத்துச் சென்று இளைப்பாற்றினான். தற்செயலாக அந்த விடுதியின் பக்கம் வந்த ஜான் கான்டி அவனைத் தன் மகன் டாம் என நினைத்தான். மேலும் அவனை வீட்டுக்கு வரச் சொல்லி வற்புறுத்தினான். எட்வர்டு மறுத்தான். மைல்ஸ் வாளைக் காட்டி மிரட்டவே, ஜான் கான்டி அகன்றான்.

மைல்ஸ் புதிய ஆடைகள் வாங்கி எட்வர்டுக்கு அணிவித்தான். அரசருக்காக பிரான்சில் நீண்ட நாட்கள் போரிட்டுவிட்டுத் தாயகம் திரும்புவதாகவும், மலை உச்சியில் உள்ள ஒரு மாளிகையில் தன் குடும்பத்தினர் வசிப்பதாகவும் சொல்லி, எட்வர்டை மைல்ஸ் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்றான்.



வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனையில் ஒரு மன்னருக்குரிய மரியாதையோடு டாம் நடத்தப்பட்டான். அரண்மனையின் உயர் அதிகாரிகள் காத்திருந்து அவனுக்குப் பணிவிடை செய்தனர். ''இதெல்லாம் கனவா? நனவா?'' என்று குழம்பினான். ''நான் புட்டிங் சந்தில் இருக்கிறேனா? அரண்மனையில் இருக்கிறேனா?'' என்ற சந்தேகம் டாமின் உள்ளத்தில் அவ்வப்போது தலைநீட்டின.

எட்வர்டின் மாமாவான ஹெர்ட்போர்டு பிரபு அரசரின் தலைமை ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அவர் டாமை உண்மையான எட்வர்டு என்றும், அவனுக்கு மூளை பிசகியிருப்பதால் புட்டிங் சந்தைப் பற்றி அடிக்கடி பேசுகிறான் என்றும் எண்ணினார். அவன் தர்பாரில் எப்படி நடந்து கொள்ளவேண்டும், அறிக்கைகளில் எப்படிக் கையொப்பமிடவேண்டும் என்பதையெல்லாம் அவனுக்கு அவர் சொல்லிக் கொடுத்தார். டாம் ஒரு பொம்மையைப் போல அவ்வாறே செய்தான்.

சில நாட்களில் அரச போகங்கள் டாமுக்கு அலுத்து விட்டன. அவன் திரும்பவும் புட்டிங் சந்துக்குப் போய்த் தன் நண்பர்களுடன் ஓடியாடிக் களிக்க விரும்பினான்!

எட்வர்டை அழைத்துக் கொண்டு மைல்ஸ் மலை உச்சியில் இருந்த தன்னுடைய மாளிகையை அடைந்தான். மைல்சின் தகப்பனார் காலமாகி இருந்தார். மாளிகை மைல்சின் அண்ணன் கைக்கு மாறியிருந்தது. அவன் ஒரு தீயவன். மைல்ஸ் பிரஞ்சுப் போரில் மாண்டுவிட்டதாகப் பொய் சொல்லி, எல்லாச் சொத்துக்களையும் அவனே கைப்பற்றியிருந்தான். ஆகவே மைல்சுக்கும், அவனுடைய அண்ணனுக்கும் வாக்குவாதமும், கைகலப்பும் நடந்தன. அண்ணனுடைய கொடுமைகளுக்குப் பயந்து எல்லோரும் அவனுக்குச் சாதகமாகவே பேசினர். முடிவில் மைல்சும், எட்வர்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வழக்கு நீதி மன்றத்திற்குப் போனது. அங்கு மைல்சையும், எட்வர்டையும் யாரும் நம்பவில்லை. பொய் சொன்ன குற்றத்திற்காக அவர்கள் இருவருக்கும் தலா பன்னிரண்டு கசையடி கொடுக்குமாறு நீதிபதி தீர்ப்பளித்தார். எட்வர்டின் கசையடியையும் மைல்ஸ் தானே ஏற்றுக் கொண்டான். எட்வர்டு மைல்சுக்காகக் கண்ணீர் சிந்தினான். இருவரும் விடுதலை ஆயினர். எட்வர்டு தான் ஓர் இளவரசன் என்று அடிக்கடி சொல்லி வந்தான்.



உலகம் அவனை ஒரு பைத்தியக்காரன் என்றே எண்ணியது. மைல்கம் அப்படித் தான் எண்ணினான். இருந்தாலும், அவன் மீது இரக்கப்பட்டு மைல்ஸ் அவனைத் தன்னோடு வைத்துக் கொண்டான்.

லண்டனில் முடிசூட்டு விழாவுக்கு மும்முரமாக ஏற்பாடுகள் நடந்தன. அதைக் காண மக்கள் திரளாகச் சென்றனர். செய்தி எட்வர்ட்டுக்கு எட்டியது. ஆனால், தான் இளவரசனல்ல என்று டாம் பலமுறை சொன்னது, அரண்மனை அதிகாரிகள் அதை நம்பாமல் அவனுக்குப் பைத்தியம் என்று எண்ணியது — இந்த விவரங்கள் எல்லாம் எட்வர்டுக்குத் தெரியாது. டாம் தன்னை ஏமாற்றித் தன்னுடைய இடத்தைப் பிடிக்க முயலுவதாக எட்வர்டு நினைத்தான். ஆகவே, முடிசூட்டு விழா தொடங்கும் முன்பே அவன் லண்டன் போகத் துடித்தான். தன் மாமாவான ஹெர்ட் போர்டு பிரபுவுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். மைல்கம் தன் கதையைச் சொல்லி இன்னொரு கடிதம் எழுதினான். இருவரும் அக்கடிதங்களுடன் லண்டனை நோக்கி விரைந்தனர்.

உண்மை அரசனான எட்வர்டு உண்ண உணவில்லாமல், தங்க இடமில்லாமல், உடுத்த நல்ல துணியில்லாமல் துன்பத்தில் உழன்று கொண்டிருந்தான். ஆனால், புட்டிங் சந்தில் பிறந்த டாம், அரச வேடம் புனைந்து, உப்பரிகையில் அமர்ந்து, உல்லாசங்களில் ஊறிக் கொண்டிருந்தான். அரச போகங்கள் முதலில் அலுப்புத் தட்டினாலும், பின்பு அவற்றை ரசிக்கவும், அனுபவிக்கவும் டாம் கற்றுக் கொண்டான். வறியோர்களின் வாழ்க்கையைப் பற்றி நன்கு அறிந்திருந்ததால் ஏழைகள் குற்றம் புரிந்தால், அவன் கருணையோடு தீர்ப்புகள் வழங்கினான். ஆரம்பத்தில் இளவரசன் எட்வர்டைப் பற்றிய எண்ணங்கள் தோன்றின. அவன் திரும்பி வராததால் அந்த எண்ணங்கள் மெதுவாக மறைந்து விட்டன. அவ்வாறே பெற்றோரைப் பற்றிய நினைவுகளும் அவன் மனத்திலிருந்துகொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்து மறைந்தன. அவன் முற்றிலும் ஒரு புதிய டாமாக மாறினான்!

முடிசூட்டு விழாவுக்கு முந்தைய நாள் மக்கள் எல்லோரும் கண்டுகளிப்பதற்காகப் புதிய அரசனை நன்றாக அலங்கரித்து லண்டனின் பிரதான வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வந்தனர். பிரபுக்கள் புடை சூழ டாம் பவனி வந்தான். டாம் கைநிறைய வெள்ளிக் காசுகளை அள்ளி வீசினான். மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஊர்வலம் அரண்மனைக்குத் திரும்பியது.



“ஏண்டா, எலிமென்டரி ஸ்கூலிலே சேர மாட்டேன்னு அடம் பிடிக்கிறியாமே!”

“போப்பா, நான் ஹைசொஸைட்டியிலே பிறந்தவன். அதனாலே ஹைஸ்கூலிலேதான் சேருவேன்”

-ஆர். பி. ராஜு

மைல்கம், எட்வர்டும் அரண்மனையை அடைந்தனர். தாங்கள் எழுதிய கடிதங்களை அரசரின் ஆலோசகருக்கு அனுப்பினர். அனுமதி கிடைத்தது. இருவரும் உள்ளே சென்றனர். அழுக்கு உடைகளை அணிந்திருந்த சிறுவன், அரச உடைகளை அணிந்திருந்த சிறுவனை உற்று நோக்கினான். டாமின் முகத்தில் சந்தோஷம் பொங்கியது.

''உண்மை அரசருக்கு முதன் முதலாக ஏழை டாம் மரியாதை செலுத்துகிறேன்'' என்று சொல்லி டாம் எட்வர்டுக்கு முன்னால் விழுந்து வணங்கினான்.

ஒரே மாதிரித் தோற்றமளிக்கும் இரண்டு சிறுவர்களையும் அருகருகே கண்டு அரசரின் ஆலோசகரும், மற்ற பிரபுக்களும் செய்வதறியாது திகைத்தனர்.

''உங்கள் மருமானும் உங்கள் அரசனும் நானேதான்'' என்றான் எட்வர்டு.

''உங்கள் மருமானும் நம்முடைய அரசனும் அவரே தான்'' என்று ஆலோசகரிடம் டாமும் சொன்னான்.

எட்வர்டைச் சோதிப்பதற்காக ஆலோசகர் சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டார். எல்லாவற்றிற்கும் எட்வர்டு சரியாக விடை அளித்தான். அரண்மனையைப் பற்றிய எல்லா விஷயங்களும் இரு சிறுவர்களுக்கும் துல்லியமாகத் தெரிந்திருப்பதைக் கண்டு ஆலோசகர் ஆச்சரியப்பட்டார்.

''இப்போது ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குச் சரியான விடை சொல்பவர்தான் உண்மையான பட்டத்து இளவரசராக இருக்க முடியும்'' என்று அவர் தீர்மானமாகச் சொன்னார்.

''ராஜ முத்திரை எங்கே என்று பலமுறை கேட்டேன். நீங்கள் இது வரை பதில் சொல்லவே இல்லையே?'' என்று ஆலோசகர் டாமிடம் கேட்டார்.

''ராஜமுத்திரை என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது. ஆகையால், அதைப் பற்றிப் பேசவில்லை'' -டாம் பதிலளித்தான்.

''அது இருக்குமிடம் எனக்குத் தெரியும். என் அறையின் மூலையிலே தொங்கும் கவசத்திற்குள் அது இருக்கிறது'', என்று எட்வர்டு சொன்னான். அருகிலிருந்த ஒரு பிரபு ஓடிச் சென்று அந்த முத்திரையை எடுத்து வந்தார்.

''வட்டமாக, கனமாக இருக்கிறதே இதுதான் ராஜமுத்திரையா? ஓ! இதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால், இது என்ன என்பது எனக்குத் தெரியவில்லை'' - டாம் கூறினான்.

''இதை வைத்துக்கொண்டு விளையாடினாயா, என்ன?'' — எட்வர்டு சிரித்துக்கொண்டே கேட்டான்.

''விளையாடவில்லை. ஆனால், அதை உபயோகித்தேன்.''

''எப்படி உபயோகித்தாய்?''

''கொட்டைகளை உடைப்பதற்கு இதைப் பயன்படுத்தினேன்.'' என்று டாம் சொன்னதும், பிரபுக்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். எட்வர்டுதான் உண்மையான அரசன் என்று உறுதியாயிற்று. டாமின் அரச உடைகள் எட்வர்டுக்கு அணிவிக்கப்பட்டன.

எட்வர்டு அரசன். 'கென்ட் பிரபு' என்ற பட்டத்தை மைல்சுக்கு வழங்கிக் கௌரவித்தான். மைல்சின் அண்ணன் பிரான்ஸ் போர் முனைக்கு அனுப்பப்பட்டான். ஏழைச் சிறுவர்களின் நலனைக் காப்பதற்காக டாம் ஒரு சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டான். பெற்றோர்களை அழைத்துக்கொண்டு அவன் புது வாழ்க்கையைத் தொடங்கினான். எட்வர்டு அரசருக்கு வெஸ்ட் மினிஸ்டர் ஆலயத்தில் விமரிசையாக முடிசூட்டுவிழா நடந்தது. ஏழைகள் போற்றும் இனிய அரசராக எட்வர்டு விளங்கினான்.

Mark Twain ஆங்கிலத்தில் எழுதிய 'The Prince and the Pauper' என்ற கதையின் சுருக்கமே இது.

மூன்று செய்திகள்

உலோகமும், பிளாஸ்டிக்கும்

உலோகப் பாத்திரத்தைவிட பிளாஸ்டிக் பாத்திரத்தில் வைக்கப்படும் நீர் குளுமையாக இருக்கும். இதற்குக் காரணம் பிளாஸ்டிக் வெப்பத்தைக் கடத்தும் தன்மை கொண்டது.

ஊதா நிறப் பூ


சுடுகாட்டில் ஊதா நிறமுள்ள ஒரு வகைப் பூ புதர் போல் வளர்வதை நம்மில் பலர் பார்த்திருக்கிறோம். ஒன்றுக்கும் உதவாது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் இந்தப் பூவிலிருந்து புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்திருக்கிறது ஜெர்மனி.



வைரத்தில் அடையாளக் குறி!

வைரங்களில் உண்மை எது, போலி எது என்பதைக் கண்டுபிடிக்க, உண்மையான வைரங்களின் மேல் அடையாளக் குறி இடும் முறையை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளது.

— கல்பாக்கம் ராஜு



நாடோடிப் பாடல்கள்



அழுத காரணம்-
அம்மாவின் கேள்வி

மூட்டைப்பூச்சி கடிச்சிருச்சோ — உன்
மேனியெல்லாம் நடுநடுங்க?
தெள்ளுப்பூச்சி கடிச்சிருச்சோ — உன்
தேகமெல்லாம் நடுநடுங்க?

குடையின்கீழ் படுத்தஉன்னைக்
கொசுவந்து கடிச்சிருச்சோ?
பஞ்சணைமேல் படுத்தஉன்னை
பல்லிபய முறுத்திருச்சோ?

அம்மான் கொடுத்தமெத்தை;
அழகான பஞ்சுமெத்தை.
மேனு வலிக்காமே — என்கண்ணே
மெத்தையிலே படுத்துறங்கு.

படம் எடுத்த பாம்பு

மணிப்பிரம்பு போலே
வால்அழகு நாகரே!

சிறுகளகு போலே
படம்எடுக்கும் நாகரே!

குன்றிமுத்துப் போலே
கண்ணழகு நாகரே!


பச்சரிசி போலே
பல்லழகு நாகரே!

குளத்தருகே போகவேணும்
கும்பிடுறேன் நாகரே!

இருபுறமும் படம்ஒடுக்கி,
வழிவிடுவாய் நாகரே!

மூங்கில் இலைமேல்

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே!
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே!





பாடி ஆடும் கிளி

அரச மரத்துக் கிளி
ஆசாரம் பேசும் கிளி
பாலன்வடி வேலன் கிளி
பாடுதுபார்; ஆடுதுபார்!

பூங்கா வனத்துக் கிளி
புதுமை மெத்தப் பேசுங்கிளி
பாங்காய் வளர்த்த கிளி
பாடுதுபார்; ஆடுது பார்!

நந்த வனத்துக் கிளி
நாகரிகம் பேசும் கிளி
நம்பிராஜன் வளர்த்த கிளி
நலமுடனே பாடுதுபார்!

டுண்டுண்டு! டுண்டுண்டு!

ஆத்துக்குள்ளே ரெண்டுமுட்டை
  தத்தளிக்குது;
ஆலங்குடித் தெருவந்து
  நிலைக்குத்துது.
கொட்டங்கச்சிப் பொம்மையெல்லாம்
  கும்மியடிக்குது.
மரப்பாச்சிப் பொம்மையெல்லாம்
  மாலைகட்டுது.
தட்டாரப் பூச்சிவந்து
  தாலி கட்டுது!

அழகு முத்துமாரி

உச்சி மலைமேலே,
ஊமத்தம் பூப்போலே,
பச்சைக் கிளிபோலே,
பறக்கிறாளாம் மாரியாத்தா

ஆதி பரஞ்சோதி,
அழகு முத்துமாரி,
கண்ணனூரு மேடையிலே
பள்ளிகொண்ட தாயி.

சின்னச் சின்ன வண்டி

சின்னச் சின்ன வண்டிகட்டி
செவலைக் காளை ரெண்டுபூட்டி
வாழைக்காய்ப் பாரம்ஏத்தி
வருகிறா ராம் கந்தசாமி



சமர்த்து மாப்பிள்ளை

சமர்த்தான மாப்பிள்ளையைத்
தந்தையார் தேடினராம்.

தேடிப் பிடித்தாராம்,
சிவகங்கை எல்லையிலே.

மாப்பிள்ளை சமர்த்தையே
வாய்விட்டுக் கூறுகிறேன்:

ஆனைமேல் ஏறுஎன்றால்,
பானைமேல் ஏறிடுவார்!

மாடிமேல் ஏறுஎன்றால்,
ஜாடிமேல் ஏறிடுவார்!

ஆத்துக்குப் போஎன்றால்,
ஊத்துக்குப் போயிடுவார்.

அண்டையிலே வாரும்என்றால்,
சண்டைக்கே வந்திடுவார்!





டிஸ்னிலான்டில் பினுக்கியோ!

'கோகுலம்' ஏப்ரல், மே மாத இதழ்களில் பினுக்கியோவின் சாகசங்களைப் படித்து மகிழ்ந்தீர்கள். அமெரிக்காவிலுள்ள டிஸ்னிலான்டிற்குச் சென்றால் அக்கதையில் வரும் பினுக்கியோவைச் சந்திக்கலாம். அவ்வளவு தூரம் போக முடியாதவர்களும், இதோ இந்த எதிர்ப்புறம் உள்ள படத்தில் சந்திக்கலாம்.

வண்ணப்படம்: உத்ரா



சமஸ்கிருதம் பேச்சுமொழி ஆகுமா?

''சமஸ்கிருத மொழி பேச்சு மொழி ஆகுமா?''

''ஏன் ஆகாது? நான் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சம்ஸ்கிருத வார்த்தைகளைக் கற்றுத் தருவதோடு, சம்ஸ்கிருத மொழியிலேயே உரையாடுவது என்று உறுதி கொண்டிருக்கிறேன்!'' என்றார் அந்த இளைஞர்.

கிருஷ்ணசாஸ்திரி என்ற இருபத்தாறு வயதுப் பிரும்மச்சாரிக்கு ஒரே குறிக்கோள் சம்ஸ்கிருத மொழியைப் பேச்சுமொழியாகப் பரப்புவது தான்! கர்நாடகத்தில் அரும்பாடுபட்டு இந்த அரிய பணியைச் செய்து வருகிறார் கிருஷ்ணசாஸ்திரி. பெங்களூரில் இதுவரை நாலாயிரம் பேர்களுக்கு மேல் சம்ஸ்கிருத மொழியில் உரையாட இவர் கற்றுத் தந்திருக்கிறார். சாதி பேதமின்றி ஹரிஜனர் முதல் இன்ஜினீயர், டாக்டர் வரை பலர் இவரிடம் சம்ஸ்கிருதம் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ''அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நாற்பது சம்ஸ்கிருத வார்த்தைகளைக் கற்றுக் கொண்டால் பேச இயலும்'' என்கிறார் இவர்.

இவர் ஓரிடத்தில் பத்து நாட்கள் சம்ஸ்கிருத வகுப்பு நடத்தி, அந்த வகுப்பிலே பயின்ற மாணவரையே சம்ஸ்கிருதத்தில் வரவேற்புரை நிகழ்த்தும்படி செய்து விடுகிறார்!

'சம்ஸ்கிருதம் அந்தணர் பாஷையாயிற்றே!' என்று யாராவது கேட்டால், உடனே அவரிடமிருந்து பளிச்சென்று பதில் கிடைக்கிறது: ''அந்தக் காலத்தில் மகா சம்ஸ்கிருத விற்பன்னர்களாக விளங்கிய வால்மீகியும், வியாசரும், காளிதாசரும் அந்தணர்களா?'' என்று கேள்வி கேட்டு மடக்குகிறார்!

'ஹிந்து சேவா பரிஷ்தான்' என்ற குழு இவரது சம்ஸ்கிருதத் தொண்டுக்கு உதவி வருகிறது! பார்லிமெண்ட் சபாநாயகர் முதல் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் பலர் சம்ஸ்கிருதமொழி கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்களாம்!


''என் வாழ்நாளின் குறிக்கோள் சம்ஸ்கிருத மொழியைப் பேச்சுமொழியாக்கி விடுவதே'' என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறார் திரு. கிருஷ்ணசாஸ்திரி.

—பி. எஸ். மணி




உணவும் உணர்வும்

கத்தரிக்காய், முருங்கைக்காய்
சாம்பாரிலே கிடக்கும் — அம்மா
கசக்கிப்போட்ட கொத்துமல்லி
ரசத்திலேதான் மிதக்கும்.
ஒற்றுமையாய் இருந்தால்தான்
உலகம் நம்மை மதிக்கும்.
ஓயாமல் உழைத்தால்தான்
உயர்ந்த வாழ்வு கிடைக்கும்.




கமகமன்னு பசுவின்நெய்யும்
பருப்புச் சோற்றில் மிதக்கும்
—அம்மா
கடைஞ்செடுத்த மோரால்செய்த
குழம்பு நன்றாய் ருசிக்கும்.
நல்லநல்ல செயல்கள்தானே
நமது புகழைப் பரப்பும்?
நாட்டமுடன் உழைத்தால்தான்
நாளும் வெற்றி கிடைக்கும்.





பாகற்காய் கூட்டுசற்றே
பக்குவமாய்க் கசக்கும்.
பாடுபட்டு உழைத்தபலன்
பலகாலம் நிலைக்கும்.
பாலில் செய்த பாயசம்தான்
பாப்பாவுக்குப் பிடிக்கும்—அதைப்
பருகும்போது அம்மாவுடைய
பேச்சைப் போல இனிக்கும்!


அ.பன்னீர்செல்வம்


அகங்காரமே உருவான சூரபன்மன் ஞானமே உருவான முருகப் பெருமானை எதிர்த்து மோதல் முறையாகத் தோல்வியின் சுவை கண்டான். போரில் புறமிட்டுத் தாபிடியவனைக் கொல்லாது கருணைக் கடலான கந்தவேள் சூரனுக்கு உயிரைப் பிச்சையாக அளித்தார்.
ஆ! அவமானம்! அசுரர்க்கு அரசனாம் எனக்கு இவன் உயிர்ப் பிச்சை இடுவதா?
கதை: சுகிசிவம்
படம்: விநு

வெற்றிவேல் வீரவேல் 9


தோல்வியில் துவண்டான் சூரன். தூக்கம் விலகியது. துக்கம் தழுவியது. மனைவி பதுமகோமளையின் பணிவிடை பயன் இழந்தது.
நாதா! உணவு உண்ணக் கூடாதா?
தந்தையே! வீரர்களுக்குத் தோல்வி சகஜமல்லவா? நாளை போருக்கு நான் போகிறேன். நீங்கள் ஓய்வு கொள்ளுங்கள்.


சூரனுக்காக மகன் பானுகோபனும் முருகனுக்காக தம்பி வீரபாகுவும் படை நடத்தினர். கோட்டை மதில் ஆட்டம் கண்டது. நகருக்குள் கடல் புகுந்தது போல் வீரவாகு படை வெற்றி நடைபோட்டது.
பானுகோபன் பதறினான். பயந்தான். மறைந்தான்.


சூரன் தாயாகிய மாயையின் ஆசியால் பானுகோபன் பெற்ற மாயா படைக்கலத்தை மறைந்திருந்து ஏவினான். தற்காலிகமாக வெற்றி கிடைத்தது. வீரபாகு படை மயங்கி விழுந்தது.


மகனே! மானங்காத்த மகனே! இயமலோகம் சென்ற பிறகு உன் தாய் கொடுத்த உணவு இறங்கியதடா.
இரவில் போர் தொடங்கியது. சூரன் தலைநகராம் வீரமகேந்திரத்தில் வேலவன் படை தன் வேலையைத் தொடங்கியது. நகரமே எரிகிறது. நாடே அழிகிறது.
இரணியன் என்ற சூரன் மகன் தந்தைக்கு அறிவுரை சொன்னான். பயன் இல்லை. போருக்கு வந்தான். அஞ்சினான். கடலில் ஓடி மீனாக ஒளிந்தான். உயிர் பிழைத்தான். பானுகோபனும் அறிவுரை சொன்னான். பயன் இல்லை.
இது ஞானவேல். மாயைப் படையை அழித்து வீரபாகுவை எழுப்பி மீண்டும் நம் வசம்
இது சக்திவேல். இனி இறைவன் அருளால் பானுகோபனைக் கொன்ற பிறகுதான் முருகப் பெருமான் முகத்தில் விழிப்பேன்.
தந்தையே! இறுதி வரும் முன்னர் அறிவுரை கூறவேண்டும். முருகனை வணங்கிச் சேர்வோம். வாழுவோம் வாருங்கள்.
என்ன சொன்னாய்? அசுரர் அரசன் நான்! சிறுவனை வணங்க வேண்டுமோ? கோழையே! உயிர் மேல் ஆசையானால் நீ ஓடு..
பானுகோபன் இறுதிவரை தன் பாதகன் தந்தையின் இயல்பில் இல்லை. தந்தையைக் காக்க போர்க்களம் வந்தான் பானுகோபன். வீரபாகுவின் வீரத்தில் வீழ்ச்சி பெற்றான்.



வீரபாகு! நின் பக்திக்
குப் பரிசாக வேண்டிய
வரங்கள் கேட்கலாம்.
ம்...
பெருமானே! தங்கள் திருவடிக்கு அன்பு
செலுத்தும் அறிவு ஒன்றே என்றும் வேண்டும்.
தருகிறோம். வேறு என்ன வேண்டும்?
கேள்.
வேறு எதுவும் வேண்டாம் என்ற
எண்ணமே தோன்றாமல் இருக்க
நின் அருள் வேண்டும்.
மகனே! கண் மூடி விட்டாயா?
இனி திருமால் துணிவாக
உறங்குவாரே!
சூரியன் தைரியமாகத்
திரிவானே!
அண்ணே! முதலும்
முடிவும் இல்லாத மூர்த்தி
முருகப் பெருமான்.
பாலன் என எண்ணி
இழந்தது போதும்.
ஹ-ஹா!
யாருடைய அறிவுரை
யும் எனக்குத்
தேவையில்லை
உனக்கு வீரம்
இருந்தால் போருக்குப்
போ!



வாகவின் தற்போதைய தேவை இரண்டே இரண்டு ரூபாய்தான். அவனது சகாக்கள் அனைவரும், ''நெஞ்சத்தைக் கிள்ளாதே!'' படத்தைப் பார்த்து விட்டார்கள். இன்னும் அந்தப் படத்தைப் பார்க்காத ஒரே பையன் அவன்தான். அவனும் பல விதங்களில் யோசனை செய்து பார்த்துவிட்டான். எந்த விதத்திலும் அவனுக்குப் பணம் பெயர்க்க வழி கிடைக்கவில்லை.

மாதக் கடைசி ஆகையால் வீட்டில் பணத் தட்டுப்பாடு. அந்த இரண்டு ரூபாய்க்கு வழி இல்லாததால் காய்கறி ஏதும் இல்லாமல் மணத்தக்காளி வத்தல் குழம்போடு பகல் சாப்பாடு முடிந்திருந்தது. இரவு அதுவும் கிடையாது. வெறும் மோர்ச் சாதம்தான்.

வாகவின் கவனம், பாதையில் பெரிய பெட்டி ஒன்றைச் சுமந்தபடி நடந்து வந்து கொண்டிருந்த நடுத்தர வயதுடைய ஒருவரின் மீது சென்றது. சட்டென அவன் மனத்தில் ஒரு திட்டம் தோன்றியது.

அதன்படி அவர் அருகில் விரைந்து சென்று, ''சார்!'' என்று மெல்ல அழைத்தான்.

அவர் திரும்பினார்.

''சார்... அந்தப் பெட்டியை என்னிடம் கொடுங்க சார்... அதை நான் சுமந்து கொண்டு வரேன்... அதற்குக் கூலியா ரெண்டு ரூபாய் மட்டும் தாங்க சார்....''

அவர் ஏதோ கூற வாயெடுப்பதற்குள் வாக மேலே பொரிந்து தள்ளினான். ''சார்... எனக்கு அர்ஜெண்டா இரண்டு ரூபாய் தேவைப்படுகிறது. வெறுமனே கேட்டு வாங்குவதைவிட ஏதாவது ஒத்தாசை செஞ்சிட்டுக் கேட்கலாமென்றுதான் பெட்டியை நான் தூக்கிட்டு வரேன்னு சொன்னேன் சார்.''

''அதென்னப்பா உனக்கு இரண்டு ரூபாய் மட்டும் தேவைப்படுகிற அளவு நெருக்கடி?''

இந்தக் கேள்வியால் ஒரு விநாடி அயர்ந்து போன வாக, சட்டென ஒரு பொய்யைக் கோத்தான்.

''உண்மையில் எனக்கு ஐந்து ரூபாய் தேவை சார்... நான் பத்தாவது படிக்கிற பையன். கிறிஸ்துமஸ் லீவு சாதாரணமாகப் பத்து நாள்தான் விடுவாங்க.... ஆனால், உலகத் தமிழ் மகாநாடு நடக்கப் போகிறதினாலே, கூட 15 நாள் பொங்கல் முடியற மட்டும் நீட்டிச்சிருக்காங்க. அதாவது கிட்டத்தட்ட இருபத்தி ஐந்து நாள் ஸ்கூல் கிடையாது. அதனாலே இத்தனை நாட்களை வீணாக்காமல் ஏதாவது சம்பாதிக்க விரும்பறேன் சார்... எங்க வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு பாட்டி முறுக்குச் சுட்டு மொத்த விலைக்குத் தாராங்க. ஏதாவது சினிமாத் தியேட்டர் போன்ற இடங்களிலே மொத்தமாய் விற்று என் கைச் செலவுக்குப் பணம் சேர்க்கலாமே என்று நினைத்தேன். ஆனால், அந்தப் பாட்டி குறைஞ்சது ஐந்து ரூபாயாவது முன் பணம் கட்டினால்தான் சரக்கைத் தருவேன் என்று கண்டிப்பாய்ச்சொல்லிவிட்டாள். அதனால் நாலு பேருக்கு ஏதாவது ஒத்

தாசை செய்து பணம் சேர்க்கலாம் என்று இருக்கிறேன்....''

அந்த மனிதரின் முகம் மலர்ந்தது. ''குட்'' என்றபடி பெட்டியை அவனிடம் கொடுத்தார்.

அவரைத் தொடர்ந்து நடந்தான், வாசு. அவரது வீடு வந்ததும் பெட்டியை அவர் சொன்னபடி ஹாலில் வைத்தான்.

தன் பாக்கெட்டிலிருந்து பர்ஸை எடுத்தவர் ஒரு ஐந்து ரூபாய்த் தாளை எடுத்து அவனிடம் நீட்டினார்.

வாசு திகைத்துப் போனான். அந்தப் பணத்தை வாங்காமல், ''சார்... என்னிடம் சில்லறை இல்லை....'' என்று திணறினான்.

அவன் கையில் அந்தப் பணத்தைத் திணித்த அவர் கனிவுடன் சொன்னார்: ''தம்பி... உன் பேர் என்னவென்று தெரியவில்லை...ஆனால், சோர்ந்துபோன என் மனசுக்கு ஒரு புதுத் தெம்பைத் தந்து விட்டாய்.

''நான் அமெரிக்காவில் வசிப்பவன். பத்து ஆண்டுகளாக அங்கேயே வசித்து லீவுக்காக இங்கே வந்துள்ளேன். அங்கு உன் போன்ற இளைஞர்கள் காலம் எத்தனை பொன்னானது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நேரத்தை வீணாக்காமலும், அதே சமயத்தில் பெற்றோருக்குப் பாரமாக இல்லாமலும், படிக்கும்போதே ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டு சம்பாதிக்கிறார்கள். அதை நேரே கண்ட நான், அவர்களை நம் நாட்டு இளைஞர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பேன். மனசுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கும். இப்பொழுதுகூட நான் வரும்போது நாலைந்து இளைஞர்கள் 'காலேஜுக்கு லீவு விட்டாச்சு... சுத்த போரடிக்குதுடா!' என்று பேசியவாறு வீண் அரட்டை அடித்துக் கொண்டு போவதைப் பார்த்து, ''நம் நாட்டுக்கு இப்போதைக்கு விமோசனம்கிடையாதா?'' என்ற மன வேதனையுடன் வந்து கொண்டிருந்தேன். அப்போது நீ எதிர்ப்பட்டாய்... சுமக்கிற வேலை... கூலி வேலை... இதெல்லாம் கேவலம் என்று கருதாது நீ கூலி வேலை செய்ய முன் வந்து அதற்கான காரணத்தையும் சொன்னதும் நான் அடைந்த மகிழ்ச்சி சாதாரணமானதல்ல: ஒளி நிறைந்த எதிர்காலம் நம் நாட்டிலும் மலரும் என்ற நம்பிக்கையில் இந்த ஐந்து ரூபாயை உனக்குத் தருகிறேன். இதில் இரண்டு ரூபாய்தான் உன் பணம்... மீதியைக் கடனாக நினைத்து வாங்கிக் கொள். இந்தப் பணத்தில் நீ ஆரம்பிக்கும் தொழில் வெற்றி யடைந்து இலாபம் பெற்றதும், இதைத் திருப்பிக் கொடுத்தால் போதும்... உன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது... விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்...'' என்றபடி அவர் பெட்டியுடன் உள்ளே சென்றார்.

வாசு அந்த ஐந்து ரூபாயையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சினிமாப் பார்ப்பதற்காக தான், பொய் சொன்னதை உண்மை என்று நம்பி, ஐந்து ரூபாயை மனமுவந்து தந்த அந்த நபரின் மலர்ந்த முகம் மனக் கண் முன் நின்றது.

அவரது பேச்சு அவனது நெஞ்சத்தைக் கிளறியது.

அவர் சொன்னது மீண்டும் அவன் நெஞ்சில் அலை மோதியது.

அவரிடம் சொன்ன பொய்யை உண்மையாக்கினால் என்ன?

உண்மையிலேயே அவனது பக்கத்து வீட்டுப் பாட்டி பட்சணம் செய்து விற்பவள்தான். அவனது உயிர்த் தோழன் சந்தானத்தின் தகப்பனார் ஒரு சினிமாத் தியேட்டரில் மானேஜர். சந்தானத்திடம் சொன்னால் கட்டாயம் இந்த உதவியைச் செய்வான்.

ஆனால்... ஆனால்... இவன் இந்த வேலையைப் பார்ப்பது இவனது நண்பர்களுக்குத் தெரிந்தால், இவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டுமே? ''செய்யும் தொழிலில் பேதமில்லை'' என்று ஏதோ ஒரு விழாவில் நண்பர்களோடு சேர்ந்து பாடவில்லையா?

அவன் மீண்டும் அந்த ஐந்து ரூபாயை உற்றுப் பார்த்தான். அதன் ஒரு பக்கத்தில் அசிடப்பட்டிருந்த அசோக ஸ்தம்பத்தில் அந்த மனிதரின் முகம் தெரிந்தது.

அவன் மனத்திலும் ஓர் உறுதி பிறந்தது!

இசைக் கருவிகள்:

(1) தோலால் செய்ததுதான். ஆனால் தங்கம் என்கிறார்களே! அது என்ன?

(2) புல்லைப் பெயரில் கொண்டுள்ளது. ஆனால், பிறப்பிடம் மூங்கில் அல்லவோ?

(3) அருச்சுனனுக்குத் தெரியாத வில் எது?

(4) தட்டினால் தாளம்; கொட்டினால் ஏனம். அது எது?

இசைக் கருவிகள்:

(1) மிருதங்கம் (2) புல்லாங்குழல் (3) தவில். (4) கடம்.

—எம். ஆர். ஸ்ரீபிரியா

விஞ்ஞான விளையாட்டு

ஆர். பி. சாரதி


மர்ம எழுத்தும் பறக்கும் எழுத்தும்

உங்கள் பள்ளி சாரணர் முகாம்களில் புதையல் தேடும் விளையாட்டு விளையாடி இருக்கிறீர்களா? புதையல் தேடும்போது சாரணருக்கு உதவச் சில ரகசியக் குறிப்புகளை எழுதி மறைத்து வைப்பார்கள். அந்தக் குறிப்புகளை மர்ம முறையில் எழுதினால் இன்னும் வேடிக்கைதானே!

எலுமிச்சம்பழச் சாற்றில் சர்க்குச்சியாலோ, ஏன், பேனா முள்ளினாலோ கூடத் தோய்த்து எழுதி விடுங்கள்... உலர்ந்து விட்டால் ஒன்றும் தெரியாது. அதே காகிதத்தை விளக்குச் சுடர் முன்னே கொண்டு போய் வைத்துக் கொண்டு பாருங்கள். காகிதத்தில் தண்ணீரில் எழுதியது போல நீரோட்டமாக எழுதியது நன்றாகத் தெரியும். படித்துப் பாருங்கள்!

எலுமிச்சைச் சாற்றைப் போலவே இரசாயனப் பொருட்கள் கடையில் கிடைக்கும். 'வினகார்' என்ற திரவத்தையும் பயன்படுத்தலாம்.

இதைவிட வேடிக்கையானது இன்னொரு முறை! பயன்படுத்த வேண்டிய திரவம் பொட்டாஷியம் அயோடைடாக இருந்து விட்டால் படுகுஷிதான்! இதுவும் இரசாயனப் பொருட்கடையில் கிடைக்கும். பள்ளி அறிவியலகத்திலும் கிடைக்கும். விலைதான் அதிகம்! இதில் தோய்த்து எழுதி விட்டால் மறுபடியும் எப்படிப் படிக்க வேண்டும் தெரியுமா? எரியும் ஊதுவத்தியால் எழுதிய எழுத்தின் தொடக்கத்திலிருந்து வைத்துக் கொண்டே போனால், எழுதிய பகுதி எழுத்து வடிவில் மட்டும் எரிந்து கொண்டே போகும். 'கட்—அவுட்'டில் பார்ப்பது போல எழுதியதைப் படிக்கலாம்!



மர்ம எழுத்தைப் போல எளிதல்ல பறக்கும் எழுத்து! மெல்லிய, ஆனால் மிக உறுதியான கண்ணாடி ஸ்லேப், தரமான கலப்பற்ற பட்டு அல்லது கம்பளம், கிளிசரின், டிஷ்யூ காகிதப் பொடித் துண்டுகள் எல்லாம் தேவை!

கண்ணாடி ஸ்லேபில் கிளிசரினில் குச்சியால் தோய்த்து A, I, T, போன்ற எழுத்துக்களை எழுதுங்கள். (மற்ற எழுத்தானால் திருப்பி எழுத வேண்டும். அது மேலே படிக்கப் படிக்க உங்களுக்கே புரியும்). (எழுதிய பக்கம் கீழ்ப்புறமாக) அந்தக் கண்ணாடித் துண்டின் இரு பக்கங்களும் இரண்டு கனமான புத்தகப் பக்கங்களுக்கு இடையில் நேராகப் பொருந்தும்படி, மேஜைமீது வைத்து விடுங்கள். மேஜைக்கும் கண்ணாடி ஸ்லேபிற்கும் உள்ள உயரம் (ஒரு அங்குலத்துக்கும் குறைவாக) சுமார் 2 சென்டி மீட்டருக்கு மேல் இருக்க வேண்டாம். மேஜை மீது, எழுத்துக்குக் கீழே, மிக மெல்லிய டிஷ்யூ பேப்பர் பொடிப் பொடியான துண்டுகளைப் பரப்பி விடுங்கள். கண்ணாடி ஸ்லேப் அசையாமலிருக்க உங்கள் நண்பர்கள் புத்தகத்தை அழுத்திப் பிடித்துக் கொள்ளட்டும். மறந்து விடாதீர்கள். எழுதிய பக்கம் கீழே டிஷ்யூ காகிதத் தூளுக்கு மேலே அருகே இருக்கவேண்டும். இப்போதுதான் உங்கள் சாமர்த்தியம்! உங்கள் பட்டின் தரம் தெரிய

வேண்டும்! பட்டு அல்லது கம்பளித் துண்டால் எழுத்தின் மேற்புறம் அழுத்தித் தேயுங்கள்!

கைவலிக்கிறது என்று குற்றம் சொல்லாதீர்கள்! டிஷ்யூ தாள், உங்கள் முயற்சியால் உருவாகும் 'ஸ்டாடிக் கரன்ட்'டால் மேலே எம்பி இனிசரினில் பறந்து வந்து ஒட்டிக்கொள்ளும்! மேற்புறம் பார்த்தால் வெள்ளையாக A. I. T என்ற எழுத்துக்கள் தெரியுமல்லவா?

எந்த எழுத்தையும் எழுதலாம். கீழ்ப்புறக் கண்ணாடியில் ⅄ என்று எழுதினால்தான் மேலே அ என்று தெரியும்! அது உங்கள் சாமர்த்தியம்! கம்பளி அல்லது பட்டு தரம் குறைவானதாக இருந்தாலோ, காகிதத்தாள் பெரிதாக கனமாயிருந்தாலோ, போதுமான அளவு தேய்க்காவிட்டாலோ எழுத்து பறக்காது! நீங்கள்தான் பறக்க வேண்டும்! தலைமயிரில் (தொடர்ந்து) தேய்த்த பிளாஸ்டிக் சீப்பைச் சிறுசிறு காகிதத் துண்டருகே கொண்டு போனால், சீப்பில் காகிதத் துண்டு ஒட்டிக் கொள்ளுமல்லவா? அதே போலத்தான் இதுவும்!


ஜுரமானி காண்போமா?

தலைவலி, ஜுரம் என்று நீங்கள் சொன்னால் முதலில் உங்கள் அம்மா நெற்றியிலும் நெஞ்சிலும் கைவைத்துப் பார்க்கிறார்.

''உடம்பு சுடுகிறதே! டாக்டரிடம் போவோம்'' என்கிறார்.

டாக்டர் உடலின் வெப்பநிலையை... எவ்வளவு சுடுகிறது என்ற அளவுதான்... உங்கள் வாயில் தெர்மாமீட்டரை வைத்துக் கணக்கிட்டுச் சொல்லிவிடுகிறார்!''99° ஜுரம்...100 அல்லது 100.5° என்று சொல்லுவார். ஆம். இது பாரன் ஹீட் அளவு முறைதான்! சென்டிகிரேட் முறையில் செல்ஷியஸ் டிகிரி அளவு நடைமுறைக்கு வந்து விட்டாலும் பழக்கம் மாறவில்லை.

சாதாரண நிலையில் நம் உடலில் வெப்ப நிலை 98.4F என்பதெல்லாம் தெரிந்த விஷயம்... 'இந்தத் தெர்மா மீட்டர் எப்படி வேலை செய்கிறது?' என்று பார்ப்போமா?



ஒரு புட்டியில் பாதியளவுக்கு மேல் தண்ணீர் இருக்கட்டும்... புட்டியைத் துவாரம் ஒன்று உள்ள கார்க் அல்லது ரப்பர் அடைப்பானால் மூடி, துவாரத்தில் ஒரு கண்ணாடிக் குழாயைத் தண்ணீரைத் தொடும்படி செருகு... தண்ணீர் சற்றுக் கண்ணாடிக் குழாயில் கூட ஏறும். அப்படியே அதை வாய கன்ற பாத்திரத்திலோ பெரிய தட்டிலோ வை. இப்போது புட்டி மீது படும்படி சூடான வெந்நீரை ஊற்றிக் கொண்டே இரு. கண்ணாடிக் குழாயின் தண்ணீர் வெப்பத்தால் மேலே மேலே ஏறுகிறது. இப்படித்தான் உடல்நிலை வெப்பமும் ஏற ஏற ஜுரம் அதிகரித்து 100, 101 102 என்று டாக்டர் சொல்லுகிறார். மருந்து குடித்து ஜுரம் இறங்குவது போல இப்போது குளிர்ந்த நீரைப் புட்டியில் படும்படி ஊற்றிக் கொண்டே இருந்தால் கண்ணாடிக் குழாயுள்ளே நீரும் மெல்ல மெல்ல இறங்கும்.

டாக்டரின் தெர்மா மீட்டரை ஒருநாள் கையில் வாங்கிப் பார். அதில் எண்கள் குறித்திருக்கும். மனிதரின் சராசரி வெப்பநிலையைக் குறிக்கும் 98.4F' என்ற நிலையில் பளிச்சென்று தெரியும்படி சிவப்பு அம்புக்குறி அல்லது கோடு அடையாளமிருக்கும். நம் கண்ணாடிக் குழாயில் வெறும் தண்ணீரல்லவா ஏறி இறங்கியது? தெர்மா மீட்டரில் இதற்குப் பயன்படுத்தப்படுவது என்ன தெரியுமா? பாதரசம்தான்!

டாக்டர் பயன்படுத்தும் தெர்மா மீட்டர், காலநிலையறியும் வெப்பமானிகள் உங்கள் பள்ளி அறிவியல் கூடங்களிலும் இருக்கும். பார்க்காதவர்கள் ஆசிரியரின் அனுமதியுடன் அவற்றை அருகே சென்று பாருங்களேன்!



குதுப்மினாரின் உச்சியிலே குண்டு

— எம். சோலையன் —

குண்டுகளிலே பலவகை உண்டு. ஹைட்ரஜன் குண்டு! இதற்குப் பாரபட்சம் காட்டும் பழக்கம் கிடையாது. கட்டிடங்கள் ஆகட்டும்; மனிதர்கள் ஆகட்டும்; கட்டெறும்புகள் ஆகட்டும்; எல்லாமே சட்டினிதான்; சர்வ நாசந்தான்!

அடுத்தது நியூட்ரான் குண்டு! இது தோலிருக்கச் சுளைவிழுங்கி ரகம். கட்டிடங்கள் எல்லாம் அப்படியே இருக்க, உயிரினங்கள் மட்டும் ஒழிந்து போய்விடும்!

மேலே சொன்ன குண்டுகளைக் காட்டிலும் அபாயமானவன்தான் குண்டு எனச் செல்லமாக அழைக்கப் பெறும் குண்டுமணி. அவன் தற்போது இருக்கும் இடமோ குதுப்மினாரின் உச்சி!

முதல் உப்பரிகையின் கைப்பிடிச் சுவரில் அமர்ந்துகொண்டு அவன் கத்துவது உங்கள் காதுகளில் விழுகிறதா?

''விலகுங்கள்! விலகுங்கள்! நான் கீழே குதிக்கப் போகிறேன்! ஏன் அப்படிக் கையை ஆட்டுகிறீர்கள்? ஓ...! நான் குதிக்கக் கூடாதா? அப்படியானால் ஒரு நிபந்தனை! குதுப்மினார் என்ற பெயரை மாற்றிக் குண்டுமினார் என்று என் பெயரால் இக்கட்டிடத்தை இனி அழைக்க வேண்டும்!...ஊஹூம். நீங்கள் தலையை ஆட்டினால் மட்டும் போதாது! யாராவது அதிகாரி வந்து உறுதிமொழி தர வேண்டும்! இல்லாவிட்டால்.....?''

கீழே நின்றவர்களுக்கு அவன் கத்தியது காதில் விழுந்ததோ என்னவோ! ஆனால், முதல் உப்பரிகையிலேயே நின்றுகொண்டிருந்த அய்யாசாமியின் காதுகளில் தேள்கள் வந்து பாய்ந்து கொட்டின! எல்லாம் அவனால் வந்த வினைதானே! அது என்ன கதை என்று கேட்கிறீர்களா?

டில்லியில் இருக்கும் அத்தையைக் காண வந்திருந்தான் அய்யாசாமி. அப்படியே அதிலிருக்கும் குதுப்மினாரைக் காண ஒரு பஸ் பிடித்துப் போனான்.

ஆகா! என்ன நேர்த்தியான கோபுரம்! படிப்படியாகத் தாவி ஏறினான் அய்யாசாமி. முதல் தளத்தை அடைந்ததும் அங்கிருந்தபடியே கீழே பார்த்தான். மனிதர்கள் எல்லாம் கட்டெறும்புகளாகக் காட்சி அளித்தார்கள்!

அவன் பார்வையைத் திருப்பிச் சுவரை நோக்கினான். சுவரெங்கும் கிறுக்கல்களும் கீறல்களும் காணப்பட்டன. பல்வேறு மொழிகளில் அங்கு விஜயம் செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அய்யாசாமி மட்டும் சும்மா விடுவானா?

கீழே கிடந்த கரித்துண்டை எடுத்து 'எருமைப்பட்டி அய்யாசாமி' என்று சுவரில் பெரிதாக எழுதினான். சற்று நேரம் அவன் யோசித்தான். பிற்காலத்தில் வரப் போகும் வரலாற்று ஆசிரியர்களுக்குத் தொல்லை தர அவன் விரும்பவில்லை. எனவே 7.7.83 என்று, தான் விஜயம் செய்த காலத்தையும் தெளிவாகப் பொறித்து வைத்தான்.

சற்று நேரத்திற்குப் பிறகு, அவன் கீழே இறங்கி வந்தபோது, கோபுரத்திற்கு எதிரில் இரும்புத்தூண் ஒன்றைக் கண்டான். அத்தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன். தன் இரு கைகளையும் பின்புறமாக நீட்டித் தூணை வளைத்த வண்ணம் கைகளை இணைக்க முயன்று கொண்டிருந்தான் அவன்.

''ஏன் அப்படிச் செய்கிறாய்?'' என்று கேட்டான் அய்யாசாமி. கேட்டதற்குப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டான் அவன். டில்லியில் தமிழ் யாருக்கும் தெரியாதே!

ஆனால், என்ன வியப்பு! தூணில் சாய்ந்திருந்த சிறுவன் பட்டென்று தமிழில் பதிலளித்தான்:

''கைகள் இரண்டும் தொட்டால் போதும்! ராஜா ஆகிவிடலாமாம்! என் பாட்டி சொன்னாள்!''

மார்பை நிமிர்த்தியவாறு பேசி முடித்தான் அச்சிறுவன். அவன் அணிந்திருந்த பனியனில்' யமகா' (Yamaha) என்ற ஆங்கில வாசகம் மின்னியது.

மூச்சைப் பிடித்துக் கொண்டு அச்சிறுவன் முயன்று முயன்று தோற்றபோது கலகலவெனச் சிரித்து விட்டான் அய்யாசாமி. சிறுவனுக்கு வந்ததே கோபம்!

''என்னைப் பார்த்தா சிரிக்கிறாய்? இந்தக் குண்டுமணி யாரென்று உனக்குத் தெரியாது! இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த ஊரையே கதிகலங்க வைக் கிறேன் பார்!'' என்று சொல்லிய வண்ணம் குதுப்மினாரை நோக்கி ஓடிப் படிகளில் தாவி ஏறினான் அவன்.

அவன் அப்படி என்ன சாகசம் செய்யப் போகிறான் என்பதைப் பார்ப்ப தற்காக அவனைப் பின் தொடர்ந் தான் அய்யாசாமி.

குண்டுமணி செய்த சாகசம் இது தான்: முதல் தளத்தின் கைப்பிடிச் சுவரில் அமர்ந்துகொண்டு கீழே குதிக்கப் போவதாகப் பயமுறுத்தத் தான் அவனால் முடிந்தது!

சிறிது நேரத்தில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் மேல் தளத்திற்கு வந்தார். அவர் தூரத்திலேயே நின்று பேச வேண்டும் என்று உத்தரவிட் டான் குண்டு. அருகில் நெருங்கினால் கீழே அவன் குதித்து விடுவானாம்!

அந்த இன்ஸ்பெக்டரோ இனிமை யாகப் பேசினார். தட்டு நிறைய ஜாங்கிரி வரவழைத்தார்: ரசகுல்லா வரவழைத்தார்....

ஊஹூம்! குண்டுமணி அசைந்து கொடுக்கவில்லை. 'குண்டுமினார்' என்று பெயர்ப் பலகை எழுதி, உடனே மாட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தான்.

பிரபல சினிமா நடிகர் கஜினி காந்தைக்கூட வரவழைத்துப் பேசவைத் தார் இன்ஸ்பெக்டர். ம்ஹூம், குண்டு மணி பிடித்த பிடியை விடவில்லை.

அப்போது அந்த உப்பரிகைக்கு இரண்டு சாமியார்கள் வந்து சேர்ந் தார்கள். குண்டுமணி நடத்தும் கூத்தைப் பார்த்து மூக்கில் விரலை வைத்தார்கள்.

அவர்களில் ஒருவர் மிளகாய்ப்பழச் சாமியார். மற்றொருவரோ வேப்பம் பழச் சாமியார். மிளகாய்ப் பழச் சாமியாருக்குத் தாடி, மீசை, சடைமுடி உண்டு. வேப்பம்பழச் சாமியாரோ மழுமழுவென்று மொட்டைத் தலையுடன் பளபளப்பவர்!

குண்டுமணியின் பனியனில் இருந்த 'யமகா' என்னும் வாச கத்தைப் படித்த இன்ஸ்பெக்டர், 'யமகாதகப் பயல்' என்று முணு முணுத்தார்.


''ஏதோ சினிமா ஷூட்டிங் நடக் கிறது!'' என்று கிசுகிசுத்தார் மிள காய்ப்பழச் சாமி!

''உமக்கு அறிவு இருக்காங்காணும்? இங்கேயெல்லாம் ஷூட்டிங் எடுக்க விடமாட்டாங்க!'' என்று கடுமை யாகப் பேசினார் வேப்பம்பழச்சாமி.

மிளகாய்ப் பழச்சாமிக்குக் கோபம் வந்தது. வேப்பம்பழச் சாமியின் குட மிளகாய் மூக்கைப் பார்த்து 'ஜிவ்' வென்று ஒரு குத்து விட்டார்! பதிலுக்கு வேப்பம்பழச்சாமி அவர் சடைமுடியைப்பற்றி இரண்டு குலுக்குக் குலுக்கினார்!

இந்தக் கைகலப்பினால் அவர்களுடைய தோள்களில் தொங்கிய பைகளிலிருந்து வேப்பம்பழங்களும், மிளகாய்ப் பழங் களும் கீழே விழுந்து உருண்டோடின.

இந்தப் பழங்கள் எல்லாம் எதற்கு என்று கேட்கிறீர்களா? மிளகாய்ப் பழச்சாமி ஒரு நாளைக்கு ஒரு வேளை




குழந்தைகள் தினம்

இந்தியாவில் குழந்தைகள் தினம் என்பது நவம்பர் 14.

ஜப்பானில் குழந்தைகள் தினம் ஐந்தாம் மாதம் ஐந்தாம் நாள் (மே 5) கொண்டாடப்படுகிறது, பல நூற்றாண்டுகளாக.

ரஷ்யாவில் குழந்தைகள் தினம் ஜூன் முதல் நாள் கொண்டாடப் படுகிறது. ஐக்கிய நாடுகள் குழந் தைகள் தினமும் இதுவே.

-டி. எஸ். வி.



மட்டும் ஒருபிடி மிளகாய்ப் பழங்களை உண்பாராம். வேப்பம்பழச் சாமியோ ஒருநாளைக்கு ஒருவேளை அரைப்பிடி வேப்பம் பழங்களை உண்பாராம். இவர்களுக்கு வேறு ஆகாரம் ஏதும் இல்லையாம்! (ஆனால், இவர்கள் டில்லி பீமவிலாஸ் ஒட்டலில் கிலோ கணக்கில் ஹல்வாவும், டஜன் கணக்கில் மசாலா தோசையும் பார்சல் கட்டிப் போவதாக வதந்தி உலவுவது வேறு விஷயம்!)

சாப்பாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டே சண்டையை மறந்துவிட்டோமே! அதோ சாமியார்கள் இருவரும் மேல்தளத்தில் கட்டிப் பிடித்தவாறு உருண்டு புரண்டு என்ன அழகாகச் சண்டை போடுகிறார்கள்! இப்பொழுது மிளகாய்ப் பழச்சாமியைக் கீழே தள்ளி, மேலே ஏறி அமர்ந்துவிட்டார் வேப்பம்பழச்சாமி!

இன்ஸ்பெக்டரோ குண்டுமணியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். இதற்குள் தீயணைக்கும் படைக்கும் அவர் செய்தி அனுப்பி இருந்தார். அவர்கள் தயாராகக் கீழே விரித்த வலையைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். குண்டுமணி கீழே குதித்துவிட்டால், வலையில் தாங்கிப் பிடிக்கலாமே என்றுதான்! ஆனால், குண்டுமணி கீழே குதித்தபாடுமில்லை; கைப்பிடிச் சுவரை விட்டு இறங்கிவந்த பாடுமில்லை!

அதிர்ஷ்ட வசமாகச் சாமியார்களின் சண்டையைப் பார்த்தான் குண்டு! உடனே கைப்பிடிச் சுவரை விட்டுக் கீழே இறங்கி அவர்களுக்கருகே ஓடினான். ''விடாதே! குத்து! ஹூம்! அப்படித்தான்!'' என்று வேப்பம்பழச் சாமிக்கு அவன் உற்சாகம் ஊட்டினான்.

அடுத்தகணம் மீனைக் கொத்தும் கொக்கைப்போல 'லபக்'கென்று பாய்ந்து குண்டுமணியை அமுக்கிப் பிடித்தார் இன்ஸ்பெக்டர். அவருடைய பூட்ஸ் காலில் பட்டு நசுங்கிய வேப்பம் பழத்திலிருந்து பளபளப்பான ஒரு பொருள் பிதுங்கிக் கொண்டு வெளியே வந்தது. இன்ஸ்பெக்டர் கீழே குனிந்து எடுத்துப் பார்த்தார். வைரக்கல்!

ஆச்சரியம் தாளாமல் இன்ஸ்பெக்டர் கீழே கிடந்த மிளகாய்ப் பழத்தைப் பிட்டுப் பார்த்தார்! அதிலிருந்தும் இரண்டு வைரக் கற்கள் விழுந்தன! அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரின் கண் சாடையைப் புரிந்து கொண்ட காவலர் இருவர், போலிச் சாமியார்கள் மேல் பாய்ந்து அவர்களை நண்டுப்பிடி போட்டுப் பிடித்தனர். பிளாஸ்டிக்கினால் ஆன பழங்களையும் சேகரித்துக் கொண்டனர்.

அப்புறம் என்ன?

கடத்தல் வியாபாரம் செய்த போலிச் சாமியார்கள் மூக்கைச் சிந்திய வண்ணம் அழுது வடிந்து கொண்டு போலீஸ் ஜீப்பில் ஏறிக் கொண்டிருந்தார்கள். குண்டுமணியும் போலீஸ் ஜீப்பில் ஏறிப் போகிற சமயம் ஒரு கார் வந்து அருகில் நின்றது.

''மன்னிக்கணும் இன்ஸ்பெக்டர் சார்! அவன் என் பையன்தான்! கொஞ்சம் புத்தி சுவாதீனம் இல்லாதவன்! ஹி! ஹி!'' என்றார், பீமவிலாஸ் ஒட்டல் அதிபர் பெருமாள்சாமி.

சற்று நேரத்திற்கெல்லாம் குண்டுமணி வெகு ஜோராகத் தந்தையின் அருகில் காரில் அமர்ந்துகொண்டு, 'பீம்! பீம்!' என்று ஹாரனை அழுத்திக் கொண்டிருந்தான்.

இவ்வளவு ரகளை ஏற்படுவதற்கும் காரணமான அய்யாசாமியோ பஸ்ஸ்டாண்டை நோக்கி நிம்மதிப் பெருமூச்சுடன் நடந்து கொண்டிருந்தான்!

ஆகாயத்தில் பறந்தவன்!

'அழகி'



கோடீஸ்வரர் சபஸ்தியான் அவசர அவசரமாகக் காவல் நிலையத்துக்கு வந்தார். காவல்துறை அதிகாரியிடம் தம் மகன் மைக்கேலைக் காணவில்லை என்று திக்கித் திணறிக் கூறினர்.

பெரும் பணக்காரரான அவர், வீட்டிலிருந்தபடியே போலீஸ் அதிகாரியைத் தொலைபேசி மூலம் தம்மிடம் வரச் செய்து தகவல் கூறியிருப்பார். ஆனல், சற்றுமுன் வீசிய பேய்க் காற்றினல் டெலிபோன், ரேடியோ, டெலிவிஷன் — எதுவுமே இயங்காத அளவுக்கு நாசமாகிவிட்டிருந்தன.

''எப்போதிலிருந்து காணவில்லை?'' என்ருர் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''இந்தக் காற்று அடிக்கிறதுக்கு முன்னே, எங்கள் வீட்டின் முன்னலே தான் விளையாடிக் கொண்டிருந்தான்''

''இப்போ ஒரு மணி நேரமிருக்குமே! காற்று நின்றதும் பையனைத் தேடிப் பார்த்தீங்களா?''

''ஆமாம் ஸார். காற்று பலமாக அடிக்க ஆரம்பிச்சது. அப்பவே வெளியே தேடலாம்னு பார்த்தேன் — ஆனல் —''

''என்ன ஆனல்?''

''ஆனல், நாங்கள் யாருமே வெளியே வர முடியலே — வீட்டுக்குள்ளே இருந்த ஒவ்வொருத்தரும் உருண்டு விழுந்திட்டோம், காற்று வேகத்திலே!''

''அதே மாதிரி ஆபத்து உங்கள் மகன் மைக்கேலுக்கும் ஏற்பட்டிருக்கலாம் — இல்லையா?''

''ஆமா. ஆனல், என் வேலையாட்கள் வலை போட்டுத் தேடிப் பார்த்திட்டாங்க. எனக்கு அவனை யாராவது கடத்திட்டுப் போய்ட்டாங்களோன்னு சந்தேகமா இருக்கு.''

''ஓ! அப்படியா! அப்படியும் இருக்கலாம். ஆனல், அதை இப்போ உறுதிப்படுத்த முடியாது.''

''அப்படியானல்?...''

''நீங்க இப்போ ரிப்போர்ட் எழுதிக் கொடுத்திட்டு வீட்டுக்குப் போய் இருங்க... ஒருவேளை பையனைக் கடத்தினவங்க பணத்துக்காக உடனே உங்களுக்குக் கடிதம் எழுதினலும் எழுதுவாங்க.''

''ஐயோ! அப்படி இருக்கக்கூடாது.''

''சரி, அப்படி இல்லாமல் இருந்தால் நல்லதுதான். ஒருவேளை ஏதேனும் வந்தால், உடனே அதை இங்கே கொண்டு வாங்க.''

''சரி'' என்று வருத்தத்துடன் விடைபெற்றுச் சென்ருர் அந்தக் கோடீஸ்வரர்.

சபஸ்தியானும், அவர் மனைவி மேரியும் கவலையுடன் கடிதம் வரும்..., ஃபோன் கால் வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. ஆனல், அவரவர் மனம் அவர்களிடம் பேசியது.

''பையன் என்ன ஆனன்? கடத்தியிருந்தால் என்ன கொடுமைப் படுத்துருங்களோ? கடத்தப் படாமல் இருந்தால், காற்று அடிச்சு உருட்டி என்ன செய்திருக்குமோ?''

இப்படி இருவரும் ஒவ்வொரு விநாடியும் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தனர். மூன்ரும் நாள் பகல்

12 மணி. தபால்காரர் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப்போனார்.

சபஸ்தியான் உடனே ஆவல் மீறக் கடித உறையைக் கிழித்துப் பார்த்தார். அவர் அருகே ஓடிச் சென்று அவர் மனைவியும் கடிதத்தை எட்டிப் படித்துக் கொண்டிருந்தாள்.

கடிதத்தில் உள்ளதைக் காண்பதற்கு முன், சில சம்பவங்களை அறிந்து கொள்ள வேண்டும். அச்சம்பவங்கள், வீட்டுக்கு வெளியே மைக்கேல் நின்று கொண்டிருந்தான் அல்லவா? — அப்போது காற்று பலமாக வீசியதிலிருந்து நடந்தவை:



கையிலிருந்த பந்தைப் போட்டுப் போட்டுப் பிடித்தான் மைக்கேல். சிறிது நேரத்தில் தன் நண்பர்கள் வந்து விடுவார்கள், அவர்களுடன் சேர்ந்து விளையாடலாம் என்பது அவன் நினைப்பு.

ஆனால், வீட்டுக்கு முன்னால் விழுந்த பந்தைக் குனிந்து எடுத்துக் கொண்டிருந்த மைக்கேலுக்கு என்ன நடந்தது என்று அறியவே சற்று நேரம் சென்றது.

சற்று முன் மெல்லிய இரைச்சல் போலிருந்த ஏதோ சத்தம், காதையே பிளப்பது போலக் கேட்டது. அடுத்த நொடி, மைக்கேல் ஆகாயத்தில் பறந்தான்! தரையில் எப்படி நின்றிருந்தானோ அதேபோல, காற்றில் மிதந்து சென்றான். காற்று அவனை எங்கெங்கோ கொண்டு சென்றது.

மைக்கேல் பதறிப் போனான். ஒரே பயமாகவும் இருந்தது. கூச்சலிட்டான். அதேசமயம், ஆகாயத்தில் பறப்பதற்கு ஆனந்தமாகவும் இருந்தது. அதனால் வேடிக்கை பார்க்கும் ஆசையில் சுற்றிலும் பார்த்தான். தன்னைப் போலவே ஒரு குதிரை சற்றுத் தொலைவில் பறந்து வந்தது — நின்ற நிலையில்!

கீழே பார்த்தான். செய்து வைத்த சின்னச்சின்னப் பொம்மைகளைப் போலக் குடிசைகள், மாடிகள், சாலைகள், மரங்கள், வாகனங்கள் — தெரிந்தன! எல்லாம் உடம்பைப் புல்லரிக்கச் செய்தன.

திடீரென்று யாரோ அருகில் வருவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். மைக்கேலின் அப்பா வயதிலே ஒருவர்! அவர் மைக்கேலின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''ஐயோ, எனக்கு ஒரே பயமாக இருக்கு! இது ஒன்றுமே புரியவில்லையே!' என்று மைக்கேல் அவரைப் பார்த்து அழத் தொடங்கி விட்டான். யாருமே இல்லாமல் அந்தரத்தில் பறந்து கொண்டிருந்தவனுக்கு, சொல்லி அழுவதற்கு ஒருவர் கிடைத்து விட்டார் இல்லையா?

''பயப்படாதே தம்பி. இது —டார்னடோ, அதாவது பலமான ராட்சச விசும்பெழு காற்று!''

''ஐயோ, இங்கே இருந்து விழுந்திடுவேன் போலிருக்கிறதே!''

''விழ மாட்டே தம்பி, நம்பு. அப்படியே விழ வேண்டியது இருந்தால், நீயோ நானோ என்ன செய்யணுங்கிறதை யோசிக்க வேண்டிய நேரம் இது'' என்றார் பெரியவர்.

மைக்கேல் அழாத குறையாக விழித்தான்.

அவன் பயத்தைப் போக்கும் விதத்தில் அவர் பேசத் துவங்கினார்.

''உன் பேர் என்ன?''

''மைக்கேல்!''

''மைக்கேலா? என் பெயர் வில்லியம். ஒரு விஞ்ஞானக் கூடத் தலைவன். இந்தக் காற்றுக்கு அதெல்லாம் தெரியுதா? என்னையும் தூக்கி வந்திடுச்சு. அது சரி, உன் அப்பா பேர் என்ன?''

''சபஸ்தியான்.''

''யாரு — கோடீஸ்வரர் சபஸ்தியானா?''

''ஆமா.''

''அப்படியா? பார்த்தியா! இந்தக் காற்று கோடீஸ்வரனையும் விடல்லியே! அதோ பாரு! பசு, ஆட்டுக் குட்டி — எல்லாம் பறந்து வருவதை!''

மைக்கேல் அவர் கட்டிக் காட்டிய திசையில் பார்த்தான். அவனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது; வேதனையாகவும் இருந்தது.

''மைக்கேல் இப்போ சந்தோஷமாக இரு. இப்படி ஆகாயத்திலே எதன் உதவியும் இல்லாமல் பறக்கிற வாய்ப்பு நமக்குத்தான் கிடைச்சிருக்கு! சுற்றிப் பார்த்துக்கிட்டே வா, பயப்படாமே.''

மைக்கேல் பேசாமல் வருவதைப் பார்த்தார் விஞ்ஞானி வில்லியம்.

''ஒன்றும் ஆகாது மைக்கேல். இந்த டார்னடோவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஒரு விஞ்ஞானி. நான் சொல்றதை நம்பு. மகிழ்ச்சியாக வானத்திலே பறக்க வேண்டாமோ? எங்கே சிரி!''

''ஒண்ணும் ஆகாதில்லே?''

''ஆகாது!''

''இது எப்படித் திடீர்னு இப்படி என்னைத் தூக்கி வந்திடுச்சு?''

''உன்னைமட்டுமா, என்னை, அந்தக் கால் நடைகளையும்தான் தூக்கி வருது!''

''ஆமா மாமா. இது எப்படி?''

''இது – இந்த டார்னடோ –லேசுப் பட்டதில்லே. இதைத் தரையிலே இருந்து பார்த்தால், யானையின் தும்பிக்கை மாதிரி தரையிலிருந்து ஆகாயத்தைத் தொட்டுக்கிட்டு இருக்கும். சாம்பல் நிறத்திலே தெரியும்.''

''ஏ அப்பா! அவ்வளவு உயரமா?''

''ஆமா. அது அப்படியே ஆடிப் பின்னிச் சுற்றி நகரும். நிலத்து மேலே நேராகப் போகும்.''

''இது என்ன, நம்மைக் கொண்டு போய்க்கிட்டே இருக்கே?''

''ஆமா, ஒரு மணி நேரத்துக்குள்ளே நம்மை இறக்கி விட்டுடும்னு நம்புறேன்.''

''வேகமாப் போகுதே!''

''வேகமாகவா? மணிக்கு நாற்பது கிலோ மீட்டர் இப்போ போகுதுன்னு நினைக்கிறேன் – ஒவ்வொண்ணு இதை விட மெல்லவும் போகலாம்.''

''ஸ்பீடாகவும் போகுமா?''

''ஏன்? போகுமே! நூறு, நூற்றைம்பது கிலோ மீட்டர் வேகத்திலும் போகும்.''

''அப்பாடி! செத்தோம்.''

''பயப்படாதே! இப்போ நாம மெதுவாய்ப் போய் இறங்கிடுவோம்.''

''இந்தக் காற்று எப்படி வருது?''

''டார்னடோதானே? – வானத்திலே வெப்பக் காற்றுக்கும் குளிர் காற்றுக்கும் இடம் பிடிக்கிற சண்டை நடக்கிறது. அதனாலேதான் டார்னடோ ஏற்படுது.''

''எப்படி?''

''வெப்பக் காற்று லேசானது. மேலே எழும்பும் தன்மை கொண்டது. நீராவி நிறைந்தது. விரிந்து பரவும் தன்மையும் அதுக்கு உண்டு.''

''அப்படியா?''

''ஆமா – குளிர்க் காற்று, அடர்ந்து நெருங்கினது; கனத்துக் கீழே இறங்கும் தன்மை உடையது. – அப்போ என்ன நடக்கும் சொல்லு?''



கண்போல் உதவும் நாய்

அவருக்கோ கண் தெரியாது. ஆனால், கூட இருக்கும் நாய்க்குக் கண் நன்றாகத் தெரியும். அது கண் தெரியாதவருக்குக் கண் போல உதவுகிறது.

இம்மாதிரி நாய்களுக்கு, மேல் நாடுகளில் உள்ள சில நிறுவனங்கள் தேவையான பயிற்சிகளை அளிக்கின்றன. மனிதனுடன் நாய் கூடவே செல்லும். சாலை விதிகளை நன்றாக அறிந்து, கடக்க வேண்டிய நேரத்தில், கடக்க வேண்டிய இடத்தில் கடந்து செல்ல உதவும். நாய் போகக் கூடிய இடமாக இருந்து, அங்கே மனிதன் செல்ல முடியாத இடமாக இருந்தால், நின்று விடும். போக விடாது! தன்னுடன் வரும் மனிதன் சொன்னபடியே நடக்கும். அவனுக்குத் தீங்கு எதுவும் நேராமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்.

ஜெர்மன் தேசத்து நாய்கள் இப்படிப்பட்ட வேலைகளுக்கு மிகவும் உதவுகின்றன.

''வானத்திலே வெப்பக் காற்று மேலே போகும். குளிர்காற்றைப் பிடிச்சுக் கீழே தள்ளும்.''

''சரியாகச் சொன்னே. லேசானதும் கனத்ததும் மாறி மாறித் தள்ளி இடம் பிடிக்க முயற்சி செய்யும். அப்போ ஒரு சுழற்சி ஏற்படும். அதுதான் பூமியைத் தொட்டுப் புனல் போல வளைஞ்சு வானத்தை எட்டுது.''

''நம்மை எப்படி இது தூக்குது?''

''நம்மை மட்டுமா தூக்குது! இது செய்கிற வேலையெல்லாம் கேட்டால் அசந்து போவே மைக்கேல்!''

''என்னது?''

''இந்தக் காற்றின் பலம் மூணு நிலைகள் கொண்டது: ஒண்ணு, சுழலும் போது ஏற்படுகிற வேகம்.''

''இரண்டாவது?''

''கீழே இருந்து மேலே ஏறும் காற்றின் இழுப்பு வேகம்.''

''அப்புறம்?''

''மூன்றாவதாக — புனல் வடிவமான இந்தக் காற்றுக்கு ஊடே, ஒரு குழாய் போல இடம் உண்டாகுது. அது காற்றே இல்லாத வெற்று இடம்.''

''அப்புறம்?''

''அப்புறம் ஏதுமில்லே. இந்த மூன்றுதான். மூன்றும் செய்கிற சேட்டைகளைப் பாரு:''

''என்ன?''

''இப்போ நாம பறக்கிறோமே, இது இரண்டாவதாச் சொன்னேனே—''

''கீழே இருந்து மேலே ஏறும் காற்றின் இழுப்பு வேகம்—''

''ஆமா மைக்கேல் — இது எவ்வளவு பெரிய பொருளையும் தூக்கிக் கொண்டு போயிடும்! ஆனால், இதுக்கிட்டே ஒரு நல்லது என்னன்னு?''

''என்ன, நல்லதா! அது என்ன?''

''மேலே ஏறுகிற இந்தக் காற்று மரங்களைக்கூட வேரோட பிடுங்கி எறிஞ்சிடும். பாலங்களை அஸ்திவாரத்தோட பேர்த்துப் போட்டுடும். ரயில்களைத் தண்டவாளத்தை விட்டுத் தூக்கிக் கீழே வீசிடும்.''

''ஏ அப்பா! இதெல்லாமா நல்லது?''

''இல்லே மைக்கேல். இப்படிச் செய்கிற இது, மெது மெதுவா பாராசூட்லே இறக்குகிற மாதிரி நம்மை இறக்கி விட்டுடும்!''

''அவ்வளவாவது நல்லது செய்யுதே மாமா!''

''மைக்கேல்! இதுக்கு நேர்மாறு நான் சொல்றது: முதல் நிலையிலே டார்னடோ என்ன செய்யுது தெரியுமா?''

''முதலிலே ஏற்படுகிற அதோட சுழற்சி வேகம்னு சொன்னீங்களே— அந்தச் சமயத்திலா?''

''ஆமா! அந்த வேகத்திலே மணிக்கு சுமார் ஏண்ணூறு கிலோ மீட்டர் ஸ்பீடிலே, சுத்துறப்போ — என்ன நடக்கும் தெரியுமா? ஒரு சின்ன மூங்கில் பிரம்பு, ஆறடி அகலச் சுவரிலே துளை போட்டுட்டு வெளியே வந்துடும். ஒரு குதிரை மண்டைக்குள்ளே — உள்ளே இருக்கிற மண்டை ஓட்டுக்குள்ளே ஒரு மக்காச் சோளக்கதிர் வேகமாப் புகுந்து கொண்டு விடும்— இப்படியெல்லாம் நடந்திருக்கிறது மூன்றுலே.''



தாத்தா மாதிரி

"எங்க தாத்தாவைப் போலவே எனக்குத் தம்பிப் பாப்பா பிறந்து இருக்கு"

"பலே! தாத்தாவைப் போலவே முக ஜாடையா பாப்பாவுக்கு?"

"இல்லே, இல்லே. தாத்தாவுக்கும் வாயில் பல்லே இல்லே. பாப்பாவுக்கும் வாயில் பல்லே இல்லேயே!"

-லலிதா செல்லப்பா

''அப்பாடி! துப்பாக்கி ரவை போல ஒவ்வொன்றும் தூக்கி எறியப்படும் போலிருக்கே!''

''ஆமா! மூணாவது நிலைதான் டார்னடோவிலே அதிசயமானது — அதோ பார்!'' என்று சொன்ன விஞ்ஞானி பைனாகுலரை அவன் கண்களில் மாட்டி விட்டார்.

மைக்கேல் அதன் வழியே பார்த்தான். வீடுகளில் ஜன்னல், வாசல் கதவுகளெல்லாம் வெடித்துத் தூள் தூளாயின: சிதறின. கண்ணாடி

பாட்டில்களிலிருந்து கார்க்குகள் எகிறிப் பறந்தன. அங்கே கொட்டில்லி இருந்த செம்மறி ஆடுகளின் ரோமம் பிய்த் தெறியப்பட்டது. கோழி இறகுகள் பிடுங்கி எறியப்பட்டது போலத் தாமா கவே தெறித்து விழுந்தன. ''என்ன மாமா இது அநியாயம்?'' என்று கூச்சலிட்டான், மைக்கேல் – தான் கண்ட காட்சிகளைக் கூறிவிட்டு.

''அநியாயம் இல்லை மைக்கேல். அதிசயம்!''

''எப்படி மாமா இது நடக்குது?''

''இந்த அதிசயம் டார்னடோவின் மூன்றாவது நிலையிலேதான் நடக்கும். டார்னடோவுக்கு ஊடே ஒரு குழாய் போல வெற்றிடம் இருக்கும்னுசொன் னேனே?''

''ஆமா.''

''வெற்றிடம் ஒரு தூண் போல நகர்ந்து செல்லக் கூடிய இடத்தில் இருக்கிற காற்றையெல்லாம் பறிக் கும். இதனால்தான் இப்படி நடக் குது?''

''மாமா, நாம் இப்போது தரையை நோக்கி இறங்கறோம், மாமா'' என்று கூச்சல் போட்டான் மைக்கேல்.

''நல்லவேளை! நாம் டார்னடோ வின் இரண்டாவது பகுதியிலே அகப்பட் டோம். கீழே இருந்து மேலே மேலே காற்று எகிறிக்கிட்டே இருக்கு. அதனாலே மெதுமெதுவாக இறங்கு கிறோம்.''

விஞ்ஞானி வில்லியமும் சிறுவன் மைக்கேலும் சுகமாகத் தரையில் இறங்கினார்கள். அவர்கள் விரைவில் அருகிலிருந்த விஞ்ஞானியின் வீட்டை அடைந்தார்கள்.

உடனே விரிவாகக் கடிதம் எழுதி னார் விஞ்ஞானி வில்லியம். அதுதான் மைக்கேலின் தகப்பனாருக்குக் கிடைத் தது.

அக்கடிதம் இதுதான்:

''அன்புள்ள திரு. சபாஸ்தியான், தங்கள் குமாரன் மைக்கேல் பத்திர மாக உள்ளான். அவனும் நானும் டார்னடோவால் தூக்கிச் செல்லப்பட்டு வானப் பயணம் செய்து பத்திரமாகத் தரை வந்து சேர்ந்தோம்.

உங்கள் மகனை நான் காப்பாற்றி னேனா, டார்னடோதான் எங்கள் இருவரையும் காப்பாற்றியதா என்பது எனக்குத் தெரியாது. என்றாலும், எனக்குத் தக்க சன்மானம் தர வேண்டும். அது கோமகஸ்வரரான ஒரு விஞ்ஞானிக்குத் தரும் பரிசாக இருக்க வேண்டும் – ஒரு சோதனைக் கூடம் கட்டித் தருவது தங்களைப் போன்றோருக்கு ஒரு கஷ்டமா?

—வில்லியம்.''

கடிதத்தைப் பார்த்த சபாஸ்டிதி யானும் அவர் மனைவியும் காரில் பறந்து போனார்கள். பையன் மைக் கேலைக் கட்டித் தழுவினார்கள். விஞ் ஞானி வில்லியத்துக்கு ஆயிரம் தட வைகள் நன்றி சொன்னார்கள். விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பி னார்கள்.

விஞ்ஞானி கேட்ட பரிசினைக் கோமகஸ் வரர் அவருக்குத் தந்தார் என்று சொல்லவும் வேண்டுமோ!



கிளைவின் கடைசி காலம்

இப்போது நமது தமிழக அரசின் தலைமைச் செயலகம் இருக் கிறதே செயின்ட் ஜார்ஜ் கோட்டை, அங்கு தமது 18வது வயதிலே கணக்கு எழுதிக் கொண்டிருந்தவர்தான் ராபர்ட் கிளைவ். கிழக் கிந்தியக் கம்பெனியில் கணக்கராகச் சேர்ந்த அவர், பிறகு இராணுவத்தில் சேர்ந்து, படிப் படியாக உயர்ந்து, இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி அமையப் பெரிதும் உதவினார். இங்கிருந்து ஓய்வு பெற்றதும் அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு சென்றதும் அவர் இந்தியாவில் இருந்தபோது ஏராளமாக லஞ்சம் வாங்கினார் என்றும் பெருஞ் செல்வத்தைச் சேர்த்துவிட் டார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. பகிரங்க விசாரணை நடந்தது. ஆனாலும் இந்தியாவிலே ஆங்கில ஆட்சியை நிறுவப் பெரிதும் துணை புரிந்தவர் அல்லவா அவர்? அதனால் அவர் குற்றவாளியல்லர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனாலும் ராபர்ட் கிளைவுக்கு அவமானமாகப் போய்விட்டது. வாழ்விலே வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கொள்ளை போன கொய்யாப் பழம்!

கொய்யாப் பழம் பழுத்த தென்று
குள்ள அணிலும் வந்ததாம்.
பொய்யா மெய்யா என்று பார்க்கப்
போனான் தோட்டக் காரனும்.

அந்தப் பக்கம் மிட்டாய்க் காரன்
மணிஅ டித்து வந்ததால்,
அந்த மணியின் சத்தம் கேட்டு
அணிலும் ஓடிப் போனதாம்!

அதனைக் கண்ட தோட்டக் காரன்
வீட்டி லிருந்த மணியையே
அந்த மரத்தின் கிளையில் கட்டி
அசந்து படுத்துத் தூங்கினான்.


கண்டு கண்டு கிளையின் மேலே
ஏறும் அந்த அணிலுமே,
குண்டு மணியின் சத்தம் கேட்டுக்
குனிந்து கீழே பார்த்ததாம்.


தோட்டக் காரன் குறட்டை விட்டுத்
தூங்கும் சுகத்தைப் பார்த்ததும்,
ஆட்டம் போட்டுக் கிளையில் குந்தி
ஆசை யாகத் தின்றதாம்.

கடித்துக் கடித்துத் தின்னும் போது
கனிந்த கொய்யா வீழ்ந்ததால்,
துடித்தெ ழுந்த தோட்டக் காரன்
துண்டு மீசை துடித்ததாம்.

தோட்டக் காரன் எழுந்த வுடனே
துள்ளித் துள்ளி அணிலுமே,
ஓட்ட மாக ஓடிச் சென்று
ஒளிந்து கொண்டு விட்டதாம்!

'ஐயோ' என்றான் தோட்டக் காரன்
அணிலைத் தேடிப் பார்த்தபின்.
கொய்யாப் பழங்கள் தூக்கத் தாலே
கொள்ளை போன கதைஇதே!





கிரிக்கெட் ஆடலாம்

குண்டுமணி

ஒவ்வொரு குழுவிலும் பதினொரு பேர். இப்படி இரண்டு குழுக்கள் ஆடும் விளையாட்டு கிரிக்கெட். இருபத்திரண்டு கஜதூரத்தில் இரண்டு விக்கெட்டுகள் மைதானத்தில் ஊன்றப்படும். பாட்டிங் கோஷ்டி வேண்டிய அளவு ரன்களைக் குவிக்கப் பாடுபடும். ஆனால் பௌலிங் குழுவோ தம் பீல்டிங் அமைப்பினால் எதிர்க் குழுவைக் குறைந்த எண்ணில் 'அவுட்' டாக்க முயலும். எந்தக் குழு அதிக ரன்களைக் குவிக்கிறதோ அதுவே வெற்றிக் குழுவாகும்.

இரு அம்பயர்கள் ஆட்டத்தை நிர்வகிப்பார்கள். அம்பயர்கள் பவுண்டரி, ஸிக்ஸர் போன்றவற்றுக்கு 'சிக்னல்' காட்டித் தெரிவிப்பார்கள்.

பந்து சிவப்பான தோலினால் ஆகியிருக்கும். பந்து 5½ அவுன்ஸ் எடையிருக்கும்.


பந்தயத்தின் போது பந்து தொலைந்து போனாலும் தொலைந்து போன பந்தினைப் போலவே அம்பயர் தேய்த்துத் தருவார். ஒவ்வொரு இன்னிங்கம் பொதுவாகப்புதுப்பந்தினால்தொடங்கப்படும். பீல்டிங் கோஷ்டி குறிப்பிட்ட பந்து ஓவர்களுக்குப் பிறகும் புதுப் பந்து கோரிப் பெறலாம்.

ஒரு பந்தயத்தில் இரண்டு இன்னிங்ககள் இடம் பெறும். ஒரு இன்னிங்ஸில் பத்து பாட்ஸ்மன்களும் 'அவுட்'டாகிவிட்டால் ஓர் இன்னிங்ஸ் முடிவு பெறும். பாட்டிங் குழு காப்டனும் விரும்பி ஆட்டத்தை முன்கூட்டியே டிக்ளேர் செய்யவும் கூடும்.

உணவு வேளைக்கு 40 நிமிஷங்கள் இடைவேளை உண்டு. டீ வேளைக்கு இருபது நிமிஷங்கள் இடைவெளி இருக்கும். ஒவ்வொரு இன்னிங்ஸ் முடிவிலும் 10 நிமிஷம் இடைவேளை இருக்கும். பாட்ஸ்மன் மைதானத்தில் விக்கெட் இடத்துக்கு வந்து சேர்ந்து ஆடுவதற்கு இரண்டு நிமிஷம் அனுமதிக்கப்படும்.

இரண்டு குழுவில் எந்தக் குழு பாட்டிங், எந்தக் குழு பீல்டிங் என்பதை இரு கோஷ்டிக் காப்டன்களும் நாணயத்தை 'பூவா தலையா' கண்டிப் பார்த்து முடிவு செய்வார்கள்.

இரண்டு இன்னிங்ககளில் 'Follow on' கொடுப்பதுண்டு. ஒருகோஷ்டி முதல் இன்னிங்ஸில் நிறைய ரன்களைக் குவித்து விட்டு மற்ற கோஷ்டி ஒரு இன்னிங்





சில் 200 ரன்கள் குறைவாக இருந்தால் 'Follow on' ஆட அனுமதி தரலாம்.

பாட்ஸ்மன் 'அவுட்' என்று அம்பயர் முடிவு செய்வதற்கு எல். பி. டபிள்யூ ஆக இருக்கலாம். பௌலர் வீசிய பந்து விக்கெட்டைத் தாக்கினாலும் அவர் அவுட்டாகி விடுவார்.

மைதானத்தில் பவுண்டரி எல்லைக்குள் உள்ள பீல்ட்ஸ்மன்கள் யாராவது ஒருவர் பௌலர் வீசிய பந்தில் பாட்ஸ்மன் அடித்த பந்தைப் பிடித்து விட்டால் 'அவுட்' டாகி விடலாம்.

பாட்ஸ்மன் தவறிப் போய்த் தம் மட்டையினால் விக்கெட்டைத் தொட்டு விட்டாலும், தட்டி விட்டாலும் அவர் 'அவுட்' டாகி விட்டதாகக் கருதப் படுவார்.

மைதான கிரீஸை விட்டு பாட்ஸ்மன் நகர்ந்து, அந்தச் சமயத்தில் விக்கெட் கீப்பர் பந்தினால் விக்கெட்டை அடித்து 'அவுட்' டாக்கிவிடுவதும் உண்டு.

பீல்ட்ஸ்மன் தம் உடலின் எந்த உறுப்பினாலும் பந்தைத் தடுத்து நிறுத்தலாம். ஆனால், அவரது தொப்பி போன்ற பொருளைக் கொண்டு தடுத்தால் இரண்டு ரன்கள் வழங்கப்படும்.

கிரிக்கெட் மட்டையையும் பந்தையும் பிரிட்டிஷ் ராணுவத்தினர் தங்கள் ஆயுதங்களோடு இந்தியாவுக்குக் கொணர்ந்தனர். ஆங்கிலேயர்கள் சுதந்திரத்துக்குப் பிறகு இந்நாட்டை விட்டு விலகி விட்டனர். கிரிக்கெட் ஆட்டம் இந்தியாவில் வேரூன்றி விட்டது.

1751—ஆம் வருஷம் முதன் முதலில் இந்தியாவில் கிரிக்கெட் விளையாடப் பட்டது. முதல் கிரிக்கெட் கிளப் 1752—ஆம் ஆண்டு கல்கத்தாவில் நிறுவப்பட்டது. தென்னிந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்கள் 1848—ஆம் வருஷம் சென்னை கிரிக்கெட் கிளப் தொடங்கினார்கள். 1864—ஆம் வருஷம் சேப்பாக்கத்தில் முதல் தர கிரிக்கெட் பந்தயம் நடைபெற்றது.

முதல் ஆங்கிலக் குழு இந்தியாவுக்கு விஜயம் செய்தது 1889—ம் ஆண்டில்தான். பார்ஸிக்களின் பெருமுயற்சியால் இந்தியக் குழு இங்கிலாந்துக்கு விஜயம் செய்தது.

1893—ஆம் ஆண்டு லார்ட் ஹாக் தலைமையில் வந்த குழு 23 பந்தயங்களை ஆடி 15 பந்தயங்களில் வென்றது. ஆறு பந்தயங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்து விட்டன. இரண்டு பந்தயங்களில் தோல்வியடைந்தது.

கிரிக்கெட் ஆட்டம் தொடங்கி சதம் ஆண்டுகள் கழிந்து விட்டன. இந்தியாவுக்குச் சமீபத்தில் புருடென்ஷியல் கோப்பைப் பந்தயத்தில் மாபெரும் வெற்றி கிடைத்தது. இந்திய காப்டன் கபில்தேவின் புகழ் வானளாவ உயர்ந்தது.

செப்டம்பரில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மூன்று டெஸ்ட் பந்தயங்கள் நடக்கவிருக்கின்றன. இந்திய கிரிக்கெட் ரஸிகர்களுக்கு இந்த வருஷம் இரட்டை அதிர்ஷ்டம். பாகிஸ்தான் டெஸ்ட் பந்தயங்கள் முடிந்ததும் மேற்கிந்தியத் தீவுக்குழுவுக்கும் இந்தியாவுக்கும் டெஸ்ட் பந்தயங்கள் நடைபெறவிருக்கின்றன.

சேப்பாக்கம் சிதம்பரம் மைதானம், ஒவ்வொரு டெஸ்டின் போதும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைச் சௌகரியமாக அமர்ந்து காணும் வசதி படைத்திருக்கிறது. நீங்கள் சென்னை சேப்பாக்கம் டெஸ்டை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறீர்கள்.

இளவரசர் ரஞ்சி சிங் கிரிக்கெட் ஆட்டத்தில் புகழ் வாய்ந்தவர். ஆங்கில நாட்டிலேயே சிறப்பாக ஆடித் தம் பெருமையை நிலை நாட்டியவர். இவரது நினைவில் இந்தியாவில் நடக்கும் பந்தயங்களுக்கு - ரஞ்சி கோப்பைப் பந்தயங்களுக்கு அதிக மவுசு உண்டு. இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் பந்தயங்களையும் டெஸ்ட் பந்தயங்களையும் நிர்வகிக்க இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு இருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் தனித் தனி கிரிக்கெட் கழகங்கள் உண்டு. தமிழக கிரிக்கெட் சங்கத்துக்குத் தலைவர் திரு. எம். ஏ. சிதம்பரம். இதன் காரியதரிசி திரு. எஸ். ஸ்ரீராமன்.

தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் எம். ஜே. கோபாலன், ஸி. ராமசுவாமி, ரங்காச்சாரி, பாலு அழகண்ணன் போன்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் புகழ் பரப்பினார்கள். இளைஞர்கள் வரிசையில் இன்று வேங்கடராகவன், டி. ஈ. சீனிவாசன், ஸ்ரீகாந்த், சேகர், பரத் ரெட்டி, சிவராமகிருஷ்ணன் ஆகியோர் தமிழகத்தின் புகழை உயர்த்தியுள்ளார்கள்.

கிரிக்கெட் ராஜ விளையாட்டு. ஐந்து நாட்கள் நடக்கும் டெஸ்ட் பந்தயங்களுக்குப் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுவது வழக்கம்.

இங்கிலாந்தில் லாஸ்வெகாஸ் நகரில் ஹெலன் மேரி ஸ்மித் ஆரம்பப் பள்ளி என்று ஒரு பள்ளி இருக்கிறது. இந்தப் பள்ளியில் ஒரு நவீன லைப்ரரி இருக்கிறது. இந்த லைப்ரரியில் புத்தகங்கள் இல்லை. அவற்றுக்குப் பதிலாக நாய் நரி போன்ற மிருகங்களும், பாம்பு, பல்லி, உடும்பு, ஓணான் போன்ற ஊர்ந்து செல்லும் பிராணிகளும், வாத்து, கிளி மைனா, ஆந்தை போன்ற பறவையினங்களும் உள்ளன. தேவையான மாணவர்கள் லைப்ரரிக்கு வந்து, தாங்கள் விரும்பும் செல்லப் பிராணியை — பாம்பையோ, நரியையோ, வாத்தையோ, கிளியையோ வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம்.

உலகிலேயே இதுதான் முதல் மிருக லைப்ரரி. இதை எண்ணத்தில் கனவு கண்டு, செயலில் நனவு ஆக்கிய பெருமை இந்தப் பள்ளியின் விஞ்ஞான ஆசிரியர் கால் டட்டான் என்பவரையே சாரும்.

''பல தாய் தந்தையரால் தங்கள் பிள்ளைகளுக்கு அவரவர்கள் விரும்பும் செல்லப் பிராணிகளை வாங்கித் தர முடிவதில்லை. என்னுடைய இந்தத் திட்டத்தால் குழந்தைகள் பல பிராணிகளைத் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று அவற்றைப் பற்றி அறிய முடிகிறது; ஆராய முடிகிறது; பழகி விளையாட முடிகிறது'' என்கிறார் அவர்.

''இதில் விநோதச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கர்ப்பமான பிராணிகளை எடுத்துச் செல்வதால் அவர்கள் வீட்டிலேயே பிரசவம் பார்க்க நேரிடும். சில பிராணிகள் எப்படியோ தப்பிவிடும். சில பிராணிகள் நீரிலோ, அல்லது வேறு விபத்திலோ, நோயிலோ செத்து விடக்கூடும்'' என்கிறார்.


மேலும் டட்டான் கூறுவதாவது:— ''எனக்கு ஒரு சிறிய மகள் இருக்கிறாள். அவளுக்குப் புழு பூச்சிகளைக் கண்டாலே பயம். அஞ்சி அலறுவாள்! ஆனால், இப்போது பெரிய மலைப் பாம்பைக்கூட அநாயாசமாகத் தூக்கி விளையாடுகிறாள்! ஆகவே குழந்தைகளுக்குப் பிராணிகளின் மீதுள்ள பயம், அருவருப்பு நீங்கி அவற்றின் மீது பாசமும், பற்றும் ஏற்பட இது ஏதுவாகிறது'' என்கிறார்.

மாணவர்கள் பாம்பு, பல்லி, உடும்பு ஓணான் போன்ற பிராணிகளை விரும்பும்போது, மாணவியர் முயல், வாத்து, கொக்கு, கிளி போன்ற பறவைகளை அதிகம் விரும்புகிறார்களாம். முதலில் இந்த ஆசிரியர் தமது சொந்தச் சிறு சேமிப்பிலிருந்து தொடங்கிய இந்த லைப்ரரி இப்போது பல நன்கொடையாளர்களின் உதவியால் பெரிய லைப்ரரியாக உருவாகி வருகிறது! பலர் பணமாக நன்கொடையளிக்கின்றனர். இன்னும் பலர் மிருகங்களாகவும் அன்பளிப்பு அளிக்கிறார்கள்!

-கா. அ. அன்பரசு.


விநோத லைப்ரரி!





முழு நீளக் கதை

எஸ். ஆர். ஜி. சுந்தரம்



பேசிய பொம்மைகள்

கால் பரீட்சை முடிந்து விட்டிருந்தது. பூரணிக்கு, பரீட்சைக்காகப் படித்த களைப்புடன், அன்று நவராத்திரிக் கொலு வைப்பதற்காகப் பெட்டிகளையும், மரத் துண்டுகளையும் அப்படியும் இப்படியுமாக மாற்றி மாற்றி அடுக்கிப் படிக்கட்டுகளை அமைத்ததால், கொஞ்சம் உடற்சோர்வும் சேர்ந்திருந்தது. ஆகையால், ஆறு மணிக்கே அவளுக்குப் படுத்துத் தூங்கிவிட வேண்டும் போலிருந்தது. புதிதாக வீட்டிற்கு வந்திருந்த சோபா மெத்துமெத்தென்று இருக்கவே, அதன்மீது பொத்தென்று படுத்து, அப்படியே தூங்கியும் விட்டாள்! அப்போது பூரணியின் பெற்றோர்கள் மாடியில் தொலைக்காட்சியில் வீணை நிகழ்ச்சியொன்றைக் கேட்டு இரசித்துக் கொண்டிருந்தார்கள்!

டிங்— டிங்— டிங்— டிங்— டிங்— டிங்— டிங்!

மணி ஏழு முறை அடித்தது.

''பூரணி! பூரணி!''

நிமிர்ந்து பார்த்தாள். எதிரே ஓர் உருவம் நின்றது. பச்சைத் தலைப் பாகையோடு 'சம்கி' வைத்துத் தைக்கப் பட்ட பச்சைநிற வெல்வெட் உடைகள் மின்ன, பெரிய அகன்ற மீசை ஒன்றை வைத்துக்கொண்டு நெற்றியில் வட்டப் பொட்டுடனும் கையில் ஒரு சிறிய கோலுடனும் ஒரு மனிதன் பூரணிக்கு முன்னால் நின்றபடி சிரித்துக் கொண்டிருந்தான்.

''பூரணி, நான்தான் உன்னை அழைத்தேன். பயப்படாதே!'' என்றான் அந்த மனிதன்.

''நீ யாரு?'' என்று அவனை உற்றுப் பார்த்தாள் பூரணி!

''என்னைத் தெரியவில்லை? நல்லா என்னைப் பாரு! அதற்குள்ளாகவா

என்னை மறந்து விட்டாய்?'' என்றான் அந்தப் புது மனிதன்.

பூரணிக்கும் அவனை எங்கேயோ பார்த்தது போல் இருந்தது. ஆனால், எங்கே, எப்போது என்று நினைவிற்கு வரவில்லை. விரல்களைப் பிசைந்து விட்டுக் கொண்டு யோசித்தாள்.! தலையைச் சொறிந்து கொண்டாள்! உடனே, ''ஐ யோ ா, நீயா? நீ எப்படி...?'' என்று அலறினாள் பூரணி.

பூரணி அன்று காலையில் கொலுப் படிக்கட்டில் பொம்மைகளை வைத்துக் கொண்டிருந்தபோது, ஒரு மந்திர வாதிப் பொம்மையின் தலைப் பகுதி தனியாக உடைந்து இருந்ததைப் பார்த் தாள்! அந்த நிலையில் மந்திரவாதிப் பொம்மையைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. உடனே பசையை எடுத்து வந்து, தலையை உடலுடன் நன்றாகப் பொருத்தி ஒட்ட வைத்து விட்டாள். தனக்கு முன்னே இப்போது நின்றிருக்கும் மனிதனும், அந்த மந்திரவாதிப் பொம்மையே உண்மையான மனித உருவம் எடுத்து உயிருடன் வந்தது போல் இருக்கவே, அவளுக்குத் திகிலாக இருந்தது.

''என்ன, என்னைக் கண்டுபிடித்து விட்டாயா?'' என்று கேட்டான் அந்த மனிதன்.

''ஆமாம்! நீ எங்க வீட்டுக் கொலு விலே இருக்கும் மந்திரவாதிப்பொம்மை தானே? — நீ எப்படி உயிரோடு இங்கே...'' என்று இழுத்தாள் பூரணி.

''சபாஷ், பூரணி! கண்டுபிடித்து வி ட் டா யே! கெட்டிக்காரிதான்!'' என்றபடி தொடர்ந்து பேசினான் அந்த மனிதன். ''பூரணி! நீ என் தலையை உடலோடு ஒட்டி முழு உரு வத்தைத் தந்ததற்காக உனக்கு நன்றி சொல்ல வந்திருக்கிறேன்! நன்றி மட்டு மல்ல! உனக்கு ஒரு வேடிக்கையும் காட்டப் போகிறேன்!'' என்றான் அந்த மந்திரவாதி!

''உண்மையாகவா சொல்றே?'' என்று கேட்டாள் பூரணி!

''ஆமாம் பூரணி! இதோ பார், இது அதிசயமான மந்திரக்கோல்! இது நம் கையில் இருந்தால் நினைத் ததைச் சாதிக்கலாம். சொன்னால் புரி யாது. செய்தே காட்டுகிறேன் பார்!'' என்றபடி பூரணியைக் கொலுப்படிக் கட்டிற்கு அருகே அழைத்துச் சென்றான்.

''பூரணி! இங்கே நிற்கிற பொம்மை களில் நீ யாரோடு பேசவேண்டு மென்று ஆசைப்படுகிறாய், சொல்!'' என்றான் அவன்.

''சரஸ்வதி தேவியுடன் எனக்குப் பேச வேண்டும்! பேச வை, பார்க்க லாம்!'' என்றாள் பூரணி!

உடனே மந்திரவாதி, மந்திரக் கோலை எடுத்து ''கா—வா! வ—வா!— பா—வா!'' என்றபடி மந்திரக்கோலை மூன்று முறை இடமிருந்து வலமாகச் சுழற்றினான். என்ன ஆச்சரியம்! வீணையைக் கையில் ஏந்திய தோற்றத் துடன் காணப்பட்ட சரஸ்வதிப் பொம்மை சற்று அசைந்து, கண்களை மலர்த்தி, புன்னகை பூத்து, மந்திர வாதியைப் பார்த்து, ''என்ன வேண் டும்?'' என்று கேட்டது. ''தாங்கள் இந்தச் சிறுமி பூரணியிடம் சற்றுப் பேச வேண்டும்!'' என்றான் மந்திரவாதி!

''என்ன பூரணி?'' என்றாள் சரஸ்வதி!

''ச ர ஸ் வ தி தேவியே! நான் பூகோளத்திலும் கணக்கிலும் ரொம்ப 'வீக்'! இவற்றில் நல்ல மதிப்பெண் களைப் பெற நீங்கள்தான் அருள்புரிய



6 வயதுச் சிறுவனின் அரிய சாதனை!

ஒரு பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற 'செஸ்' ஆட்டப் போட்டி ஒன்றில் கலந்து கொண்ட ஆறு வயதுச் சிறுவனான ஆர்திக் ஓவஸாவ் (Artyk Ovezov) 20 ஆட்டங்களில் 17ல் வெற்றி பெற்றுச் சாதனை புரிந்திருக்கிறான். சோவியத் யூனியனில் உள்ள 15 குடியரசுகளில் ஒன்றான டர்க்மீனியா (Turkmenia)வின் தலைநகரான ஆஷ்கா பாத்தைச் சேர்ந்த 'ஆர்திக்' மூன்று வயதிலிருந்தே 'செஸ்' ஆடி வருகிறானாம். படத்தில் 'ஆர்திக்' மிகவும் கவனத்துடன் 'செஸ்' ஆட்டத்தில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

தகவல்: பிகேயெஸ்.

வேண்டும்!'' என்று வேண்டினுள் பூரணி!

''சரி! அப்படியே ஆகட்டும்!'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பொம்மையாகி விட்டாள் சரஸ்வதி!

''பார்த்தாயா?'' என்றபடி மந்திர வாதி மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான்.

''மந்திரவாதி! அந்தக் கோலே இப்படிக் கொடு! செல்வத்திற்கு அதிபதி யான இலக்குமி தேவியுடன் நான் பேசப் போகிறேன்!'' என்ருள் பூரணி.

''மந்திரம் நினைவிலே இருக்கிறதா?'' என்று கேட்டான் அந்த மந்திரவாதி!

''சொல்கிறேனு இல்லேயா பார். அதை இப்படிக் கொடு'' என்று கோலே வாங்கிக் கொண்ட பூரணி இலக்குமிப் பொம்மையைப் பார்த்து ''கா—வா!— வ—வா!— பா—வா!'' என்ற படி கோலேச் சுழற்றினுள்! மறுவினுடி இலக்குமி தாமரையில் நின்ற கோல மாய் அவள் முன்னே தோன்றி, ''சிறுமியே! உனக்கு என்ன வேண் டும்?'' என்று கேட்டாள்.

''இலக்குமி தேவியே! இவ்வுலகில் வயிற்றுக்கு உணவில்லாமல் எவ் வளவோ ஏழைகள் துன்பப்படுகிருர்கள். அவர்கள் துன்பம் நீங்க, நீங்கள்தான் உதவ வேண்டும்!'' என்ருள் பூரணி உருக்கமான குரலில்!

''பூரணி! உனக்காக என்று எதுவும் கேட்காமல், உலகத்தில் உள்ள ஏழை களுக்காக உதவி கேட்ட உன்னே நான் பாராட்டுகிறேன்! இந்தா, இந்தப் பொன்னுலான பெட்டியை வைத்துக் கொள்! இதிலிருந்து எடுக்க எடுக்கப் பொற்காசுகள் வந்து கொண்டேயிருக்கும்! இதைக் கொண்டு ஏழைகளுக்கு உதவுவாயாக!'' என்று சொல்லிவிட்டு இலக்குமி தேவியும் முன் போல் அழகிய பொம்மையாகி விட் டாள்!

பூரணி மகிழ்ச்சி பொங்க மந்திர வாதியைப் பார்த்தாள்.

''பூரணி! நீ எனக்குச் செய்த உதவிக்காக இந்த மந்திரக்கோலே நாளைக் காலே ஆறு மணி வரை உன் னிடம் விட்டு வைக்கிறேன்! இதை வைத்துக் கொண்டு, நீ நினைத்தபடி எதை வேண்டுமானுலும் செய்து கொள்ளலாம். ஆனுல், நாளைக் காலே ஆறுமணி அடிப்பதற்குள் இந்தக் கோலே நீ என்னிடம் கொண்டு வந்து கொடுத்து விட வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினுல், நீ எந்த இடத் தில் இருந்தாலும் மயக்கம் போட்டு விழுந்து விடுவாய்!'' என்ருன் மந்திர வாதி!

பூரணி யோசித்தாள். அந்த அதிசய மந்திரக்கோலே மந்திரவாதியிடம் திருப்பித் தர அவளுக்கு மனம் வர வில்லே.

''ஐயா மந்திரவாதி! தயவு செய்து இந்தக் கோலே எனக்கே கொடுக்க மாட்டாயா?'' என்று கேட்டாள் அவள்!

மந்திரவாதி சற்று யோசித்த பிறகு சொன்னுன்: ''சரி, தருகிறேன். ஆனுல் ஒரு நிபந்தனே. இந்த மந்திரக்கோல் 'கா—வா!— வ—வா!— பா—வா!' என்ற மந்திரத்திற்கு அடிமை! இந்த மந்திரம் மூன்று சக்திமிக்க இந்திய நாட்டு மனிதர்களேக் குறிக்கும் சொல்! இதன் முழு அர்த்தத்தையும் நீ கண்டுபிடித்துச் சொல்லிவிட்டால், இந்த மந்திரக்கோலே உனக்கே கொடுத்து விடுகிறேன்!''

''சரி! நான் முயற்சி செய்து பார்க் கிறேன்'' என்ருள் பூரணி.

''முயற்சி செய்! ஆனுல், எப்படியும் நீ இந்த மந்திரக்கோலே நாளேக் காலே ஆறு மணி அடிப்பதற்குள் என்னிடம் சேர்த்து விட வேண்டும்! இல்லாவிட் டால் ஆபத்து! மந்திரத்தின் சரியான அர்த்தத்தைச் சொல்லி விட்டால் அப்போதே கோலே உன்னிடம் கொடுத்து விடுகிறேன்!'' என்றபடி மந்திரவாதி அவ்விடத்தை விட்டு மறைந்தான்!

பூரணிக்கு வெகு நாட்களாக இந்த உலகத்தையெல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசை. நினேத்த இடத்திற்கு நினேத்தவாறு செல்லும் பறக்கும் குதிரை கிடைத்துவிட்டால் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நினேத்தாள் அவள்! இந்த நினேப்புடன் மந்திரக் கோலேச் சுழற்றி ''கா—வா! வ—வா! பா—வா!'' என்ருள். அடுத்த நிமிடமே விமானம் ஒன்று வீட்டு வாசலில் வந்து நிற்பது போல், பெரிய சத்தம் கேட்டது. ஓடிச் சென்று பார்த்தாள்! என்ன ஆச்சரியம்! அழகிய இறக்கைகளுடனும் — அற்புதத் தோற றத்துடனும் ஓர் ஆள் உயரத்திற்கு ஒரு குதிரைப் பொம்மை அங்கே நின்றிருந்தது. அதன் கழுத்துப்புறம் வட்ட வடிவத்தில் சிறிய சுழல்தட்டு இருந்தது. பூரணி ஒரே தாவாக அதன் மேல் ஏறி உட்கார்ந்து, சுழல்தட்டை மெதுவாகத் திருப்பினுள்! அடுத்த விநாடியே அக்குதிரை 'விர்'

றென்று ஆகாயத்தை நோக்கிப் பறக்க ஆரம்பித்து விட்டது. ''ஐயோ! பெற்றோர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டிருக்கிறோமே!'' என்று அவள் நினைத்தபோது குதிரை அவள் வீட்டை விட்டு வெகு தொலைவில் பறந்து கொண்டிருந்ததை உணர்ந்தாள்.

ஆகாயத்தில் ஒரு குதிரை மேல் உட்கார்ந்து பறப்பது புது அனுபவமாக இருந்ததால், பூரணியின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் நீந்தியது. அதே நேரத்தில் தனியாகப் பறப்பது அவளுக்குப் பயமாகவும் இருந்தது. துணையாக ஒரு தோழி இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது.

குதிரை அப்போது தஞ்சாவூர் நகரத்தின் மேலே பறந்து கொண்டிருந்தது. தஞ்சாவூரில் அவளது தோழி கனியரசி இருப்பது அவள் நினைவிற்கு வந்தது! உடனே, ''மாயக் குதிரையே! நில்! இங்கே என் தோழி கனியரசி இருக்கிறாள். அவளிடம் அழைத்துச் செல்'' என்றாள் பூரணி! அடுத்த சில நிமிடங்களில் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த கனியரசியின் பின்னால் குதிரை நின்றது.

''ஏ! கனியரசி! கனியரசி!'' என்று குதிரை மேலிருந்தபடியே கூப்பிட்டாள் பூரணி!

கனியரசி திரும்பிப் பார்த்தாள்! தோழி பூரணி குதிரை மீது உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், ஒன்றும் பேச முடியாமல் அவளை வியப்புடன் பார்த்தாள்.

''கனியரசி! ஒன்றும் பேச நேரமில்லை! முதலில் என் பின்னால் இந்தக் குதிரையின் மேல் நீயும் ஏறிக் கொள்! உலகையெல்லாம் உனக்குச் சுற்றிக் காண்பிக்கிறேன்! விடிவதற்குள் இங்கேயே உன்னை இறக்கிவிட்டுப் போகிறேன்! பயப்படாமல் வா!'' என்றாள் பூரணி!

கனியரசியும் உலகைச் சுற்றிப் பார்க்கும் ஆசையில் எதுவும் பேசாமல் குதிரை மீது ஏறி உட்கார்ந்தாள்! குதிரை மறுபடியும் 'விர்'றென்று பறக்கத் தொடங்கியது. பூரணி அது வரை நடந்ததையெல்லாம் கனியரசியிடம் சொல்லிக் கொண்டே வந்தாள்.

பறந்து கொண்டேயிருந்த போது தங்கள் மீது திடீரென்று உஷ்ணக் காற்று வீசுவதைப் பூரணியும், கனியரசியும் உணர்ந்தனர்!

''பூரணி! இந்தப் பகுதியில் இவ்வருடம் பெய்ய வேண்டிய பருவ மழை பெய்யவில்லை. மக்கள் குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பாவம்! பயிர்பச்சைகள் கூட வாடிக் கருகி விட்டன!'' என்றாள் கனியரசி!

''அப்படியா? இதோ பார் என்ன செய்கிறேன்?'' என்றபடி எதையோ மனத்தில் நினைத்துக் கொண்டு மந்திரக் கோலைச் சுழற்றி, ''கா—வா! வ—வா! பா—வா!'' என்றாள்!

உடனே சுற்றிலும் கருமேகங்கள் திரண்டு வந்தன! குளிர் காற்று வீசியது! மின்னலுடன் மழை கொட்டத்





தொடங்கியது! இந்த மழையில் பூரணியும், கனியரசியும் நனைந்தார்களா என்றால் அதுதான் இல்லை! அவர்கள் மேகக் கூட்டங்களுக்கு மேலாக வெகு உயரத்தில் பறந்து கொண்டிருந்ததால், மழை பெய்யும் அழகை இரசித்துக் கொண்டே பறந்தார்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிந்த நட்சத்திரங்களையும், நிலவின் ஒளிக் கீற்றுகளையும், கூட்டமாகக் கூடு திரும்பும் பறவையினங்களையும் இரசித்துக் கொண்டே, கீழே பூமியையும் அவ்வப்போது பார்த்துக் கொண்டு வந்தார்கள் அவர்கள்! இரவு நேரமாக இருந்ததால் பூமியில் ஆங்காங்கே ஏற்றப்பட்டிருந்த பலவித விளக்குகள் மின்மினிப் பூச்சிகள் போல் மின்னின.

கொஞ்ச தூரம் சென்றதும் பூரணி கீழே பார்த்தாள்! பல தெருக்களில் பல சிறுவர்களும், பெரியவர்களும் வயிறார உண்ண உணவின்றி எலும்பும், தோலுமாய்க் கிடப்பது தெரிந்தது! உடனே இலக்குமிதேவி கொடுத்த சிறுபெட்டியை எடுத்துத் திறந்து, உள்ளேயிருந்த பொன் நாணயங்களை அள்ளி அள்ளி வீசினாள்! அவைகளை அங்கிருந்த ஏழை மக்கள் பொறுக்கி எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றனர்.

''இப்பொழுது எங்கே நாம் போய்க் கொண்டிருக்கிறோம்?'' என்று கேட்டாள் கனியரசி!

''ரஷ்யாவிற்குப் போகப் போகிறோம்! பிறகு அமெரிக்கா! அடுத்தது பிரிட்டன்!'' என்ற பூரணி அங்கிருந்த கோபுரக் கடிகாரம் ஒன்றில் மணியைப் பார்த்தாள்!

பத்து மணி ஆகியிருந்தது. பரவாயில்லை. நேரமிருக்கிறதுஎன்று நினைத்துக் கொண்டாள்!

சில நிமிடங்களுக்குப் பின் ரஷ்யாவின் மீது குதிரை பறந்து கொண்டிருந்தது. ஓங்கி உயர்ந்த கட்டிடங்களின் நேர்த்தியும், மலைகளும், காடுகளும் அடங்கிய இயற்கையின் வனப்பும், நீண்ட நதிகளின் அழகும் அவர்கள் மனத்தை மிகவும் கவர்ந்தன!

அடுத்ததாக—

குதிரை அமெரிக்காவை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. வழியில் ஓரிடத்தில் அணுகுண்டுகள் கோடிக் கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பூரணி பார்த்து விட்டு, ''ஐயோ! அணுகுண்டு!'' என்று அலறினாள்! கனியரசியும் அவைகளைப் பார்த்து விட்டு, ''இவ்வளவு அணுகுண்டுகளை அடுக்கி வைத்திருக்கிறார்களே, இது எந்த நாடு?'' என்று கேட்டாள்!

''எந்த நாடோ? யாருக்குத் தெரியும்? இந்தக் கொடிய ஆயுதங்கள் தான் உலக அமைதிக்கே கேடு விளைவிக்கின்றன! இவைகளின் சக்தியை வைத்துக்கொண்டுதான் நாடுகள் ஒன்றோடொன்று மோதிச் சண்டை பிடித்துக் கொள்கின்றன!'' என்றாள் பூரணி.

''இவைகளையெல்லாம் இருக்குமிடம் தெரியாமல் அழித்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'' என்று கேட்டாள் கனியரசி!

''நல்ல யோசனை கனியரசி! இதோ செய்துவிட்டால் போயிற்று'' என்ற





மகாத்மா காந்தியின் போர்முறை பற்றி அண்ணா

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள், இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சொந்தத்திலோ, வேறு நாட்டின் துணை கொண்டோ ராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது என்ற முறைகளைக் கையாண்டார்கள்.

ஆனால், உலக உத்தமராகிய காந்தி இந்த முறைகளையெல்லாம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, ஆயுதமின்றி, இரகசியமின்றி, வெளிப்படையாக, தூய்மையுடன் விடுதலைப் போர் நடத்தலானார்: அதிலே வெற்றியும் கண்டார்!

—சி. என். அண்ணாதுரை

காந்தி திரைப்படம்

மகாத்மா காந்தியின் வாழ்க்கையை டாக்குமெண்டரி படமாக முதல் முதலாக எடுத்த பெருமை 'உலகம் சுற்றிய தமிழர்' எனப் போற்றப்படும் திரு ஏ. கே. செட்டியார் அவர்களுக்கே உரியது, சமீபத்தில் இவர் காலமாகி விட்டார்.

1940ஆம் ஆண்டிலே இப்படம் வெளியிடப்பட்டது.

இரண்டு மணிநேரம் ஓடக்கூடியது இப்படம்.

இதற்காகத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அரும்பாடு பட்டார் திரு ஏ. கே. செட்டியார்.

அந்தப் படங்களுடன் 13 ஆண்டுகளில் சுமார் 100 காமிராமென்கள் எடுத்த படங்களையும் சேர்த்துத் தொகுத்தார்.

4 கண்டங்களில் இதற்காக 1100 மைல்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் இருந்த போது எடுத்த படங்களை, அவரது நண்பரான 'போலக்' என்பவரிடமிருந்து பெற்றார்.



படி பூரணி மந்திரக் கோலை எடுத்துச் சுழற்றி மந்திரத்தை முணுமுணுத்தாள்! அடுத்த வினாடியே அந்த அணுகுண்டுகள் காற்றில் கரைவதுபோல் எப்படியோ கரைந்து மறைந்துவிட்டன! இதைப் பார்த்து விட்டுப் பூரணியும் கனியரசியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்!

சில நிமிடங்களில் அமெரிக்கா வந்தது. இன்னும் என்னென்னவோ நாடுகளும், கடல்களும் பாலைவனங்களும் குறுக்கிட்டன.

அப்போது—

டிங்—டிங்—டிங்—டிங்—டிங்! என்று ஏதோ ஒரு கடிகாரம் ஐந்து முறை பலமாக ஓசையிட்டது கேட்டது!

பூரணிக்குப் பகீரென்றது. நேரம் சென்றதே தெரியவில்லை. ஆறு மணிக்குள் — அதாவது இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவர்கள் வீடு திரும்பி விட வேண்டும்! இல்லாவிட்டால் ஆபத்துத்தான்!

''பூரணி! ஒரு மணி நேரத்திற்குள் நாம் திரும்பி விட முடியுமா?'' என்று சந்தேகத்துடன் கேட்டாள் கனியரசி.

''கவலைப்படாதே, கனியரசி! எப்படியும் போய்ச் சேர்ந்து விடலாம்! நீ என்னுடன் சென்னைக்கே வந்துவிடு! மந்திரவாதியைப் பார்த்து விட்டுத் தஞ்சாவூருக்கு வந்து விடலாம்!'' என்ற பூரணி குதிரையின் விசையைத் திருகி வேகப்படுத்தினாள். அந்த மந்திரத்தின் பொருளைக் கண்டுபிடிக்க முடியவில்லையே என்ற வேதனையும் அவளை நடுநடுவே வாட்டிக் கொண்டிருந்தது.

அப்போது கீழே ஓரிடத்திலிருந்து பெருங்கூச்சல் கேட்டது. பெரிய ஊர்வலம் ஒன்று நெடுகப் போய்க் கொண்டிருந்தது. அதில் கலந்து கொண்ட மக்கள் இடைஇடையே பெருங்கூச்சல் போட்டனர்.

பூரணிக்கு அந்த ஊர்வலத்தை அருகே சென்று காண ஆவல்! மெதுவாகக் குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கீழே இறக்கினாள்!

''வேண்டாம் பூரணி! மணி ஆகிவிட்டது! குதிரையை இறக்காதே! சென்னைக்குச் சீக்கிரமாகப் போ!'' என்றாள் கனியரசி!

''கொஞ்சம் பொறு, கனியரசி!'' என்ற பூரணி குதிரையை ஊர்வலம் அருகில் கொண்டு சென்றாள்! இப்போது அவர்கள் போட்ட கூச்சல் நன்றாகக் கேட்டது!

''காந்தியம் வாழ்க! வள்ளுவம் வாழ்க! பாரதியம் வாழ்க!'' என்று அவர்கள் உரத்த குரலில் முழங்கியபடி ஊர்வலம் வந்து கொண்டிருந்தனர்.

''மக்களே! இனி உலகில் எப்போதும் அணுகுண்டுப் பயம் இருக்காது! தாங்கள் தயாரித்து வைத்திருந்த அணுகுண்டுகளையெல்லாம் உலக



சமாதானம் கருதி அழித்து விட்டதாக அணுகுண்டு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நாடுகள் அறிவித்து விட்டன. நாம் சமீபத்தில் பாரதி நூற்றுண்டையொட்டி, காந்தியையும் வள்ளுவரையும் பாரதியையும் இணைத்து நடத்திய கருத்தரங்கத்தின் எதிரொலிதான் இந்த மாற்றம்! அந்தக் கருத்தரங்கில் பல தலைவர்கள் அணுகுண்டு உற்பத்தியைப் பற்றிக்கடுமையாகச்சாடியது உங்களுக்குத் தெரியும்! இத்துடன் இவ்வருடம் வரவிருந்த கொடிய குடிநீர்ப் பஞ்சமும் போய் விட்டது. நேற்றிரவு பெய்த மழையால் ஏரி, குளம், குட்டைகள் நிரம்பிவிட்டன! எல்லாம் காந்தி, வள்ளுவன், பாரதி—இவர்களை நாம் போற்றி வருவதால் உண்டான பெருமை!

காந்தி வாழ்க!
வள்ளுவன் வாழ்க!
பாரதி வாழ்க!

என்று கதராடை அணிந்திருந்த ஒரு தலைவரின் பேச்சில் பூரணி தன்னை மறந்தாள். அவளும் தன்னையறியாமல், ''காந்தி வாழ்க, வள்ளுவன் வாழ்க, பாரதி வாழ்க!'' என்று பலமுறை சொன்னாள்! இந்த மூன்று அரும்பெரும் சான்றோர்கள் காட்டிய வழியில் உலகில் ஒவ்வொருவரும் நடந்தால், உலகம் சுவர்க்கமாக நிச்சயம் மாறும் என்று அவள் மனம் நினைத்தது! அவர்கள் சொற்களெல்லாம் மந்திர சக்தி படைத்தவை என்று யாரோ அவளிடம் என்றோ சொன்னது போலிருந்தது! மறுபடியும் ''காந்தி வாழ்க! வள்ளுவன் வாழ்க! பாரதி வாழ்க!'' என்றாள். அடுத்த விநாடி, கனியரசியின் முதுகில் தட்டியபடி, ''கனியரசி, அந்த மந்திரத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன்!'' என்றாள்.

''என்ன கண்டுபிடித்தாய்?'' என்று கேட்டாள் கனியரசி!

''கா—வா—என்றால் காந்தி வாழ்க!
வ—வா—என்றால் வள்ளுவன் வாழ்க!
பா—வா—என்றால் பாரதி வாழ்க!''

இதுதான் இந்த மந்திரக் கோலை இயக்கும் மந்திரமாக இருக்கவேண்டும்! வா, போகலாம்!'' என்றபடி குதிரையை உற்சாகத்துடன் சென்னையை நோக்கிப் பறக்க விட்டாள்.

மணி ஐந்தே முக்கால்!

பூரணியும், கனியரசியும் துடித்தார்கள்!

மணி 5.50!

இன்னும் சென்னை வரவில்லை!

6.00!

சென்னை வரவில்லை.

பூரணிக்கு மயக்கம் வருவது போல் இருந்தது!

''கனியரசி! எனக்கு மயக்கம் வரும்போல் இருக்கிறது. என்ன செய்யலாம்?'' என்று கனியரசியின் மீது சாய்ந்தாள் பூரணி!

அப்போது பறந்து கொண்டே இருந்த குதிரை திடீரென்று நின்று ஆகாயத்தில் பல குட்டிக்கரணங்கள் போட்டது. பூரணியின் பிடியும் கனியரசியின் பிடியும் தளர்ந்தன.

''ஐயோ, அப்பா! அம்மா! எங்களைக் காப்பாற்றுங்கள்! மந்திரவாதி! எங்களை மன்னித்துக் காப்பாற்று!'' என்று பூரணியும் கனியரசியும் மாறி மாறிக் கத்தினர்! ஆனால், யாரும் அவர்களைக் காப்பாற்ற வரவில்லை! பூரணி 'பொத்' தென்று தரையில் வந்து விழுந்தாள்!

''என்ன பூரணி, என்ன ஆச்சு?'' என்று கேட்டார் பூரணியின் தந்தை!

''அப்பா, எங்கே கனியரசி? மாயக் குதிரை, மந்திரக் கோல் எல்லாம் எங்கே?'' என்று பூரணி சுற்றுமுற்றும் பார்த்தாள்!

''பூரணி! மாயக் குதிரையாவது! மந்திரக் கோலாவது? ஏதோ கனவு தான் கண்டிருக்கிறாய்! படுக்கையைப் போட்டுக் கொண்டு படுக்காமல் சோபாவிலேயே படுத்துத் தூங்கிப் போய் விட்டாயே! கனவில் உருண்டு கீழே விழுந்திருக்கிறாய்! போய்ப் பாலைக் குடித்து விட்டுப் படுக்கப் போ!'' என்றாள் பூரணியின் தாய்.

பூரணி கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்! ஆமாம், எல்லாமே கனவுதான்! கொலுப் படிக்கட்டுக்கருகே சென்று அந்த மந்திர வாதிப் பொம்மையைப் பார்த்தாள்! அது அவளையே பார்த்தபடி சிரிப்பது போலிருந்தது!

ஆங்கிலம் அறியாத வக்கீல்!

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டு வந்த போது, ஆங்கிலம் அறியாதவர்களில் பலர் வக்கீல்களாக இருந்தார்கள்! ஆம், அக்காலத்தில் 'முக்தியார்' என்ற பெயரில் ஒரு பரீட்சை நடத்துவார்கள். ஆங்கிலம் தெரியாதவர்கள் அப்பரீட்சையை எழுதித் தேறினால், வக்கீலாகத் தொழில் நடத்தலாம். ஆனால், அவர்களை சமஸ்தானங்களில் இருந்த நீதிமன்றங்கள் மட்டுமே வக்கீல்களாக ஏற்றுக் கொண்டன.





காமராஜர் நடனமாடினார்!

பெருந்தலைவர் காமராஜர் ரஷ்யா சென்றிருந்தபோது வால்காகிராட் நகரத்திலுள்ள ஒரு நர்சரிப் பள்ளியைச் சென்று பார்த்தார்.

அப்போது அங்கிருந்த குழந்தைகள் அவரை வரவேற்றுப் பாட்டுப் பாடினார்கள்: நடனம் ஆடினார்கள்: பூச்செண்டுகள் தந்தார்கள். குழந்தைகளுக்காகச் செய்யப்பட்டிருந்த வசதிகளையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டார் காமராஜர். கடைசியில், அந்தக் குழந்தைகளுடன் கரம் கோத்து நடனம் ஆடினார்! அந்த நடனத்தின் போது, குழந்தைகளைவிட அதிக உற்சாகமாக இருந்தவர் காமராஜர்தான்!

—ஆர். வேங்கடராமன் எழுதிய 'சோஷலிஸ நாடுகளில் மக்கள் தலைவர்' என்ற புத்தகத்திலிருந்து



குப்புசாமி அப்புசாமி

அழ. வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
கொள்ளைக் காரர்கள்
சுப்பு வீட்டிற் குள்ளே சென்று
திருடி னார்களாம்!

குப்புசாமி:

எப்போ தவர்கள் திருடி னார்கள்?
இழந்த பொருள்களைத்
துப்புத் துலக்கிக் கண்டு பிடிப்பேன்.
சும்மா விடுவதா?

அப்புசாமி:

சுப்பு வீட்டில் நேற்று இரவு
தொலைந்த பொருள்களை
ஒப்ப டைக்க வழிநீ செய்தால்
உலகம் போற்றுமே!

குப்புசாமி:

தெப்பக் குளத்துக் காவல் நிலையம்
சென்று நானுமே
சப்-இன்ஸ் பெக்ட ரிடத்தில் பேசித்
தகவல் அறிவிறேன்.

அப்புசாமி:

அப்பு நம்நீ என்ன செய்வாய்?
அதையும் கூறிடு.
சுப்பு விடத்தில் உடனே சென்று
சொல்வேன் அல்லவா?

குப்புசாமி:

அப்பம் விற்கும் பைய னைப்போல்
வேஷம் போடுவேன்.
அந்தி பட்டுக் காட்டின் அருகே
நடந்து செல்லுவேன்.

அப்புசாமி:

அப்பம் வாங்கத் திருட ரெல்லாம்
அருகில் வந்ததும்,
'கப்'பென் றுடனே பிடித்தே நீயும்
கைது செய்வாயோ?

குப்புசாமி:

அப்பப் பா, என் திட்ட மெல்லாம்
அறிந்து வைத்துள்ள
அப்பு சாமி சாரைப் போல
அறிஞர் இல்லையே!

அப்புசாமி:


அப்பம் வாங்கித் தின்போ ரெல்லாம்
ஐயோ! திருடரா?
'சுப்பு வீட்டில் கொள்ளை யடித்தார்'
என்று சொல்வதா?

குப்புசாமி:

துப்புத் துலக்கும் எனக்கு நீங்கள்
துணையாய் வாருங்கள்.
அப்பு நம்என் சமர்த்தைக் கண்டு
அதிசயம் கொள்வீர்!

அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
கூட நான் வந்தால்,
உப்பிப் போகும் கன்னம், முதுகு!
ஓடு, ஓடுநீ!



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பங்கு கொள்ளும் பகுதி.

பக்கங்கள் எத்தனே?

''ஒரு பந்துக்கு எத்தனே பக்கங்கள்?''

''பந்துக்கு ஏது பக்கங்கள்? அது உருண்டையாக அல்லவா இருக்கிறது?''

''இல்லே. அதற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று உள் பக்கம்; மற்றொன்று வெளிப் பக்கம்.''

—எஸ். ராமு (3674) கடலூர்

கோகுலக் கண்ணன்

கோகுலத்தில் அவன் குடியிருப்பான்.
குழந்தையின்குரலில் குழைந்திருப்பான்.
குறும்புகள் மிகவும் செய்திடுவான்,
கொஞ்சும் மழலே பேசிடுவான்.
புல்லாங்குழல் அவன் இசைத்திடுவான்,
புல்லரிக்க நம்மைச் செய்திடுவான்.
கனிவொடு நம்மை அழைத்திடுவான்,
காலமெல்லாம் நம்மைக் காத்திடுவான்.

—ஹேமா பாலசுப்பிரமணியன்(1019)
மேட்டூர் அணே

மாமா வந்தாங்க;
மாம்பழம் தந்தாங்க;
அத்தை வந்தாங்க;
அதிரசம் தந்தாங்க.

அக்கா வந்தாங்க;
சொக்காய் தந்தாங்க.
அண்ணி வந்தாங்க;
பென்சில் தந்தாங்க.

பாட்டி வந்தாங்க;
ரொட்டி தந்தாங்க.
தாத்தா வந்தாங்க;
முத்தம் தந்தாங்க.

—நெ. அன்பு செழியன் (1727),
பண்ருட்டி.





குற்றாலம்

குற்றாலத்தில் அருவியெல்லாம்
பாட்டுப் பாடுது.
குரங்குக் கூட்டம் அருகினிலே
ஆட்டம் போடுது.
தண்ணீரெல்லாம் சலசலத்து
ஓடி வருகுது.
தாயைப் போல அரவணைக்கத்
தேடி வருகுது.

—சு. செந்தமிழ்ச் செல்வி (68)
சமாதானபுரம்



பேனாவைப் பாதுகாக்க—


❋ பேனாவின் உபயோகம் முடிந்தவுடன் மூடிவிட வேண்டும்.
❋ பேனாவைக் கழுவும்போது, பாகங்களைத் தனித் தனியாகக் கழற்ற வேண்டாம். கூட்டில் மட்டும் நீர் விட்டுக் குலுக்கிக் கழுவினால் போதும்.
❋ ஆத்திரம் வரும்போதோ, பதில் தெரியாதபோதோ தாளில் பேனாவின் நிப்பை அழுத்தி எழுத வேண்டாம். நிப்பு வளைந்தோ, உடைந்தோ பிரிந்தோ விடக் கூடும்.
❋ பேனாவை இரவல் கொடுக்க வேண்டாம். ஒருவேளை தபால் நிலையத்திலோ, ரயில் நிலையத்திலோ யாரேனும் எழுதுவதற்காகப் பேனாவைக் கேட்டுக் கொடுக்க வேண்டியது வந்தால், மூடியைக் கழற்றி வைத்துக் கொண்டு அடிப் பாகத்தைக் கொடுப்பது நல்லது.
❋ கசியும் பேனாவாக இருந்தால், சட்டைப் பையிலோ, புத்தகங்களுடனோ வைக்காமல், பிளாஸ்டிக் உறைக்குள் போட்டுப் புத்தகப் பைக்குள் வைத்துக்கொள்வதே நல்லது.
❋ நெருக்கடியுள்ள இடங்களில் சட்டைப் பையில் பேனாவைச் செருகிக் கொள்ளாமல், வேறு வகையில் பத்திரப் படுத்தலாம்.

—ஆர். நாச்சியப்பன் (75)
திருச்சி-17

உதறிய மையில்

நீங்கள் சில சமயங்களில் பேனாவை உதறுகிறீர்கள் அல்லவா? அப்படி உதறும்போது, வெள்ளைத் தாளிலோ கலர் தாளிலோ உதறுங்கள். கலர் மையிட்ட பேனாவையும் உதறலாம். தாளில் விழுந்த மையை (நீங்கள் விரும்பியபடி) தாளை மடித்து, விரித்தால் ஆச்சரியமான சில உருவங்கள் கிடைக்கும்!

நான் கண்ட சில உருவங்கள்:



—ஆர். யஷ்வந்த் (1603) சென்னை-6



கையும் காலும்

ஒருவர் சிறைச்சாலையைப் பார்க்க வந்தார். அங்கிருந்த ஒரு குட்டையான ஒரு கைதியைப் பார்த்துக் கேட்டார்:

''ஆள் பார்க்க நன்றாக இருக்கிறியே! உன்னை எப்படிப் பிடித்துப் போட்டாங்க?''

''என் கால்கள் குட்டையாய் இருந்ததனாலே, என்னாலே வேகமாக ஓட முடியல்லே. துரத்திப் பிடிச்சிட்டாங்க.''

''அது சரி! எதுக்காக உன்னைத் துரத்திப் பிடிச்சாங்க?''

''என் கை கொஞ்சம் நீண்டதனாலே!''

—ஜி. நடராஜன் (126), மதுரை 1

திருப்பிப் போடுக!

ஓர் எண். அதைத் திருப்பிப் போட்டால் அதன் மதிப்பு 50 சதவிகிதம் கூடிவிடும். அந்த எண் எது? 'டக்' கென்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

விடை: 6.

—மு. கா. நெடுமாறன் (660)
காவேரிப்பட்டணம்




நீந்த முடியாத ஆறு!

''எங்கள் ஊர் ஆற்றை யாருமே நீந்திக் கடக்க முடியாது.''

''ஏன், அவ்வளவு வெள்ளம் ஓடுமா?''

''இல்லை, இல்லை. நடந்துதான் கடக்க வேண்டும். அதில்தான் சொட்டுத் தண்ணீர் இல்லையே!''

—குரு வித்யாசங்கர் (2225)
அண்ணாமலைநகர்



ஊரும் பொருளும்

சில ஊர்களின் பெயர்களைக் கேட்டதுமே, அங்கு கிடைக்கும் சில விசேஷமான பொருள்கள் நினைவுக்கு வரும். கீழே சில ஊர்களையும், அப்படிப்பட்ட பொருள்களையும் தந்திருக்கிறேன்:

திருப்பதி — லட்டு
திருநெல்வேலி — அல்வா
பண்ருட்டி — பலாப்பழம்
ஆத்தூர் — கிச்சடிச் சம்பா
ஆலப்புழை — பால் பாயசம்
சிவகாசி — பட்டாசு
சேலம் — மல்கோவா
கும்பகோணம் — வெற்றிலை
கோலார் — தங்கம்


—நவீனா நந்தகோபால் (1657),
ஈரோடு-3


சிறு சேமிப்பு

சிறுவர், சிறுமியர் வந்திடுவீர்.
சிறு சேமிப்பில் சேர்ந்திடுவீர்
பெரியோர் தந்திடும் காசையெலாம்
பேணியே சேமித்து வைத்திடுவீர்.

சிறுசேமிப்பில் சேர்வதனால்
சீரிய நன்மைகள் பெற்றிடலாம்.
அருமையாய் நாட்டிற்கு உதவிடலாம்
அனைவரும்நலமுடன் வாழ்ந்திடலாம்.

—க. நந்தினி (3016)
இராணிப்பேட்டை





லாரியிலிருந்த மிருகங்கள்

இதோ இந்த லாரி நான்கு மிருகங்களை ஏற்றிக் கொண்டு வந்தது. வழியிலே அந்த நான்கு மிருகங்களும் கிழே குதித்துத் தப்பி ஓடப் பார்த்தன. அப்படித் தப்பி ஓட அவைகளை விடலாமா? அவற்றைப் பிடித்து வந்து கட்டத்திற்குள் போடுங்கள்.

விடை: பூனை, கரடி, நரி, ஒட்டகச் சிவிங்கி.

—ஆர். கணேஷ் (119) கோவை 2

மேகம், பசு, ரத்தினம்


அதிமதுர கவி கடை வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு பலசரக்குக் கடையில் காளமேகப் புலவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். அவரது அறிவைச் சோதிக்க நினைத்தார். உடனே, தம் மாணவன் ஒருவனை அனுப்பி, அந்தக் கடையில் 'மேகம், பசு, ரத்தினம்' வாங்கிவருமாறு சொன்னார். மாணவன் கடைக்குச் சென்று அவ்வாறே கேட்டான். கடைக்காரருக்கு எதுவும் விளங்கவில்லை. உடனே அருகிலிருந்த காளமேகம், "ஐயா, அவன் கேட்கும் பொருள் 'காராமணி' ஆகும். 'மேகம்' என்பது 'கார்'; 'பசு' என்பது 'ஆ'; 'ரத்தினம்' என்பது 'மணி'" என்று விளக்கிக் கூறினார்.

ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran


லால்பகதூர் சாஸ்திரி
பிறந்தநாள்
அக்டோபர்-2

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka